**மானியக் கோரிக்கை எண். 34**

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

**2016–2017**

## 1. முன்னுரை

தமிழ்நாடு, அதிவேகமான தொழில் வளர்ச்சி மற்றும் நகர மயமாதலில் வளர்ந்து வரும் மாநிலங்களில் ஒன்றாகும். மாநிலத்தின் தற்போதைய மக்கள் தொகையில் 48.45 விழுக்காடு மக்கள் நகர்ப்புரங்களில் வசித்து வருகின்றனர். அடுத்து வரும் 10 ஆண்டுகளிலும், தமிழ்நாடு இந்தியாவிலேயே நகர்ப்புர வளர்ச்சியில் ஒரு முன்னோடி மாநிலமாகத் தொடர்ந்து விளங்கும். இந்தியாவிலேயே அதிக அளவாக தமிழ்நாட்டின் நகர்ப்புர மக்கள் தொகை 2030ஆம் ஆண்டில் 67 விழுக்காடாக உயரும் என கணக்கிடப்பட்டுள்ளது. பெருகிவரும் நகர்ப்புர மக்கள் தொகைக்கேற்ப அதிகரித்து வரும் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை அளிப்பதற்குத் தேவையான கொள்கை முடிவுகள் மேற்கொள்வது மற்றும் மேலாண்மை உத்திகளை கையாளுவது பெரும் சவாலாக உள்ளது. இச்சவால்களை எதிர்கொள்ள, சேவைகள் திறன் மேம்பாடு,

உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்குத் தேவையான நிதி ஆதாரங்களை திரட்டுதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு உகந்த தொழில்நுட்ப உத்திகளை கடைப்பிடித்தல் ஆகியவை தீர்வாக அமைந்துள்ளன.

மாநிலத்தில் உள்ள நகர்ப்புர பகுதிகளை மேம்படுத்துவதும், மாநிலம் முழுவதும் உள்ள பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கலை உறுதி செய்வதும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பொறுப்பாகும். இத்துறையின்கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்ககம் ஆகியவை இத்துறையின் அங்கங்களாக செயல்படுவதுடன் திட்டமிடுதல், நிதி வழங்குதல் , தரமான சேவை வழங்குவதை குறிக்கோளாகக் கொண்ட திட்டங்களை செயல்படுத்தி கண்காணித்தல் இந்த அலுவலகங்களின் பொறுப்பாகும்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவை குடிநீர்த் திட்டம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பிலுள்ளன. திருப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குடிநீர் மற்றும் தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையினை நிறைவு

செய்யும் பொறுப்பில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் ஈடுபட்டுள்ளது.

தமிழ்நாட்டினை இந்திய மாநிலங்களிலேயே சிறந்த ஆளுகை கொண்ட "**முதன்மை மாநிலமாக**" திகழச் செய்வதே **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** தொலை நோக்காகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட "**தொலைநோக்குத் திட்டம்–2023 ஆவணம்**", தமிழகத்தின் **10** நகரங்களை உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்த வலியுறுத்துகிறது. மாநிலத்திலுள்ள அனைத்து பிற பகுதிகளும், சமச்சீர் உட்கட்டமைப்பு மேம்பாட்டின் மூலம் பொருளாதார வளர்ச்சியினைப் பெற இந்நகரங்கள் ஒரு முன் மாதிரியாக அமையும். மேலும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும், உரிய அழுத்தத்துடன் குழாய்கள் மூலம் பாதுகாக்கப்பட்ட **குடிநீர் 24x7 வழங்குதலை உறுதி செய்வதும்,** அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான சுகாதார வசதி கிடைக்கச் செய்வதோடு **திறந்த வெளியில் மனிதக்கழிவு கழிக்கும் நிலை இல்லாத மற்றும் குப்பை கூளங்கள் இல்லாத சூழலில்,** வாழ்வதை உறுதி செய்வதே **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** தொலை நோக்கு பார்வையாகும்.

## I. மக்கள் தொகை

நகர மக்கள் தொகையின் நிலையை கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

| வ.எண். | இனம் | எண்ணிக்கை | பரப்பளவு (சதுர கி. மீட்டரில்) | பரப்பளவு % | மக்கள் தொகை (இலட்சத்தில்) | மக்கள் தொகை % |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி | 1 | 426 | 4.01 | 67.27 | 21.34 |
| 2 | இதர மாநகராட்சிகள் | 11 | 1278.31 | 12.05 | 80.66 | 25.59 |
| 3 | நகராட்சிகள் | 124 | 2516.05 | 23.72 | 86.39 | 27.41 |
| 4 | பேரூராட்சிகள் | 528 | 6388.20 | 60.21 | 80.90 | 25.66 |
| | **மொத்தம்** | **664** | **10608.56** | **100** | **315.22** | **100** |

## II. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்

நகர்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் விவரங்களை கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

| வ. எண். | இனம் | மேயர்/ தலைவர் | மன்ற உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி | 1 | 200 |
| 2 | இதர மாநகராட்சிகள் | 11 | 719 |
| 3 | நகராட்சிகள் | 124 | 3613 |
| 4 | பேரூராட்சிகள் | 528 | 8288 |
| | **மொத்தம்** | **664** | **12820** |

## III. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலை

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் **2015–16** ஆண்டில் நிதி நிலையினை கீழ்க்கண்ட பட்டியல் எடுத்துக்காட்டுகிறது.

(கோடியில்)

| வ. எண் | ஆதாரம் | பெருநகர சென்னை மாநகராட்சி | இதர மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சொந்த வருவாய் | 1031.15 | 954.60 | 1186.00 | 490.97 | 3662.72 |
| 2 | மாநில நிதிக் குழு மானியம் | 408.53 | 654.15 | 865.16 | 827.62 | 2755.46 |
| 3 | 14வது மத்திய நிதிக்குழு மானியம் | 117.48 | 185.32 | 245.11 | 229.11 | 777.02 |
| 4 | மத்திய / மாநில திட்டங்களுக்கான மானியம் | 709.02 | 341.96 | 402.09 | 591.95 | 2045.02 |
| 5 | கடன்கள் | 159.78 | 174.28 | 181.08 | --- | 515.14 |
| | **மொத்தம்** | **2425.96** | **2310.31** | **2879.44** | **2139.65** | **9755.36** |

நகர்ப்புர மேம்பாட்டிற்கான தமிழ்நாடு மூன்றாவது வளர்ச்சித் திட்டம் முடிவுற்றதையடுத்து, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை தொடர்ந்து மேம்படுத்துதல் மற்றும் சிறந்த நகர்ப்புர மேலாண்மை நடைமுறைகளை செயலாக்குதல் ஆகியவற்றை நோக்கங்களாக கொண்ட `**3,831** கோடி மதிப்பீட்டிலான தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்பட தொடங்கியுள்ளது.

ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனமான Kfw நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி தமிழ்நாடு நிலை–II, பகுதி-1 மற்றும் பகுதி–**2** திட்டங்கள் முறையே `**578.16** கோடி மற்றும் `**877.39** கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல், பாதாள சாக்கடைத் திட்டம், தெரு விளக்குகள், சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை மேம்படுத்துவதற்காகவும், அவை சுய சார்புடைய அமைப்புகளாக செயல்படுவதற்காகவும், மாநிலத்தின் சொந்த வரி வருவாயிலிருந்து அவற்றிற்கு மானியமாக நிதி பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

**2015 – 16** ஆம் நிதியாண்டில் **`3316.22** கோடி மதிப்பீட்டிலான **13** திட்டங்களுக்கு அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்தின்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும் **2015 – 16**ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் கோயம்பத்துார் மாநகராட்சிகள் சீர்மிகுநகரங்களாக மத்திய அரசினால் தேர்வுசெய்யப்பட்டது. இந்த சீர்மிகு நகரங்களின் வளர்ச்சிக்காக **`2936.25** கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## IV அம்மா உணவகம்

**மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,** ஏழை எளிய மக்கள், தினக்கூலிகள், ஆட்டோ ஓட்டுநர்கள் போன்றவர்கள் மலிவு விலையில் சுகாதாரமான மற்றும் தரமான உணவுகளை வயிறார உண்ணும் வகையில் வழங்குவதற்காக **அம்மா உணவகங்கள்** துவங்க உத்தரவிட்டார்கள். இதன் அடிப்படையில், சென்னை மாநகராட்சி பகுதிகளில் **293** அம்மா உணவகங்களும், சென்னை மாநகரிலுள்ள அரசு மருத்துவமனைகளில் **7** அம்மா உணவகங்களும் மொத்தம் **300** அம்மா உணவகங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மதுரை அரசு

ராஜாஜி மருத்துவமனையில் ஒரு அம்மா உணவகத்தை 11.02.2014 அன்று துவக்கி வைத்தார். மற்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 247 அம்மா உணவகங்கள் இயங்கி வருகிறது. ஆக மாநிலத்தில் மொத்தம் 547 அம்மா உணவகங்களில் ஒரு இட்லி ஒரு ரூபாய்க்கும், பொங்கல் ஐந்து ரூபாய்க்கும், பலவகை சாதங்கள் ஐந்து ரூபாய்க்கும் தயிர் சாதம் மூன்று ரூபாய்க்கும் மலிவு விலையில் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## V. நகர்ப்புர சுகாதாரம்

நகர்ப்புரங்களில் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும், திடக்கழிவு மேலாண்மையை சிறப்பாக செயல்படுத்து வதற்காகவும் தூய்மை இந்தியா திட்டம் மத்திய, மாநில அரசின் நிதியுதவியுடன் 2014ஆம் ஆண்டு அக்டோபர் 2–ம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 82,356 தனிநபர் குடியிருப்பு கழிப்பறைகள் மற்றும் 8010 பொதுக் கழிப்பறை இருக்கைகள் கட்டப்பட்டுள்ளது. மேலும், 475 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 78 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## VI நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம்

**மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** ஆட்சிக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட உறுதியான முடிவுகளாலும், புதுமையான பல நடவடிக்கைகளாலும் நகரமயமாதலில் ஏற்படும் பிரச்சனைகளை உரிய முறையில் தீர்ப்பதற்கு தேவையான வழி வகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. **மழைநீர் சேகரிப்பு** எனும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சீரிய திட்டத்தினை 2001–ஆம் ஆண்டிலேயே **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** அறிவித்தார்கள். அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை நிறுவுவதைக் கட்டாயமாக்கும் வகையில் சட்டதிருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மழைநீர் சேகரிப்பின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்திட பெரிய அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மழை நீர் சேகரிப்பு இயக்கத்தின் பொருத்தமான தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2015–16 ஆம் ஆண்டில் நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கத்தினை (Sustainable Water Security Mission) அறிவித்தார்கள். பெரிய குடியிருப்பு / அரசு வளாகங்களில் மழைநீர் சேகரித்தல், வெள்ள நீரினை சேகரித்தல், பொதுமக்கள் உதவியுடன் நீர்நிலையினைப் புணரமைத்தல் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரை

(Grey Water) மறு சுழற்சி செய்து மீண்டும் உபயோகப்படுத்துதல் ஆகியவை இந்த இயக்கத்தின் குறிக்கோளாகும். இந்த இயக்கத்தின் கீழ் சென்னை பெருநகர் பகுதியில் மாதிரிப் பணிகள் (Pilot Project) வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான முற்போக்கான திட்டங்களை செயல்படுத்துதல், மேம்படுத்தப்பட்ட நகர ஆளுமை, நகர்ப்புர சேவைகள் வழங்குதல் தமிழகத்தின் அனைத்து மாநகரங்கள் மற்றும் நகரங்களை சுத்தமாக, சுகாதாரமாக வாழ்வதற்கு ஏற்ற நகரங்களாக மாற்றுதல் போன்றவற்றை முழு முயற்சியுடன் செயல்படுத்தி வருகின்றது. இவற்றை செய்வதன் மூலம் **“இந்தியாவிலேயே, தமிழ்நாட்டினை வறுமையற்ற, மிகவும் செழுமையான மாநிலமாக வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கும், மக்கள் அனைத்து அடிப்படை வசதிகளையும் அனுபவிக்கும் நவீன சமுதாயத்தினை உருவாக்கவும், இணக்கமான சுற்றுச்சூழலுடன் உலகின் பிற பகுதிகளுடன் இணைந்து, மனமகிழ்வுடன் மக்கள் வாழக்கூடிய மாநிலமாக தமிழகத்தை மாற்ற வேண்டும்”** என்ற **மாண்புமிகு தமிழக**

**முதலமைச்சர்** அவர்களின் தொலைநோக்குத் திட்டத்தினை தெளிவான உண்மையாக்க இத்துறை அயராது பாடுபடும்.

## 2. நகராட்சி நிர்வாக ஆணையரகம்

நகராட்சி நிர்வாக ஆணையரகம், மாநிலத்தில் உள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் மற்றும் மேற்பார்வையிடும் துறைத் தலைமையாக செயல்படுகிறது. நகராட்சி நிர்வாக ஆணையரகம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை தலைவராகவும் மற்றும் இணை ஆணையர்கள், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர் மற்றும் ஏழு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களை (மண்டலத்திற்கு தலா ஒருவர் என செங்கல்பட்டு, வேலூர், சேலம், திருப்பூர், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மண்டலங்கள்) கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் 11 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் 124 நகராட்சிகள், நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் உள்ள நகராட்சிகள் ஆண்டு

வருமானத்தின் அடிப்படையில் கீழ்காணுமாறு தரம் பிரிக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **தரம்** | **ஆண்டு வருமானம் ( ` கோடியில்)** | **நகராட்சிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | சிறப்பு நிலை | 10.00 க்கு மேல் | 18 |
| 2 | தேர்வு நிலை | 6.00 – 10.00 | 28 |
| 3 | முதல் நிலை | 4.00 – 6.00 | 34 |
| 4 | இரண்டாம் நிலை | 4.00க்கு கீழ் | 44 |
| | | **மொத்தம்** | **124** |

**மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்**

இந்திய அரசியலமைப்பு சட்டம் 74–வது திருத்தத்தின்படி, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு 17 மற்றும் 19 அக்டோபர் 2011ல் தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில் மாநகராட்சி மேயர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மேயர்கள், நகர்மன்ற தலைவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் 2011 ஆம் ஆண்டு அக்டோபர் 25ஆம் நாளன்று பொறுப்பேற்றனர்.

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் காலியாக இருந்த பதவியிடங்களுக்கு 18.09.2014 அன்று இடைத்தேர்தல்

நடத்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மேயர்கள், நகரமன்ற தலைவர்கள் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் **2014** ம் ஆண்டு செப்டம்பர் **24** ஆம் நாளன்று பொறுப்பேற்றனர்.

பிரிவு வாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மேயர்கள், நகர்மன்ற தலைவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு :-

| நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பொது) | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பெண்கள்) | பழங்குடி இனத்தினர் (பெண்கள்) | பெண்கள் (பொது) | பொது | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **மாநகராட்சிகள்(சென்னை மாநகராட்சி உள்பட)** | | | | | | |
| மேயர்கள் | -- | 1 | -- | 4 | 7 | 12 |
| வார்டு உறுப்பினர்கள் | 58 | 34 | -- | 275 | 552 | 919 |
| **நகராட்சிகள்** | | | | | | |
| நகர்மன்றத் தலைவர்கள் | 10 | 6 | 1 | 34 | 73 | 124 |
| வார்டு உறுப்பினர்கள் | 271 | 194 | 4 | 1007 | 2137 | 3613 |

மொத்தமுள்ள **12** மாநகராட்சி மேயர்களில், **7** பெண் மேயர்களும், **124** நகர் மன்றத் தலைவர்களில் **53** பெண் நகர் மன்றத் தலைவர்களும் உள்ளனர்.

## 2.1 உட்கட்டமைப்பு மேம்பாடு

நகர்ப்புர உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய பணியாகும். தரமான, பயனுள்ள உட்கட்டமைப்புகளை உருவாக்க அரசு அதிகபட்ச முன்னுரிமை வழங்குகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகள் மற்றும் உலக வங்கி, ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW), ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) முதலான பன்னாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் பெறப்படும் நிதி ஆதாரத்தைக் கொண்டு நகர்ப்புர உள்ளாட்சிகளின் உட்கட்டமைப்பு பணிகள் செயலாக்கப்படுகின்றன.

## 2.2 ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (IUDM)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் என்ற முன்னோடித் திட்டத்தினை துவக்கியுள்ளார்கள். மேற்படி திட்டத்தின் மூலம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள், பாதாள சாக்கடை, மழைநீர் வடிகால்கள், சுகாதாரம், திடக்கழிவு

மேலாண்மை, பேருந்து நிலைய மேம்பாடு மற்றும் பூங்காக்கள் முதலானவற்றை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த கடந்த ஐந்தாண்டுகளில் `**2428.10** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட **6492** பணிகளில் **5615** பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

**2015–16** ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட இன வாரியான திட்டங்கள் பின்வருமாறு :-

| வ. எண் | இனம் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட தொகை (` கோடியில்) | எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | செயலாக்கத்தில் உள்ள பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | பாதாள சாக்கடை திட்டம் | 16 | 123.00 | 16 | 16 |
| 2 | குடிநீர் வழங்கல் | 10 | 70.19 | 10 | 10 |
| | | **மொத்தம்** | **193.19** | **26** | **26** |

இத்திட்டத்தினை செயல்படுத்த **2016–17** ம் ஆண்டுக்கு `**886.00** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.3 குடிநீர் வழங்கல்

பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதமும், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படாத மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதமும் குடிநீர் வழங்க, மத்திய பொது சுகாதாரப் பொறியியல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு (CPHEEO) குறியீடுகளை நிர்ணயம் செய்துள்ளது. இந்த குறியீடுகளை எய்தும் வகையில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் குடிநீர் திட்டங்களை செயல்படுத்த உறுதி பூண்டுள்ளன.

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடுகள் கீழ்வருமாறு :–

| **அளவீடு** | **தற்போதைய நிலை** | **நகராட்சிகள்** | **மாநகராட்சிகள்** |
|---|---|---|---|
| 90 லிட்டர் மற்றும் அதற்குமேல் | நன்று | 58 | 6 (110 லிட்டர் மற்றும் அதற்குமேல்) |
| 40 முதல் 89 லிட்டர் வரை | திருப்திகரமான நிலை | 66 | 5 (70–109 லிட்டர் வரை) |
| 20 முதல் 39 லிட்டர் வரை | பற்றாக்குறை | 0 | 0 (70 லிட்டருக்கு குறைவானநிலை) |
| 20 லிட்டருக்கும் | மிகவும் | – | – |

| | | | |
|---|---|---|---|
| குறைவானநிலை | பற்றாக்குறை | | |
| | **மொத்தம்** | **124** | **11** |

நகர்ப்புர உள்ளாட்சிகளில் மக்களுக்குத் தேவையான பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்வது அரசின் முக்கிய கொள்கையாகும். அதன் அடிப்படையில் குடிநீர் விநியோகத்தினை மேம்பாடு செய்வதற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி மற்றும் உலக வங்கி போன்ற வெளி நிறுவனங்களின் நிதி உதவியுடனும் மேலும் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் மூலமும் குடிநீர் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவும் மற்றும் சில திட்டங்கள் அரசு சார்பு நிறுவனங்களாகிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் (CMWSSB) மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2011–ஆம் ஆண்டில் தினமும் மொத்தம் 1567.10 மில்லியன் லிட்டர் குடிநீர், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு சராசரியாக 93 லிட்டர் வீதம் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு நகர்ப்புர

வளர்ச்சித்திட்டம்–III, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புணரமைப்புத்திட்டம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி, ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டுத்திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி போன்ற நிதிகளின் கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தியதன் மூலம் குடிநீர் விநியோகம் மேம்படுத்தப்பட்டு, தினமும் மொத்தம் 1862.05 மில்லியன் லிட்டர் குடிநீர், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு சராசரியாக 111.47 லிட்டர் வீதம் வழங்கப்படுகிறது.

**தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித்திட்டம் – 3ன் கீழ்** 17 குடிநீர் பணிகள் `661.65 கோடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 13 பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள 4 குடிநீர் திட்டங்கள் முன்னேற்றத்தில் உள்ளன.

பணிகள் முடிவுற்ற 13 உள்ளாட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு பின்வருமாறு :–

| வ. எண். | உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (`கோடியில்) | தினசரி குடிநீர் விநியோகம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திட்டம் செயல்படுத்துவதற்கு முன் | | திட்டம் முடிவுற்ற பின் | |
| | | | எம்.எல்டி | எல்பிசிடி | எம்.எல்டி | எல்பிசிடி |
| 1 | திருநெல்வேலி (தச்சநல்லூர்) | 5.94 | 36.72 | 77 | 55.00 | 116 |
| 2 | கோபிச்செட்டி | 4.05 | 4.96 | 90 | 7.44 | 135 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பாளையம் | | | | | |
| 3 | பொள்ளாச்சி | 8.64 | 10.2 | 105 | 12.7 | 135 |
| 4 | போடிநாயக்கனூர் | 2.32 | 5.75 | 76 | 6.95 | 90 |
| 5 | சேலம் | 24.84 | 71.00 | 85 | 105.72 | 127 |
| 6 | குறிச்சி | 49.93 | 4.00 | 40 | 7.5 | 70 |
| 7 | குனியமுத்தூர் | | 3.5 | 40 | 8.00 | 75 |
| 8 | கவுண்டம்பாளையம் | 30.38 | 4.56 | 48 | 8.00 | 80 |
| | வடவள்ளி | | 2.3 | 55 | 3.00 | 70 |
| 9 | திருவண்ணாமலை-I | 0.32 | பகிர்மானம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது | | | |
| 10 | சிவகங்கை –II | 0.16 | | | | |
| 11 | துறையூர் | 0.14 | | | | |
| 12 | கிருஷ்ணகிரி | 1.52 | | | | |
| 13 | குழித்துறை–II | 0.99 | | | | |

பணிகள் நடைபெற்றுவரும் 4 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தற்போதைய நிலை பின்வருமாறு :–

| வ. எண். | உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு `கோடியில் | திட்டத்தின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | சேலம் பகுதி – II | 147.12 | பணி முடிவுறும் நிலையில் உள்ளது |
| 2 | பல்லவபுரம் | 99,95 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 3 | பம்மல் | 43.10 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 4 | தேனிஅல்லிநகரம் | 68.83 | பணி முடிவுறும் நிலையில் உள்ளது. |

**நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஆளுமை (JnNURM-UIG)** திட்டத்தின் கீழ் 13 பணிகள் `1193.74 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 9 பணிகள் முடிவுற்றுள்ளன.

பணிகள் முடிவுற்ற 8 உள்ளாட்சிகளில் குடிநீர் விநியோக அளவீடு பின்வருமாறு :–

| வ. எண். | உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (`கோடியில்) | தினசரி குடிநீர் விநியோகம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திட்டம் செயல்படுத்துவதற்கு முன் | | திட்டம் முடிவுற்ற பின் | |
| | | | எம்.எல்டி | எல்பிசிடி | எம்.எல்டி | எல்பிசிடி |
| 1 | மதுரை | 71.23 | 71 .6 | 67 | 118.6 | 110 |
| 2 | | 9.14 | வைகை ஆற்றின் 3 இடங்களில் தடுப்பணை கட்டப்பட்டு நீர் ஆதாரம் மேம்படுத்தப்பட்டது. | | | |
| 3 | கோயம்புத்தூர் | 159.85 | 176.00 | 109 | 216.00 | 135 |
| 4 | தாம்பரம் | 32.62 | 8.77 | 55 | 16.12 | 90 |
| 5 | ஆனையூர் (மதுரையுடன் இணைக்கப் பட்டுள்ளது) | 7.88 | 3.48 | 46 | 4.12 | 90 |
| 6 | திருப்பரங்குன்றம் மற்றும் ஹார்விபட்டி (மதுரையுடன் இணைக்கப் பட்டுள்ளது) | 9.70 | 2.69 | 69 | 3.71 | 90 |
| 7 | திருமங்கலம் | 68.13 | 8.08 | 90 | 11.18 | 135 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | மதுரை விரிவாக்கப்ப குதி | 106.99 | 17.14 | 90 | 27.55 | 135 |
| 9 | கோயம்புத்தூர் விரிவாக்கப் பகுதி | 29.03 | 10.64 | 70 | 36.08 | 135 |

மீதமுள்ள 4 பணிகளின் தற்போதைய நிலை கீழ்வருமாறு :

| வ. எண். | உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (`கோடியில்) | திட்டத்தின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | ஆவடி | 103.84 | பகுதி முடிவுற்று பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 2 | அனகாபுத்துார் | 14.88 | பணி நடைபெற்று வருகிறது |
| 3 | பூவிருந்தவல்லி | 23.87 | ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கையில் உள்ளது |
| 4 | கோயம்புத்துார் (24x7) | 556.57 | ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது |

**சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் (JnNURM-UIDSSMT)** திட்டத்தின் கீழ் 40 பணிகள் `740.47 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டதில், 30 குடிநீர் திட்டப் பணிகள் நிறைவுற்றுள்ளன.

பணிகள் முடிவுற்ற **30** உள்ளாட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு

| **வ. எண்.** | **உள்ளாட்சியின் பெயர்** | **திட்ட மதிப்பீடு (` கோடியில்** | **தினசரி குடிநீர் விநியோகம்** | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | **திட்டம் செயல்படுத்துவதற்கு முன்** | | **திட்டம் முடிவுற்ற பின்** | |
| | | | **எம்.எல்டி** | **எல்பிசிடி** | **எம்.எல்டி** | **எல்பிசிடி** |
| 1 | தேவகோட்டை | **0.30** | உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் மட்டும் | | | |
| 2 | கரூர் | **1.35** | **6.9** | **84** | **8.4** | **110** |
| 3 | வால்பாறை | **2.21** | **0.75** | **42** | **2.51** | **122** |
| 4 | திருப்பத்தூர் | **7.58** | **4.9** | **52** | **5.75** | **72** |
| 5 | ராமநாதபுரம் | **47.70** | **1.25** | **20** | **6.61** | **70** |
| 6 | பரமக்குடி | **58.24** | **6.00** | **62** | **8.47** | **70** |
| 7 | கீழக்கரை | **20.16** | **0.6** | **19** | **2.88** | **70** |
| 8 | சிவகங்கை | **32.80** | **2.8** | **70** | **4.40** | **70** |
| 9 | ராமேஸ்வரம் | **33.76** | **0.75** | **20** | **2.66** | **70** |
| 10 | அரக்கோணம் | **8.45** | **6.00** | **77** | **9.6** | **90** |
| 11 | திருத்தணி | **5.12** | **2.9** | **69** | **7.2** | **90** |
| 12 | அறந்தாங்கி | **3.46** | **3.16** | **85** | **4.16** | **112** |
| 13 | மறைமலை நகர் | **2.54** | **2.68** | **55** | **5.32** | **135** |
| 14 | விக்ரமசிங்கபுரம் | **2.46** | **4.61** | **83** | **7.23** | **90** |
| 15 | நாமக்கல் | **14.32** | **4.24** | **70** | **10.16** | **135** |
| 16 | ஸ்ரீவில்லிபுத்தூர் | **29.49** | **0.35** | **47** | **0.6** | **90** |
| 17 | கூடலூர் (நீலகிரி) | **5.25** | **2.95** | **60** | **5.94** | **135** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 18 | ஈரோடு | 8.00 | குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் மாற்றி அமைக்கும் மேம்பாட்டு பணிகள் | | | |
| 19 | ராசிபுரம் | 8.25 | | | | |
| 20 | தஞ்சாவூர் | 9.04 | | | | |
| 21 | விழுப்புரம் | 9.55 | 5.4 | 57 | 11.25 | 135 |
| 22 | ஒட்டன் சத்திரம் | 6.69 | 1.94 | 54 | 3.24 | 90 |
| 23 | மேட்டூர் | 12.47 | 5.00 | 104 | 7.2 | 135 |
| 24 | ஆத்தூர் | 7.13 | குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் மாற்றி அமைக்கும் மேம்பாட்டு பணி | | | |
| 25 | வந்தவாசி | 10.90 | 2.20 | 70 | 3.44 | 110 |
| 26 | திருச்செங் கோடு | 7.58 | 7.00 | 73 | 10.00 | 103 |
| 27 | காரைக்குடி | 18.58 | 7.98 | 78 | 19.94 | 135 |
| 28 | பல்லடம் | 17.47 | 3.18 | 75 | 5.56 | 121 |
| 29 | சிதம்பரம் | 7.18 | 4.48 | 72 | 5.60 | 90 |
| 30 | தாராபுரம் | 14.74 | 3.50 | 90 | 5.50 | 120 |

மீதமுள்ள **10** திட்டப்பணிகளின் தற்போதைய நிலை கீழ்வருமாறு :–

| **வ. எண்.** | **உள்ளாட்சியின் பெயர்** | **திட்ட மதிப்பீடு (` கோடியில்)** | **திட்டத்தின் தற்போதைய நிலை** |
|---|---|---|---|
| 1 | வெள்ளக்கோயில் | 17.41 | பணி முன்னேற்றத்தில் உள்ளது |
| 2 | காங்கேயம் | 16.07 | |
| 3 | கம்பம் | 18.8 | |
| 4 | கோவில்பட்டி | 81.82 | |
| 5 | காயல்பட்டிணம் | 29.67 | |
| 6 | பெரியகுளம் | 15.54 | |

| | | | |
|---|---|---|---|
| 7 | திருவத்திபுரம் | 13.44 | |
| 8 | திண்டிவனம் | 52.45 | |
| 9 | ஆரணி | 36.26 | |
| 10 | கொடைக்கானல் | 46.31 | |

**ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA)** திட்டத்தின் கீழ் 9 பணிகள் `**663.68** கோடி மதிப்பீட்டில் திருச்சி, திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகள், பழனி, குன்னூர், இடப்பாடி, தேவகோட்டை, மேட்டுப்பாளையம் மற்றும் உடுமலைப்பேட்டை நகராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதில் திருச்சி மாநகராட்சி, தேவக்கோட்டை இடப்பாடி மற்றும் குன்னூர் நகராட்சிகளில் பணிகள் முடிவுற்றுள்ளன.

பணிகள் முடிவுற்ற 4 உள்ளாட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு கீழ்வருமாறு :–

| வ. எண் | உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (` கோடியில்) | தினசரி குடிநீர் விநியோகம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திட்டம் செயல்படுத்துவதற்கு முன் | | திட்டம் முடிவுற்ற பின் | |
| | | | எம்எல்டி | எல்பிசிடி | எம்எல்டி | எல்பி சிடி |
| 1 | திருச்சிராப்பள்ளி | 221.42 | 90 | 98 | 154 | 135 |
| 2 | தேவகோட்டை | 8.32 | 4.06 | 78 | 4.67 | 81 |
| 3 | இடப்பாடி | 18.52 | 3.14 | 61 | 6.3 | 113 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | குன்னூர் | 13.85 | 2.82 | 62 | 3.46 | 76 |

மீதமுள்ள 5 திட்டப்பணிகளின் தற்போதைய நிலை கீழ்வருமாறு :—

| **வ. எண்.** | **உள்ளாட்சியின் பெயர்** | **திட்ட மதிப்பீடு (`கோடியில்)** | **திட்டத்தின் தற்போதைய நிலை** |
|---|---|---|---|
| 1 | பழனி | 21.60 | பகுதி பணி முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணி முன்னேற்றத்தில் உள்ளது |
| 2 | தூத்துக்குடி | 282.44 | பணி முடிவுறும் நிலையில் உள்ளது |
| 3 | திண்டுக்கல் | 70.5 | பணி முன்னேற்றத்தில் உள்ளது |
| 4 | மேட்டுப் பாளையம் | 9.16 | பணி முன்னேற்றத்தில் உள்ளது |
| 5. | உடுமலைப் பேட்டை | 17.87 | பணி முடிவுறும் நிலையில் உள்ளது |

**ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW)** நிதியின் கீழ் 13 பணிகள் `777.69 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டதில் 4 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்ற 4 உள்ளாட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு கீழ்வருமாறு :—

| **வ. எண்** | **உள்ளாட்சி களின் பெயர்** | **திட்ட மதிப்பீடு (` கோடியில்)** | **தினசரி குடிநீர் விநியோகம்** | |
|---|---|---|---|---|
| | | | **திட்டம் செயல்படுத்து** | **திட்டம் முடிவுற்ற பின்** |

| | | | வதற்கு முன் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | எம்எல்டி | எல்பிசிடி | எம்எல்டி | எல்பிசிடி |
| 1 | திருநெல்வேலி | 22.22 | 40.32 | 84 | 47.90 | 101 |
| 2 | கடையநல்லூர் | 21.41 | 4.06 | 78 | 4.67 | 81 |
| 3 | திருவண்ணாமலை | 36.66 | 18.30 | 100 | 20.50 | 126 |
| 4 | பள்ளிப்பாளையம் | 11.66 | 2.59 | 63 | 3.22 | 91 |

மீதமுள்ள 9 பணிகளின் தற்போதைய நிலை கீழ்வருமாறு :–

| வ. எண். | உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (` கோடியில்) | திட்டத்தின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | கரூர் | 24.67 | பணி முடிவுறும் நிலையில் உள்ளது |
| 2 | தாந்தோனி | 25.16 | பணி முடிவுறும் நிலையில் உள்ளது |
| 3 | இனாம் கரூர் | 18.57 | பணி முடிவுறும் நிலையில் உள்ளது |
| 4 | உதகமண்டலம் | 27.20 | பகுதி பணி முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது |
| 5 | திருநெல்வேலி | 230.00 | ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது |
| 6 | கடலூர் | 148.09 | பணி முன்னேற்றத்தில் உள்ளது |
| 7 | திருச்சிராப்பள்ளி | 63.70 | பணி முன்னேற்றத்தில் உள்ளது |
| 8 | குன்னூர் | 40.19 | ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது |
| 9 | கோயம்புத்தூர் விரிவாக்கப் பகுதி | 108.16 | |

ஒகேனக்கல் காவேரி கூட்டுக் குடிநீர் மற்றும் புளூரைடு பாதிப்பு குறைப்பு `**1928.80** கோடி மதிப்பீட்டில் முடிவுற்றுள்ளது.

இத்திட்டத்தில் கிருஷ்ணகிரி, தருமபுரி, மற்றும் ஒசூர் நகராட்சிகள் பயனடைந்துள்ளன. திட்ட மதிப்பீட்டு தொகையில் நகராட்சிகளின் விகிதாசார தொகை `399.69 கோடியாகும்.

பணிகள் முடிவுற்ற 3 நகராட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு பின்வருமாறு :–

| வ. எண். | உள்ளாட்சி களின் பெயர் | திட்ட மதிப்பீடு ( ` கோடியில் | தினசரி குடிநீர் விநியோகம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திட்டம் செயல்படுத்து வதற்கு முன் | | முடிவுற்ற பின் | |
| | | | எம்எல்டி | எல்பிசிடி | எம்எல்டி | எல்பிசிடி |
| 1 | தருமபுரி | 132.55 | 5.50 | 80 | 14.26 | 135 |
| 2 | கிருஷ்ணகிரி | 93.59 | 4 | 56 | 8 | 112 |
| 3 | ஒசூர் | 149.32 | 6.50 | 27 | 15.50 | 63 |

ஆத்தூர் நரசிங்கபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் `270.00 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிவடைந்துள்ளது. இத்திட்டம் முடிவடைந்ததன் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் கீழ்கண்டவாறு மேம்பட்டு உள்ளது.

| உள்ளாட்சி களின் பெயர் | தினசரி குடிநீர் விநியோக திட்டம் | |
|---|---|---|
| | திட்டம் செயல்படுத்துவதற்கு முன் | திட்டம் முடிவுற்றதற்கு பின் |

| | எம்எல்டி | எல்பிசிடி | எம்எல்டி | எல்பிசிடி |
|---|---|---|---|---|
| ஆத்தூர் | 3.30 | 52 | 6.20 | 100 |
| நரசிங்கபுரம் | 1.30 | 56 | 1.90 | 82 |

வேலூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் `1044.90 கோடி மதிப்பீட்டில், வேலூர் மாநகராட்சி மற்றும் 11 நகராட்சிகளில் கூட்டுக்குடிநீர் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, தற்போது பணிகள் முடிக்கப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ஹட்கோ நிதி, ஜெர்மன் வங்கி திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் பங்களிப்பு தொகை `104.5 கோடி மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பணிகள் முடிவுற்ற 1 மாநகராட்சி மற்றும் 11 நகராட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு பின்வருமாறு :–

| வ. எண் | உள்ளாட்சி களின் பெயர் | திட்ட மதிப்பீடு (`கோடியில்) | தினசரி குடிநீர் விநியோகம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திட்டம் செயல்படுத்து வதற்கு முன் | | திட்டம் முடிவுற்ற பின் | |
| | | | எம்எல்டி | எல்பிசிடி | எம்எல்டி | எல்பிசிடி |
| 1 | வேலூர் மாநகராட்சி | 529.56 | 18.5 | 37 | 57.73 | 111 |
| 2 | ஆம்பூர் | 95.25 | 4.4 | 39 | 11.16 | 97 |
| 3 | ஆற்காடு | 47.71 | 4.2 | 77 | 5.42 | 97 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | இராணிப்பேட்டை | 30.22 | 3.5 | 69 | 4.78 | 94 |
| 5 | குடியாத்தம் | 86.40 | 7.3 | 80 | 9.62 | 105 |
| 6 | ஜோலார் பேட்டை | 16.44 | 2.58 | 68 | 2.75 | 93 |
| 7 | வாலாஜா பேட்டை | 6.84 | 2.22 | 69 | 2.80 | 87 |
| 8 | அரக்கோணம் | 87.42 | 6.00 | 76 | 7.30 | 92 |
| 9 | திருப்பத்தூர் | 36.94 | 7.03 | 90 | 7.14 | 91 |
| 10 | பேரணாம்பட்டு | 34.01 | 1.95 | 38 | 4.52 | 88 |
| 11 | மேல்விஷாரம் | 26.83 | 3.02 | 67 | 4.00 | 90 |
| 12 | வாணியம்பாடி | 47.26 | 6.7 | 70 | 8.3 | 87 |

- மேலூர் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் `**23.80** கோடி மதிப்பீட்டில் மேலூர் நகராட்சியில் குடிநீர் பணிகள் செயல்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவை தவிர **6** மாநகராட்சிகள் மற்றும் **10** நகராட்சிகளில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள ` **3236.59** கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உலக வங்கி, ஜெர்மன் வங்கி திட்டத்திலும் மற்றும் அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான (AMRUT) திட்டத்திலும், நிதி ஆதாரம் முடிவு செய்ய நடவடிக்கையில்

உள்ளது. நிதி ஆதாரம் முடிவு செய்யப்பட்டவுடன் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### 2.3.1 திறனான குடிநீர் மேலாண்மை அமைப்பு

அரசு, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குடிநீர் விநியோக கட்டமைப்புகளை மேம்பாடு செய்ய முன்னுரிமை வழங்கியுள்ளது. இதற்கென கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன :-

- நீருந்து கட்டமைப்பின் திறனை மேம்படுத்த தற்போதுள்ள திறனற்ற மோட்டார்கள் மற்றும் நீருந்து குழாய்களுக்குப் பதிலாக புதிய மோட்டார்கள் மற்றும் குழாய்கள் அமைத்தல்.
- சீரான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்ய தற்போதுள்ள பகிர்மான கட்டமைப்பினை புனரமைத்தல்.
- மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் குடிநீர் திட்டங்களில் குடிநீர் பெறும் அளவு, மோட்டார் மற்றும் பம்புகளின் செயல்திறன், குடிநீர் தரத்திற்கான பௌதீக மற்றும் வேதியியல் தன்மைகள் போன்றவை குறித்த விவரங்கள் சேகரிப்பதை தொடர்ந்து கண்காணிக்க, கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்புகளை (SCADA) நிறுவுதல்.

- கோயம்புத்தூர் மாநகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் திட்டத்தில் கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பு (SCADA) நிறுவப்பட்டுள்ளது. பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்தில் இந்த அமைப்பை (SCADA) நிறுவுவதற்கு ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டுள்ளது.

- திருநெல்வேலி, திருப்பூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாநகராட்சிகளில் கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பு (SCADA) ஒரு சில பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- இராசிபுரம், குமாரபாளையம், திருச்செங்கோடு மற்றும் நாமக்கல் நகராட்சிகளில் கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பை (SCADA) நிறுவுவதற்கான பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது.
- திருநெல்வேலி, தூத்துக்குடி, மற்றும் திண்டுக்கல் மாநகராட்சிகளில் கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பை (SCADA) நிறுவுவதற்கான பணி 2016–17 செயல்படுத்தப்படும்.

- இந்த ஆண்டு செயல்படுத்தப்பட உள்ள குடிநீர் திட்டப் பணிகளின் மதிப்பீட்டின் ஒரு பகுதியாக கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பு (SCADA) சேர்க்கப்பட்டு உள்ளது.

### 2.3.2 குடிநீர் பகிர்மான கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வழங்கும் நிலையை மேம்படுத்தும் பொருட்டு உட்கட்டமைப்பு மற்றும் நீராதாரத்தின் நிலையினை அறிந்திட நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் தயாரிக்கப்பட்ட படிவத்தினை கொண்டு அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சேகரிக்கப்பட்ட விபரங்களின் அடிப்படையில் உட்கட்டமைப்பு மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணியினை மேம்படுத்தும் பொருட்டு 53 உள்ளாட்சிகள் (11 உள்ளாட்சிகள் அருகாமையில் உள்ள உள்ளாட்சிகளுடன் இணைக்கப்பட்டுவிட்டது) தேர்வு செய்யப்பட்டது. முதற்கட்டமாக 42 உள்ளாட்சி அமைப்புகளிலும் பகிர்மானக்குழாய் மேம்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளான மேல்நிலைத்தொட்டி மற்றும் தரை மட்டத்தொட்டிகள் கட்டும் பணிகளுக்கான விரிவான திட்ட

அறிக்கை மொத்தம் `1220.15 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டது. அதில் 15 உள்ளாட்சிகளில் `226.12 கோடி மதிப்பீட்டில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT), நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை திட்டம் (UIG) மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் (IUDM), ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) போன்ற திட்டங்களின் கீழ் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன. மேலும் 16 திட்டங்கள் ஜெர்மன் வங்கி (KfW) மற்றும் பிற நிதி ஆதாரங்கள் பெற நடவடிக்கையிலுள்ளது. மீதமுள்ள 11 திட்டங்கள் நிதி ஆதாரம் பெறப்பட்டபின்னர் எடுத்துக் கொள்ளப்படும். இது தவிர, தற்போது செயல்படுத்தப்படவுள்ள குடிநீர் திட்டங்கள் அனைத்திலும் பகிர்மான கட்டமைப்பு மேம்பாட்டுப்பணிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

### 2.3.3 மழைநீர் சேகரிப்பு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் மழை நீர் சேகரிப்பு திட்டம் 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 2001–2006 ஆம் ஆண்டுகளில் தீவிரமாக

செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் நிலத்தடி நீர் மட்டம் உயர பெரும் பங்கினை ஆற்றியுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கட்டட அனுமதி வழங்குவதற்கு அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பினை கட்டாயமாக அமைக்க வழி வகை செய்யும் வகையில் **1920** ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், **1972** ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகள், **1973** ஆம் ஆண்டு அடுக்குமாடி மற்றும் பொது கட்டட விதிகள், **2002** ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி கட்டடங்கள் (நீர் பாதுகாப்பு) விதிகள் ஆகியவற்றில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் மழை நீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

**2016** ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளில் மொத்தமுள்ள **42.55** லட்சம் கட்டடங்களில், **35.09** லட்சம் கட்டடங்களில் (**25,650** அரசு கட்டடங்கள் மற்றும் **34.84** லட்சம் தனியார் கட்டடங்கள்) மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள்

அமைக்கப்பட்டுள்ளன. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நீர் நிலைகளில் மழைநீர் சேகரிப்பு பணிகளை மேற்கொள்ள மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள **1482** குளங்கள் மற்றும் கோவில் குளங்களில், ஏற்கெனவே **716** குளங்களுக்கு மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

**2016** ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை கட்டடங்களில் **82** சதவீதமும், குளங்கள் மற்றும் நீர்நிலைகளில் **48.31** சதவீதமும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் மழைநீரின் சேகரிப்பு **4.82** டிஎம்சி என கணக்கிடப்பட்டுள்ளது (ஆதாரம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்). இதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயரும்.

**2016–17** ஆம் ஆண்டில் மீதமுள்ள கட்டடங்களிலும், குளங்கள் மற்றும் நீர் நிலைகளிலும் மழை நீர் சேகரிப்பு பணிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

### 2.3.4 வடகிழக்கு பருவ மழை – 2015 (மாநில பேரிடர் நிவாரண நிதி)

**2015–**ஆம் ஆண்டில் பெய்த வடகிழக்கு பருவ மழையினால் சேதமடைந்த சாலைகளை தற்காலிமாக

சீரமைக்கும் பணிகளுக்கு 2015–16 ல் அரசு `75.00 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 8 மாநகராட்சிகள் மற்றும் 58 நகராட்சிகளில் மழையினால் சேதமடைந்த சாலைகள் மற்றும் சிறுபாலங்கள் சீரமைக்க 861 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 744 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

## 2.4 பாதாள சாக்கடைத் திட்டம் (UGSS)

அரசின் கொள்கை முடிவின்படி படிப்படியாக அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 117 உள்ளாட்சி அமைப்புகளில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கைகள் `11,271 கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால் தயாரிக்கப்பட்டுள்ளன. உரிய நிதியாதாரம் முடிவு

செய்யப்பட்டபின் பல்வேறு கட்டங்களாக செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

### 2.4.1 செயலாக்கத்திலுள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள்

**தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் பகுதி III**–ன் கீழ் `**1025.51** கோடி மதிப்பீட்டில் **22** நகரங்களில் எடுத்துக் கொள்ளப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டங்களில், உதகமண்டலம், சின்னமனூர், நாமக்கல், தருமபுரி, பெரம்பலூர், திண்டுக்கல் (பகுதி), திருவண்ணாமலை, காஞ்சிபுரம், இராமநாதபுரம், திருவாரூர், கடலூர்,தேனி அல்லி நகரம், வேலூர், நாகப்பட்டிணம், புதுக்கோட்டை, திருவள்ளூர் மற்றும் பல்லவபுரம் ஆகிய நகராட்சிகளில் `**691.87** கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின்** துணைத் திட்டமான நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை திட்டத்தின் கீழ் **4** உள்ளாட்சி அமைப்புகளில் (மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள், ஆவடி மற்றும் தாம்பரம் நகராட்சிகள்) `**925.49** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதாள சாக்கடைத் திட்டங்களின் செயலாக்கம் பல்வேறு நிலைகளில் உள்ளன.

**சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்** கீழ் மறைமலைநகர், அரியலூர், அரக்கோணம், சாத்தூர், சிதம்பரம், திருப்பத்தூர், பெரியகுளம், மேட்டூர், நாகர்கோவில் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய 10 நகரங்களில் `954.86 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, மறைமலைநகர் மற்றும் உடுமலைப்பேட்டை நகராட்சியில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**ஜெர்மானிய வங்கி நிதியின் (KfW)** கீழ் ஈரோடு மாநகராட்சியில் `209.09 கோடிக்கும், விழுப்புரம் நகராட்சியில் `49.36 கோடிக்கும், காரைக்குடி நகராட்சியில் `112.53 கோடிக்கும், மற்றும் பொள்ளாச்சி நகராட்சியில் `109.62 கோடிக்கும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதில் விழுப்புரம் நகராட்சியில் பணி முடிவடைந்து வீட்டு இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. ஈரோடு மாநகராட்சி, காரைக்குடி மற்றும் பொள்ளாச்சி நகராட்சியில் பணி பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளது.

ஒசூர் நகராட்சிக்கு தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டத்தின் (TNSUDP) கீழ், அரசாணை(பல்வகை) எண்.1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 02.01.2015 மூலம் `283.94 கோடி நிதி ஆதாரம் வழங்கப்பட்டு பணிகள் துவங்க தேவையான அனுமதிகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை பாதாள சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ள கோயம்புத்தூர் (பகுதி), தருமபுரி, திருவண்ணாமலை, திண்டுக்கல், பல்லவபுரம், மறைமலைநகர், சின்னமனூர், காஞ்சிபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை, உதகமண்டலம், நாமக்கல், கரூர், மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், திருப்பூர், பெரம்பலூர், இராமநாதபுரம், திருவாரூர், கடலூர், புதுக்கோட்டை, வேலூர், உடுமலைப்பேட்டை, திருவள்ளூர், தேனி–அல்லிநகரம், விருதுநகர், நாகப்பட்டிணம் மற்றும் விழுப்புரம் ஆகிய 30 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் 4,31,895 (கடந்த ஆண்டு 3,31,769 இணைப்புகள்) வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

நவீன தொழில்நுட்ப முறைகளான குடைவு தொழில் நுட்பம் மூலம் குழாய் பதித்தல், அச்சு வார்த்தமனித நுழைவு

அமைப்புகள், HDPE குழாய்கள் அமைப்பது மற்றும் இதர நவீன முறைகளைப் பயன்படுத்திட திட்டமிடப்பட்டு வருகிறது.

**2.5 சுகாதாரம்**

நகரங்களில் மக்கள் சுகாதாரமாக வாழ்வதற்கு சுற்றுச்சூழலை ஏதுவான விதத்தில் அமைத்திட வேண்டும் என்னும் தொலைநோக்கு கொள்கையை உறுதி செய்ய, திறந்தவெளியில் மலம் கழிக்காமை மற்றும் குப்பைகள் இல்லாத சுற்றுச் சூழல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்கி, பாதுகாப்பான சுகாதார வசதிகளை ஏற்படுத்திட அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**2.5.1 திறந்தவெளியில் மலம் கழித்தலை அறவே ஒழித்தல்**

பாதாள சாக்கடைத் திட்டத்தில் இணைக்கப்பட்ட போதுமான கழிவறைகள் இல்லாமை, போதுமான மற்றும் நன்கு பராமரிக்கப்பட்ட பொதுக் கழிப்பறைகள், சமுதாய கழிப்பறைகள் இல்லாமை மற்றும் காலங்காலமாக மக்கள் திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிக்கும் பழக்கம் போன்றவற்றால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை தவிர்க்க, அரசு **2015** ஆம் ஆண்டுக்குள்

திறந்த வெளியில் மனிதக் கழிவு கழிப்பதை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்று அறிவித்துள்ளது. அதற்குரிய நெறிமுறைகள் மற்றும் அறிவுரைகள் நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டு, சமுதாய கழிவறைகள் கட்டுவதற்கு தகுந்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

திறந்த வெளியில் மனித கழிவு கழித்தலினால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை பொதுமக்கள் அறிந்து கொள்ளவும் மற்றும் அவர்களது செயல்பாடுகளில் மாற்றத்தினை ஏற்படுத்திடவும் பெரிய அளவிலான விழிப்புணர்வு திட்டம் துவக்கப்பட்டுள்ளது. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் திறந்த வெளியில் மனித கழிவு கழிக்கும் இடங்களை கண்டறிய ஒரு விரிவான ஆய்வினை மேற்கொண்டுள்ளன. இந்த ஆய்வின் அடிப்படையில், திறந்த வெளியில் மனித கழிவு கழிப்பதை ஒழிக்க 3,024 அலகுகளில் 18144 எண்ணிக்கையிலான இருக்கைகள் கொண்ட சமுதாய கழிவறைகள் மேம்பாடு மற்றும் புதிய கழிவறைகள் கட்டுமானப் பணி மேற்கொள்வதற்கு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

அக்டோபர் 2014லிருந்து இத்திட்டத்துடன் இணைந்து தூய்மை இந்தியா திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2015–2016**ம் ஆண்டில் **83,048** தனிநபர் கழிப்பிடங்கள் கட்டுமானத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் **52,183** பணிகள் முடிக்கப்பட்டு **29,239** எண்ணிக்கையிலான பணிகள் நடைபெற்று வருகின்றன. சமுதாய கழிவறைகள் **6422** எண்ணிக்கையிலான இருக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் **2490** எண்ணிக்கையிலான இருக்கைகள் முடிக்கப்பட்டு, **3932** இருக்கைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன .

கடந்த ஐந்து ஆண்டுகளில் **`210.60** கோடி மதிப்பீட்டில் **1,205** புதிய சமுதாய கழிவறை கட்டும் பணிகளும், பயன்பாட்டில் உள்ள **2,059** பழைய சமுதாய கழிவறைகளில் புனரமைப்பு பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவற்றில் **883** புதிய சமுதாய கழிவறைகளை கட்டும் பணிகளும், **1,809** பழைய சமுதாய கழிவறைகளை புதுப்பிக்கும் பணிகளும் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்ற பல்வேறு பயனாளிகளின் கழிவறை பயன்பாட்டினை மேம்படுத்தும் நோக்கில் நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் “ஒரே மாதிரி கழிவறை – நம்ம

டாய்லெட்" என்கிற சிறப்பான கழிவறை வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய நவீன கழிவறைகள் பல்வேறு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் அமைக்கப்பட்டு அனைத்து பயனாளிகளிடமும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. தற்போது பயன்பாட்டில் உள்ள கழிவறைகளை மேம்படுத்துவதற்கு பொறியாளர்களுக்கான தொழில்நுட்ப கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் 265 நம்ம டாய்லெட் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 204 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.5.2 கழிவு நீர் கசடு மேலாண்மை (Septage Management)

நச்சுத் தொட்டியில் பகுதி சுத்திகரிக்கப்பட்டு சேகரிக்கப்பட்ட கழிவுநீரே பொதுவாக கசடு கழிவு என்றழைக்கப்படுகிறது. இதில் திரவ, திட (Sludge), மேலும் கொழுப்பு, எண்ணெய் மற்றும் கிரீஸ் (Scum) ஆகியன மிகையாக காணப்படும். கசடு கழிவு உற்பத்தியின் அடிப்படையில், முழு செயல்முறை வடிவமைப்பு, சேகரிப்பு, பாதுகாப்பான சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றுதல் ஆகியன கசடு கழிவு மேலாண்மையில் அடங்கும். நமது துரிதகதியில் நகரமயமாகும் பொருளாதார சூழலில், குறிப்பிட்ட காலங்களில் நச்சுத் தொட்டியினை சுத்தம் செய்தல், மேலும் கசடு கழிவு இடம் பெயர்த்தல், சுத்திகரிப்பு, மறு பயன்பாடு மற்றும் வெளியேற்றம்

செய்வதற்கு ஒரு விரிவான திட்டம் மிகவும் இன்றியமையாததாகும்.

கழிவு நீர் கசடினை கையாள்வதை ஒழுங்கு படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் ஒரு விரிவான வழிகாட்டுதலை, அரசாணை (நிலை) எண் **106**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் **01.09.14** வாயிலாக அரசு வெளியிட்டுள்ளது. இவ்வழிமுறை கீழ்க்காணும் முக்கிய கூறுகளை உள்ளடக்கியதாகும்

i. நச்சுத் தொட்டிகளின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்

ii. உந்துதல் மற்றும் கசடு நீக்குதல்

iii. கழிவுநீர் கசடுகளை எடுத்துச் செல்லுதல்

iv. சுத்திகரித்தல் மற்றும் அகற்றுதல்

v. தகவல், கல்வி மற்றும் பரிமாற்றம்

vi. கழிவுநீர் கசடு சேகரித்தல், இடம் பெயர்த்தல், சுத்திகரிப்புக்கான கட்டணங்கள்

vii. மேலாண்மை தகவல் அமைப்பு (MIS) மூலமாக ஆவணம் காத்தல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல்.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ள இடங்களை அடிப்படையாகக் கொண்டு 23 உள்ளாட்சி அமைப்பு தொகுப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து 18–20 கி.மீ சுற்றில் அமைந்துள்ள அனைத்து சேகரிப்பு இடங்களை கொண்டுள்ள உள்ளாட்சி அமைப்புகள் தனித்தனி தொகுதியாக தொகுக்கப்பட்டுள்ளன.

நச்சுத் தொட்டிகளை கணக்கெடுத்தல், சுகாதாரமற்ற கழிவறைகளை கண்டறிதல் மற்றும் பயன்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் வடிகட்டி படுகை அமைத்தல் முதலான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதுவரை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் கழிவுநீர் நச்சுத்தொட்டிகளிலிருந்து கழிவுகளை 211 எண்ணிக்கையிலான பதிவு செய்யப்பட்ட லாரிகளால் 1,02,299 நடைகளில் 818.39 MLD கழிவு நீரை அருகிலுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கொண்டு விடப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டது.

**2.6 விலங்குகள் இனப்பெருக்க கட்டுப்பாட்டுத் திட்டம்**

விலங்குகளுக்கான இனப்பெருக்க கட்டுப்பாட்டு திட்டம், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் பொது சுகாதார பணிகளின் ஒரு பகுதியாகும். விலங்குகள் இனப்பெருக்க கட்டுப்பாட்டு திட்டத்தை மனிதாபிமான முறையில் செயல்படுத்திட துப்புரவு பணியாளர்கள் மற்றும் நகராட்சி ஊழியர்களுக்கு சிறந்த தன்னார்வு தொண்டு நிறுவனங்களின் மூலம் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. நாய்களை வலியின்றியும், மனிதாபிமான முறையிலும் பிடித்திட அரசாணை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.05.04.2013 வாயிலாக நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு மேம்படுத்தப்பட்ட 60 வாகனங்கள் `3.00 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. அறுவை சிகிச்சைக்கு முன்னரும், பின்னரும் தேவைப்படும் கவனிப்பை அளிக்கவும், இறப்பு நிகழும் அளவிற்கு காயமுற்ற மற்றும் தீர்க்க முடியாத நிலையில் நோயுடன் உள்ள நாய்களை பராமரித்திடவும், 80 உறைவிடங்கள் அமைத்திட `2.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளில் தெருநாய் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதில் 2,42,655 தெருநாய்கள் உள்ளது கண்டறியப்பட்டது. இவற்றில்,

மே 2016 வரை 1,47,245 தெருநாய்களுக்கு `6.60 கோடி செலவில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்பு மருத்துவர் மூலம் கருத்தடை முறைகள் செய்யப்படுகின்றது. அறுவை சிகிச்சைக்கு முன்னரும் பின்னரும் நன்கு நிறுவப்பட்ட நாய்கள் உறைவிடத்தில் நாய்கள் நன்கு பராமரிக்கப்படுகின்றன. நோய் தடுப்பூசியும் தரப்படுகின்றன. எஞ்சிய தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை படிப்படியாக மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2.7 திடக்கழிவு மேலாண்மை

தமிழகத்தில் 11 மாநகராட்சிகள் மற்றும் 124 நகராட்சிகளில் தினந்தோறும் சுமார் 7,597 மெட்ரிக் டன் திடக்கழிவு உற்பத்தியாகிறது. திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான முதற்கட்ட குப்பை சேகரிப்பு, இரண்டாம் நிலை சேகரிப்பான் மற்றும் பதப்படுத்தும் இயந்திரங்கள் தூய்மை இந்தியா மற்றும் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை நிதியின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. திடக்கழிவு மேலாண்மையில் பதப்படுத்தும் பணிகளாக உரம் தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், மறுசுழற்சி பொருள் சேகரிப்பு மையம் அமைத்தல், தேங்கிய

குப்பைகளில் உயிரி அகழ்வு நிகழ்வு மூலம் நிலத்தை மீட்டெடுத்தல் போன்ற பணிகள் செயல்பாட்டில் உள்ளது.

தாம்பரம், பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர், செம்பாக்கம் நகராட்சிகளுக்காக 300 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒருங்கிணைந்த திடக் கழிவு மேலாண்மை திட்டம் தொகுப்பு முறையாக (Cluster Basis) வேங்கட மங்கலம் என்ற இடத்தில் `99.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு திடக்கழிவுகளிலிருந்து உரம் மற்றும் எரிபொருள் (RDF) தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இரண்டாவது தொகுப்பில் கழிவிலிருந்து மின்சாரம் செயல்படுத்துதல் மூலம் 2.9 MWh மின்சாரம் தயாரிக்கும் பணி நடைமுறை படுத்தப்படவுள்ளது.

**2.7.1 ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டங்கள்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நிதி நிலைமை நலிவுற்றுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளை செயல்படுத்த, ஆண்டுக்கு `100 கோடி திடக்கழிவு மேலாண்மை சிறப்புநிதி திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதுவரை 80 உள்ளாட்சிகளில் `746.36 கோடி திட்ட மதிப்பீட்டில் 878

பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 153 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

**2.7.2 உயிரி எரிவாயு கூடங்கள்**

நகராட்சிகளில் உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் மக்கும் தன்மையுள்ள கழிவுகள் 50 முதல் 60 சதவீதமாகும். மற்றவை மறுசுழற்சி செய்ய இயலாத மற்றும் மக்காத கழிவுகளாகும். மக்கும் தன்மையுள்ள மொத்த கழிவுகளில், 20 முதல் 25 சதவீதம் குறிப்பாக உணவகங்கள், தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள், காய்கறி அங்காடிகள், இறைச்சிக் கூடங்கள் ஆகியன மூலம் பெறப்படுகிறது. மக்கும் தன்மையுள்ள கழிவுகளை குறைத்திடவும், முறையாக பயன்பாட்டிற்கு கொண்டு வரும் நோக்கத்துடனும், 33 உயிரி எரிவாயு கூடங்கள் 3, 5, மற்றும் 10 மெட்ரிக் டன் கொள்ளளவுகளில் மொத்தம் 164 மெட்ரிக் டன் கொள்ளளவில் 8 மாநகராட்சிகள், 23 நகராட்சிகளில் `30.39 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம், பகுதி-2 திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை நிதி ஆகிய நிதி ஆதாரங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை அனுமதி அளிக்கப்பட்ட **31** உள்ளாட்சி அமைப்புகளில் **20** உள்ளாட்சிகளில் **96** மெட்ரிக் டன் கொள்ளளவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மற்ற உள்ளாட்சிகளில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது. முடிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் நாள் ஒன்றுக்கு சுமார் **5000** Kwh மின்சாரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இதிலிருந்து பெறப்படும் மின்ஆற்றல் உரங்கிடங்கிலுள்ள விளக்குகள் எரியூட்டவும், உரம் தயாரிக்க தேவையான இயந்திரங்களை இயக்குவதற்கும் திரவக்கழிவுகளை சுத்தப்படுத்தும் ஆலைகளை இயக்குவதற்கும், அம்மா உணவகத்திற்கு எரிவாயு பயன்பாட்டிற்கும், எரிவாயு தகனமேடை எரியூட்டவும் பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள மின் ஆற்றல் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோகம் நிறுவனத்தின் மூலம் ஏற்றம் செய்யவும் நடவடிக்கையிலுள்ளது.

### 2.7.3 உரம் தயாரித்தல்

உள்ளாட்சி அமைப்புகளில் தரம்பிரிக்கப்பட்ட திடக்கழிவுகளை கொண்டு மக்கும் தன்மை கொண்ட

கழிவுகளை உரக்குவியல்கள் அமைத்து உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 5 மாநகராட்சிகளில் மற்றும் 49 நகராட்சிகளில் ஆண்டொன்றுக்கு 60225 மெட்ரிக் டன் மக்கிய உரம் மற்றும் மண் புழு உரம் தயார் செய்யப்பட்டு விவசாய பண்ணைகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

## 2.8 சாலைகள்

சாலைகள், நகர்ப்புர உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கு முதுகெலும்பாக திகழ்கின்றன. இந்த அரசு, வாகனங்கள் மற்றும் பாதசாரிகளின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் சாலைகளை அமைத்துத் தருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சாலைகள், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு நீடிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு, சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் (MORTH) விவரக் குறிப்புகளின் அடிப்படையில் குறைந்த செலவில் அமைக்கப்படுகின்றன.

மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகள் 23,349.93 கி.மீ. நீளமுள்ள சாலைகளை பராமரித்து வருகின்றன. இதில் 5,334.437 கி.மீ. சிமெண்ட் சாலைகளும், 15,316.999 கி.மீ. தார் சாலைகளும், 772.38 கி.மீ. கப்பி சாலைகளும், 1638.17 கி.மீ. மண்சாலைகளும், மீதமுள்ள சாலைகள் 287.94 கி.மீ.

பேவர்பிளாக் மற்றும் செதுக்கப்பட்ட கற்களால் ஆன சாலைகளாகவும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

குடிநீர் வழங்கல் திட்டங்கள், பாதாள சாக்கடைத் திட்டங்கள் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகளைப் பராமரித்தல், சீரமைத்தல் போன்ற பணிகள் பல்வேறு திட்டங்களின் நிதியுதவியுடன் கீழ்காணுமாறு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2.8.1 நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம்

பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர் திட்ட செயலாக்கம் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகளை வாகன போக்குவரத்திற்கு ஏற்றதாக குறிப்பிட்ட காலத்திற்குள் முழுவதுமாக சீரமைக்கும் பணிகளுக்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. அரசு, இதற்காக “நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டத்தை” அறிவித்துள்ளது.

பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த **3141.84** கிலோ மீட்டர் நீளச்சாலைகளை சீரமைப்பதற்காக கடந்த ஐந்தாண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் `**1624.38** கோடி மதிப்பீட்டில் **4,514** பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில்

`1200.03 கோடி செலவில் 4,298 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. விவரங்கள் கீழ்க்காணுமாறு :–

| வருடம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (` கோடியில்) | நீளம் (கி.மீ) | மொத்த பணிகள் | | மீதம் |
|---|---|---|---|---|---|
| | | | எடுக்கப் பட்டவை | முடிக்கப் பட்டவை | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 2011–12 | 200.00 | 584.394 | 1035 | 1035 | 0 |
| 2012–13 | 186.50 | 516.115 | 1084 | 1084 | 0 |
| 2013–14 | 265.61 | 523.313 | 1063 | 1061 | 2 |
| 2014–15 | 263.12 | 501.610 | 1084 | 1068 | 16 |
| 2015–16 | 258.29 | 1016.410 | 248 | 50 | 198 |
| **மொத்தம்** | **1173.52** | **3141.842** | **4514** | **4298** | **216** |

2016–17 ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் `332.43 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.8.2 ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (Integrated Urban Development Mission–IUDM)

ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்ட பின்னர், 2011–12 ஆம் ஆண்டு முதல் 2014–15

ஆம் ஆண்டு வரையில் **1416.03** கி.மீ சாலைகளில், **2,115** பணிகள் `**501.58** கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு `**530.40** கோடி செலவில் **2114** பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு :–

| வருடம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (` கோடியில்) | நீளம் (கி.மீ) | மொத்த பணிகள் | | |
|---|---|---|---|---|---|
| | | | எடுக்கப் பட்டவை | முடிக்கப் பட்டவை | மீதம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 2011–12 | 152.11 | 483.62 | 829 | 829 | 0 |
| 2012–13 | 172.49 | 496.45 | 976 | 976 | 0 |
| 2013–14 | 172.97 | 432.86 | 303 | 303 | 0 |
| 2014–15 | 4.01 | 3.100 | 7 | 6 | 1 |
| மொத்தம் | **501.58** | **1416.03** | **2115** | **2114** | **1** |

## 2.8.3 ஒரே சீரான ஒளிரும் சாலைக் குறியீடு அமைத்தல்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பெருவாரியான சாலைகளை சீரமைத்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. அரசு, பொதுமக்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் இந்த சாலைகள் மேலும் பயனுள்ளதாக இருக்கக் கூடிய வகையில் பெயர்கள், சாலைக் குறியீடுகள்,

சுற்றுலா இடங்கள் போன்றவற்றை குறிக்கும் வகையில் ஒரே சீரான குறியீடுகளைக் கொண்ட ஒளிரும் பெயர் பலகைகளை சாலைகளில் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றது. மாநகராட்சிகளில் 21,337 தெருக்களும் மற்றும் நகராட்சிகளில் 41,720 தெருக்களும் உள்ளன. இதுவரையில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள முக்கியமான சாலைகள் மற்றும் சாலை சந்திப்புகளில் 15,021 சாலை விவரங்கள் குறித்த பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் நடப்பாண்டிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

### 2.8.4 பிளாஸ்டிக் சாலைகள்

பிளாஸ்டிக் கழிவுகள் சுற்றுச் சூழலுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இந்த அரசு, பிளாஸ்டிக் இல்லாத சுற்றுச் சூழலை உருவாக்க பிளாஸ்டிக் கழிவுகளை முறையாக பயன்படுத்துவதை வலியுறுத்தி வருகிறது. பிளாஸ்டிக் இல்லாத சுற்றுச் சூழலை உருவாக்க மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பிளாஸ்டிக் கழிவு உபயோகிக்கும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது. பிளாஸ்டிக் கழிவுகளை முடிந்த வரையில் பயன்படுத்த வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி சாலைகள் அமைக்கும் திட்டம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் **1476.408** மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி பொது நிதி மற்றும் அரசின் சிறப்பு நிதிகளின் மூலம் **935.23** கி.மீ நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து, தரம் பிரித்து, எந்திரம் மூலம் துகள்களாக்கும் பணியை ஊக்குவிக்கும் வகையில், சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, இப்பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

## 2.9. தெரு விளக்குகள்

அடிப்படை வசதிகளுள் தெருவிளக்குகள் அமைப்பது நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய பொறுப்பாகும். மாநிலத்தில் **11** மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் **124** நகராட்சிகளில் மொத்தம் **7.39** இலட்சம் தெருவிளக்குகள் பராமரிக்கப்படுகின்றன. தெருவிளக்குகளுக்கான மின்கட்டண செலவு மொத்த மின்கட்டண செலவில் **25–30%** ஆகும். இது நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு மிகுந்த நிதிச்சுமையை ஏற்படுத்துகிறது. ஆகவே, மின் சிக்கனம் கொண்ட தெருவிளக்குகளை அமைப்பது அவசியமாகிறது.

இதற்கு முன்னோடியாக, **9** மாநகராட்சிகளிலும், தஞ்சாவூர் மற்றும் திருப்பூர் மண்டலத்திற்குட்பட்ட **35** நகராட்சிகளிலும் இத்திட்டம் செயலாக்கம் மற்றும் பராமரிப்பு

பணிகள் எஸ்கோ நிறுவனம் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலமாக 25–35% மின்கட்டணம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டத்திற்காக ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2011–12, 2012–13, 2013–14 மற்றும் 2014–15 ஆம் ஆண்டுகளில் `183.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதலீட்டு தர தணிக்கை நடைபெற்று முடிந்துள்ளது. மொத்த தெருவிளக்குகள் 3,13,507 இதில் 2,11,925 தெருவிளக்குகளை மின் சிக்கனம் வாய்ந்த எல்இடி தெருவிளக்குகளாக மாற்றி அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இதுவரை 1,34,689 தெருவிளக்குகள் மின் சிக்கனம் வாய்ந்த எல்இடி தெருவிளக்குகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் தஞ்சாவூர் மண்டல நகராட்சிகளில் 50,922 தெருவிளக்குகளை மின் சிக்கனம் வாய்ந்த எல்இடி தெருவிளக்குகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டுள்ளது.

## 2.10 சிறப்பு உட்கட்டமைப்பு திட்டம்

### 2.10.1 நவீன எரிவாயு தகன மேடை

சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் நடவடிக்கையாக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டம் 50 சதவீதத்திற்கும் மேலாக விறகுகளின் பயன்பாட்டினை குறைக்கிறது.

இதன் அடிப்படையில் 135 நகர்ப்புர உள்ளாட்சிகளில் 108 நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்க `34.63 கோடி செலவில் 92 நகர்ப்புர உள்ளாட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள நவீன எரிவாயு தகன மேடைகளில், 84 தகன மேடைகள் பொதுநல சங்கங்களின் பராமரிப்பில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

### 2.10.2 நவீன இறைச்சிக் கூடங்கள்

இறைச்சிக் கூடங்களை நவீனமயமாக்கவும், அவற்றை சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறும், சுகாதார குறைபாடுகளிலிருந்து காக்கவும், கடந்த ஐந்தாண்டுகளில் பகுதி–2 திட்டம், உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி ஆகியவற்றின் கீழ், 6 மாநகராட்சிகள் மற்றும் 25 நகராட்சிகளில் `9.01 கோடி மதிப்பீட்டில் 35 நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கும்

பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 28 நவீன இறைச்சிக் கூடங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் நவீன இறைச்சிக் கூடம் `9.85 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் உணவு பதப்படுத்துதல் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் 50 விழுக்காடு நிதியுதவியுடன் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. திருப்பூர், கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் 5 எண்ணிக்கையில் `63.92 கோடி திட்ட மதிப்பீட்டில் நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்க மத்திய அரசின் நிதி உதவி பெற நடவடிக்கையிலுள்ளது.

### 2.10.3. கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய எரிசக்தி பலகைகள் நிறுவுதல்

மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்கு திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு சூரிய ஒளி மூலம் 3000 மெகாவாட் மின் உற்பத்தி செய்தல் ஒன்றாகும். இதற்கான பல்வேறு நடவடிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக நகராட்சிக்குச் சொந்தமான கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய ஒளி மின்உற்பத்தி செய்ய பலகைகள் பொருத்தி அதன் மூலம் அன்றாட அலுவலக

பயன்பாட்டிற்கு மின்உற்பத்தியை பயன்படுத்திக் கொள்ளவும், அடுத்த கட்டமாக சூரிய மின்சக்தியை நகராட்சி தெருவிளக்களுக்கும், குடிநீர் விநியோக வேலைக்காகவும் பயன்படுத்தி கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

மேற்கண்டுள்ள நோக்கத்திற்காக நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் **172** பொறியாளர்களுக்கு ஆரோவில்லின் உதவியுடன் சூரிய எரிசக்தி தொடர்பாக தொழில்நுட்ப மேலாண்மை, திட்ட வரைபடம் தயாரித்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு முதற்கட்டமாக **50** கிலோவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய சூரியசக்தி (போட்டோவோல்டிக்) பலகைகள் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நிறுவப்பட்டு, இதன் மூலம் தினசரி **250** கிலோவாட் மணிகள் (KWh) மின்சக்தி அலுவலக நேரத்தில் உபயோகிக்கப்பட்டு மின் கட்டணம் கணிசமான அளவில் குறைந்துள்ளது. இதுவரை **445** உள்ளாட்சி அமைப்புளில் நிறுவப்பட்ட சூரிய சக்தி பலகைகள் மூலம் **2198** கிலோ வாட் மணிகள் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர் முயற்சியாக கட்டட மேற்கூரையில் சூரியஒளி மூலம் மின்னாற்றல் தயாரிக்கும் பலகைகளை (போட்டோவோல்டிக்) அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள கட்டிடங்கள்,

குடிநீர் தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் உரக் கிடங்களில் சேர்த்து அமைக்க வருங்காலத்தில் திட்டம் மேற்கொள்ளப்படும்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கட்டிடடங்களில் சூரிய சக்தி மின்சாரத்தினை பயன்படுத்திட உள்ள சாத்தியக்கூறுகளை ஆராய தொழில் நுட்ப கலந்தாலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார். கட்டிடத்திற்கு தேவையான மின் சக்தியானது சூரிய ஒளி தகடுகள் நிறுவுவதன் மூலமும்,அதன் மூலம் அறுவடை செய்யப்படும் சூரிய சக்தியின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. முதலீட்டை திரும்ப செலுத்தும் கால அவகாசத்தின் அடிப்படையில் தனிநபர் சேவை ஒப்பந்ததாரர்களை அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2.10.4 இயந்திரம் சாரா போக்குவரத்து

நமது நகரங்களில் அனைத்து சாலைகள் மற்றும் தெருக்களில் நடைபாதை பாதசாரிக்கும் மிதிவண்டிக்கும் பொது போக்குவரத்துக்கும் போதுமான வசதிகள் தனித்தனியாக இல்லை. நகராட்சி நிர்வாக ஆணையரகம், மேற்கண்ட போக்குவரத்து வசதிகள் தொடர்ந்து கிடைக்கும் வகையில் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருப்பூர் மற்றும் சேலம் மாநகராட்சிகளுக்கு போக்குவரத்து மேலாண்மை மற்றும்

கொள்கை நிறுவனம் (ITDP) மற்றும் உள்ளூர் சுற்றுப்புற சூழல் முயற்சிகளுக்கான பன்னாட்டு குழுமம் – தெற்கு ஆசியா (ICLEI-South Asia) உறுதுணை பங்களிப்புடன் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்துவதின் மூலம் மிகவும் பாதுகாப்பான, எளிமையான, நெரிசல் அற்ற போக்குவரத்து வசதி கிடைக்கும். ஐந்து மாநகராட்சிகளில் ஆய்வு மேற்கொண்டு போக்குவரத்து விவரங்கள் சேகரிக்கப்பட்டு பொது போக்குவரத்து மேம்பாடு, மிதிவண்டி மற்றும் பாதசாரிகளுக்கான பாதைகள், பாதுகாப்பான சாலைகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் சுற்றுச்சுழல் மாசுப்படாத வகையில் திட்ட அறிக்கைகள் தயார் செய்ய நடவடிக்கையில் உள்ளது. இந்த ஆண்டு முதல் இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்படும். 2015–2016ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி கோயம்புத்தூர், திருப்பூர், மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 3 மாநகராட்சிகளில் மேற்குறிப்பிட்ட வாகன போக்குவரத்திற்கான தனித்தனி திட்டங்கள் உருவாக்க உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி மற்றும் மாநகராட்சி பங்களிப்புடன் பணிமேற்கொள்ள `62.42 கோடிக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது.

## 2.11 உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்குதல் (ம) பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி

நான்காவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியினை 3 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகவும், இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியினை 2 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகவும் அரசு உயர்த்தியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் `965.18 கோடி மதிப்பீட்டில் 4,666 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 3,897 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் `375.11 கோடி மதிப்பீட்டில் 468 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதில் 188 பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

**2016–17 ம் ஆண்டில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்குதல் (ம) பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் முறையே `192.64 கோடி மற்றும் `82.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.12 அலுவலகக் கட்டடம் கட்டுதல்

பெரும்பாலான நகராட்சிகளில், போதுமான அலுவலக இட வசதி இல்லை. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், போதிய நிதி இல்லாத காரணத்தால் புதிய கட்டடம் கட்டுதல் அல்லது ஏற்கெனவே உள்ள வசதிகளை உயர்த்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளன. பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கு சிறந்த சூழலை உருவாக்கி தருவது அரசின் நோக்கமாகும்.

கடந்த ஐந்தாண்டுகளில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் பகுதி–2 திட்டம் ஆகியவற்றின் கீழ் 73 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு `100.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 34 அலுவலக கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

## 2.13 துப்புரவு பணியாளர்கள் நலன்

நகர்ப்புர உள்ளாட்சிகளின் பணியாளர்களில் 70 விழுக்காடு துப்புரவு பணியாளர்கள் ஆவர். (மொத்தம் 43,089 பணியாளர்களில் 30,109 துப்புரவுப் பணியாளர்கள்). நகர்ப்புர உள்ளாட்சிகளின் முக்கிய பணியான அடிப்படை சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் இவர்களின் பங்கு

முக்கியத்துவம் வாய்ந்தது. இவர்களின் பணியை கண்ணியமிக்கதாக மேம்படுத்துவதுடன் பாதுகாப்பான, ஆரோக்கியமான பணிச்சூழலை அளிப்பதும் மிக முக்கியமானதாகும்.

அரசு, கடந்த ஐந்தாண்டுகளில் துப்புரவு பணியாளர்களுக்கு குடியிருப்புகளை கட்டித்தருவதற்காக **33** நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு **902** குடியிருப்புகள் கட்ட உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி மற்றும் பகுதி–2 திட்ட நிதியிலிருந்து `**39.11** கோடி வழங்கியுள்ளது.அதன் விவரம் பின்வருமாறு:

| வருடம் | உள்ளாட்சி களின் எண்ணிக்கை | குடியிருப்பு களின் எண்ணிக்கை | தற்போதைய நிலை | |
|---|---|---|---|---|
| | | | முடிக்கப் பட்டவை | முன்னேற்றத் தில் உள்ளவை |
| 2011–12 | 3 | 72 | 72 | 0 |
| 2012–13 | 6 | 80 | 68 | 12 |
| 2013–14 | 11 | 336 | 126 | 210 |
| 2014–15 | 8 | 214 | 0 | 214 |
| 2015–16 | 5 | 200 | 0 | 200 |
| **மொத்தம்** | **33** | **902** | **266** | **636** |

## 2.14 மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள்

## 2.14.1 சீர்மிகு நகரங்கள் (Smart Cities)

சீர்மிகு நகரங்கள் என்னும் திட்டத்தை மத்திய அரசு 25.06.2015 அன்று துவக்கியது. உலகத்தரம் வாய்ந்த நகரங்களை மக்களுடைய எண்ணங்களுக்கு ஏற்றவாறு அனைத்து வசதிகளுடன் நிர்மாணிப்பது இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

இத்திட்டத்தின்படி மக்களுக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் அதில் நவீன தொழில்நுட்ப வசதிகளையும் ஏற்படுத்துவதாகும்.

இந்தியாவில் மொத்தம் 100 சீர்மிகு நகரங்களை ஐந்து ஆண்டுகளுக்குள் உருவாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி தமிழகத்தில் 12 சீர்மிகு நகரங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

முதலாவது ஆண்டிற்கு நகரங்களுக்கிடையே சவாலான போட்டி **(City Challenge Competition)** என்னும் முறையில் நகரங்கள் தேர்வு செய்யப்படும். தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 மாநகராட்சிகளும் நாட்டில் உள்ள 100 நகரங்களுடன் போட்டியிட “சீர்மிகு நகரத்திற்கான திட்டம்” தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. 2015–16ம் ஆண்டிற்கான போட்டியில் தமிழகத்திற்கு சென்னை மற்றும் கோயம்புத்தூர்

மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதற்காக சிறப்பு தேவைக்கான அமைப்பு (SPV) நிறுவப்பட்டுள்ளது.

### 2.14.2 அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT)

**புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான அட்டல்** திட்டத்தை மத்திய அரசு **25.06.2015** அன்று துவக்கியது. தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகையுள்ள **12** மாநகராட்சிகள், **20** நகராட்சிகள் மற்றும் **1** பேரூராட்சியில் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ளன.

### 2.14.3 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம், திட்ட செயலாக்க நகரங்கள் மற்றும் அதன் புறநகர் பகுதிகளின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையை குறிக்கோளாகக் கொண்டதாகும். தமிழ்நாட்டில் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகியவை திட்ட செயலாக்க மாநகரங்களாகும். பின்வரும் துணைத் திட்டங்கள் வாயிலாக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:-

I) அ) நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான துணைத் திட்டம் (Urban Infrastructure and Governance-UIG)

ஆ) நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதித் துணைத் திட்டம் (Basic Services to the Urban Poor- BSUP)

II) சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (Urban Infrastructure Development Scheme for Small and Medium Towns-UIDSSMT)

III) ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (Integrated Housing and Slum Development Programme - IHSDP)

### 2.14.4 நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை (Urban Infrastructure and Governance - UIG)

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் கீழ்க்காணுமாறு : -

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நகராட்சி கள் | ஒதுக்கீடு தொகை (`கோடி | மேற் கொள்ளப் பட்ட பணிகள் | முடிக்கப்பட்ட பணிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|

| | | | யில்) | எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| 1. | குடிநீர் விநியோகம் | 7 | 1193.74 | 13 | 9 |
| 2. | மழைநீர் வ டிகால்கள் | 2 | 528.31 | 2 | 2 |
| 3. | திடக்கழிவு மேலாண்மை | 4 | 215.01 | 3 | 2 |
| 5. | பாதாள சாக்கடை திட்டம் | 4 | 925.49 | 4 | 0 |
| | **மொத்தம்** | **17** | **2862.55** | **22** | **13** |

மேலே குறிப்பிட்ட 22 பணிகளும் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளிலும், அவற்றை சுற்றி வளர்ச்சியடைந்துள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளிலும் மற்றும் சென்னையை சுற்றியுள்ள நகராட்சிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் 13 பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 2.14.5 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (Urban Infrastructure Development Scheme for Small and Medium Towns - UIDSSMT)

நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை திட்ட செயலாக்க வரம்பிற்குள் வராத நகர்ப்புர உள்ளாட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல் வசதி, திடக்கழிவு மேலாண்மை, வடிகால்கள், மழைநீர் வடிகால்கள், சாலைகள் அமைத்தல் மற்றும் மேம்பாடு, வாகன நிறுத்தகங்கள் (பொதுமக்கள்/ தனியார் பங்களிப்புடன்) புராதன பகுதிகளில் மேம்பாடு மற்றும் நீர்நிலைகளை பாதுகாத்தல் போன்ற உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகள் எடுத்துக் கொள்ளப்படும். எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் கீழ்க்காணுமாறு :–

| வ எண் | திட்டம் | நகர்புர உள்ளாட்சி களின் எண்ணிக்கை | வழங்கப் பட்ட தொகை | எடுத்துக் கொள்ளப் பட்ட பணிகள் எண்ணிக்கை | முடிக்கப்பட்ட பணிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | சாலைகள் (ம) வடிகால்கள் | 16 | 69.41 | 16 | 16 |
| 2 | குடிநீர் வழங்கல் | 40 | 740.47 | 40 | 30 |
| 3. | பாதாள சாக்கடைத் திட்டம் | 11 | 607.54 | 11 | 2 |
| 4. | திடக்கழிவு மேலாண்மை | 1 | 3.58 | 1 | 1 |
| | **மொத்தம்** | **68** | **1421.00** | **68** | **49** |

## 2.14.6 நகர்ப்புர ஏழைகளுக்கான வீட்டு வசதி திட்டம்

நகர்ப்புர ஏழைகளுக்கு பாதுகாப்பான, சுகாதாரமான வாங்கத்தக்க விலையிலான மற்றும் நீடித்த நிலைத்தன்மை கொண்ட வீட்டு வசதியினை ஏற்படுத்தித் தருவது அரசின் தலையாய நோக்கமாகும். மத்திய அரசு, **2006** ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு துணைத் திட்டங்களை துவக்கியுள்ளது :

- நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதிகள் திட்டம் (BSUP)–திட்ட செயலாக்க நகரங்களான சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் அதனைச் சுற்றி வளர்ச்சியடைந்துள்ள நகர்ப்புரப் பகுதிகள்.

- பிற நகரங்கள் அனைத்திலும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IHSDP).

## நகர்ப்புர ஏழைகளுக்கானஅடிப்படை வசதித் திட்டம் (Basic Services to the Urban Poor - BSUP)

அரசு, நகர்ப்புர ஏழைகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சுகாதாரம், கல்வி, சமூக பாதுகாப்பு முதலியவற்றுடன் நிலப் பாதுகாப்பு, வாங்கக் கூடிய விலையில் மேம்படுத்தப்பட்ட வீட்டு வசதி மற்றும் குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை வழங்குவது நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டத்தின் குறிக்கோளாகும்.

இத்திட்டத்தின் கீழ் `**2,316.02** கோடி மதிப்பீட்டில் **89,720** குடியிருப்புகளை கட்டுவதற்கான **51** திட்டங்களுக்கு இதுவரை மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. **78,971** குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள **10,749** குடியிருப்புகளின் கட்டுமானம் பல்வேறு நிலைகளில் உள்ளன. **3,852** உட்கட்டமைப்பு பணிகளில், **3,765** பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள **87** பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

பல்வேறு முகமைகள் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப் பணிகளின் விவரங்கள் பின்வருமாறு :-

| செயலாக்க முகமையின் பெயர் | திட்ட மதிப்பீடு (` கோடியில்) | குடியிருப்பு அலகுகள் | | | அடிப்படை வசதிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அனுமதிக்கப் பட்டவை | முடிக்கப்பட்டவை | முன்னேற்றத்தில் உள்ளவை | அனுமதிக்கப் பட்டவை | முடிக்கப் பட்டவை | முன்னேற்றத்தில் உள்ளவை |
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** | **(5)** | **(6)** | **(7)** | **(8)** |
| தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் | 1370.28 | 42318 | 36543 | 5775 | 65 | 35 | 30 |
| நகராட்சி நிர்வாக ஆணையரகம் | 679.51 | 42010 | 37130 | 4880 | 934 | 932 | 2 |
| பேரூராட்சி இயக்குநரகம் | 43.16 | 2348 | 2348 | -- | 186 | 186 | -- |
| சென்னை மாநகராட்சி | 223.07 | 3044 | 2950 | 94 | 2667 | 2612 | 55 |
| **மொத்தம்** | **2316.02** | **89720** | **78971** | **10749** | **3852** | **3765** | **87** |

## ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (Integrated Housing and Slum Development Programme - IHSDP)

இத்திட்டத்தின் நோக்கம், குடிசைப் பகுதி மக்களுக்கு போதுமான குடியிருப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளை அளிப்பதன் மூலம் குடிசைப் பகுதிகள் முழுமையான மேம்பாட்டை அடையும். இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசால் `566.11 கோடி மதிப்பீட்டில் 94 திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு, `400.45 கோடி மத்திய அரசின் நிதியுதவியுடன் 93 நகரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அனுமதிக்கப்பட்ட, 37,715 குடியிருப்புகளில், 36,733 குடியிருப்பு அலகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 982 அலகுகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட 2,233 அடிப்படை வசதிப் பணிகளில் 2,148 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் பல்வேறு செயலாக்க நிலைகளில் உள்ளன.

பல்வேறு முகமைகள் மூலம் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளின் விவரம் கீழ்க்காணுமாறு :-

| செயலாக்க முகமையின் பெயர் | திட்ட மதிப்பீடு (` கோடியில்) | குடியிருப்பு அலகுகள் | | | அடிப்படை வசதிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அனுமதிக்கப் பட்டவை | முடிக்கப் பட்டவை | முன்னேற்றத்தில் உள்ளவை | அனுமதிக்கப் பட்டவை | முடிக்கப் பட்டவை | முன்னேற்றத்தில் உள்ளவை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் | 20.09 | 1443 | 1443 | - | - | - | - |
| நகராட்சி நிர்வாக ஆணையரகம் | 486.57 | 31730 | 30748 | 982 | 1957 | 1872 | 85 |
| பேரூராட்சி இயக்குநரகம் | 59.45 | 4542 | 4542 | - | 276 | 276 | - |
| **மொத்தம்** | **566.11** | **37715** | **36733** | **982** | **2233** | **2148** | **85** |

## 2.15 வெளிநாட்டு நிறுவன உதவித்திட்டங்கள்

தமிழக அரசு வெளிநாட்டு நிதியுதவியுடன் கீழ்காணும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது:-

**1. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் தமிழ்நாடு நகர்புர உள்கட்டமைப்பு திட்டம் (TNUIP)**

இத்திட்டத்தின் நிதியுதவியுடன் 9 உள்ளாட்சி அமைப்புகளில் 9 குடிநீர் மேம்பாட்டு பணிகள் `663.68 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 4 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 5 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 2. ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன் நீடித்த நகர்புர உள்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டம் (SMIF)

இத்திட்டத்தின் நிதியுதவியுடன் 17 உள்ளாட்சி அமைப்புகளில் சாலைப்பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் மேம்பாட்டு பணிகள் மற்றும் பாதளசாக்கடை திட்டம் போன்ற 22 பணிகள் `1376.44 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 9 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 13 பணிகள் பல்வேறு நிலையில் செயலாக்கத்தில் உள்ளன.

## 3. தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP)

உலக வங்கி நிதியுதவியுடன் `13831 கோடி செலவில் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தினை (TNSUDP) செயல்படுத்திட அரசு ஆணை (நிலை) எண் 5 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 13.01.2016ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தற்போது செயலாக்கத்தில் உள்ளது.

இத்திட்டத்தில் நகர்ப்புர ஆளுமை (மாதிரி நகரம்) கூறு மற்றும் நகர்பகுதிக்கான தொழில் நுட்ப உதவிக்கூறு (Urban

sector technical Assistance compononent) ஆகிய இரண்டு திட்டங்கள் நகராட்சி நிர்வாக ஆணையரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2.16.1 நகர்ப்புர ஆளுமை (மாதிரி நகரம்) கூறு**

ஈரோடு மாநகராட்சி, வேலூர் மாநகராட்சி மற்றும் ஓசூர் நகராட்சி ஆகியவை நகர்பபுற ஆளுமை (மாதிரி நகரம்) கூற்றின் கீழ் மாதிரி நகரங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளை எய்துவதன் அடிப்படையில் ஈரோடு மற்றும் வேலூர் மாநகராட்சிகளுக்கு தலா `153.24 கோடியும் ஓசூர் நகராட்சிக்கு `76.62 கோடியும் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு மான்யமாக வழங்கப்படும்.

**2.16.2 நகர்ப்புரங்களில் மின் ஆளுமை**

தமிழ்நாடு நகர்புர வளர்ச்சி திட்டம் III–ன் கீழ் மாநிலத்தில் அனைத்து பகுதிகளையும் இணைக்கும் வகையில் தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பு (TNSWAN) 48 நகராட்சிகள், 7 நகராட்சி நிர்வாக மண்டல அலுவலகங்கள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு நீடித்த நகர்புர வளர்ச்சி திட்டத்தின் கீழ் நகர்பகுதி தொழில் நுட்ப உதவி கூற்றின் கீழ் ‘‘மின்னணு ஆளுமை, பொது

நிதி மேலாண்மை, புவியியல் தகவல் அமைப்பு'' எனும் துணைக்கூற்றில் ஒரு பெரிய மின்னணு ஆளுகைத் திட்டம் (அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மையப்படுத்தப்பட்ட மின்னணு ஆளுமை முறை) `18.31 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 12 சேவைகள் (Modules ) 51 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட உள்ள 29 சேவைகளும் 2016–17ம் ஆண்டு இறுதிக்குள் அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் செயலாக்கத்திற்கு கொண்டு வரப்படும். இதன் விளைவாக தற்போது 51 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மையப்படுத்தப்பட்ட இணையதள மின்ஆளுமை நடைமுறைப்படுத்தப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்காக சோதனை ஓட்டமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு நீடித்த நகர்புர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள 77 நகராட்சிகள் மற்றும் 7 மாநகராட்சிகளில் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு 2016–17ம் ஆண்டில் நிறுவப்படவுள்ளது.

### 2.17 புவியியல் தகவல் அமைப்பு (GIS)

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி திட்டம் IIIன் கீழ் புவியியல் தகவல் அமைப்பின் அடிப்படையில் ஒவ்வொரு வீடாக சென்று

சொத்து விவரம் கணக்கெடுத்தல், அடிப்படை வரைபடம் மற்றும் பயன்பாடு வரைபடம் தயாரித்தல் போன்ற பணிகள் 7 மாநகராட்சிகள் மற்றும் 10 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டது. கலந்தாய்வர்கள் சமர்ப்பித்த விவரங்களை சரிபார்க்கும் பணி அந்தந்த நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

## 2.18 தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் (Tamil Nadu Institute of Urban Studies - TNIUS)

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட செயல்படுவதற்கான ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்திற்காக 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தில் உறைவிட பயிற்சி திட்டங்களை மேம்படுத்தும் நோக்கில், ஒரு புதிய விடுதி கட்டப்பட்டுள்ளது. உருவாக்குதல் போன்ற ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இந்த நிறுவனம் நகர்ப்புர ஆளுகை தொடர்பான கூட்டு முயற்சிகளுக்கென, மாநில மற்றும் தேசிய அளவிலான

கீழ்காணும் புகழ்பெற்ற பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களான இந்திய பொறியியல் பணியாளர் கல்லூரி (ESCI), ஹைதராபாத். இந்தியன் இன்ஸ்ட்டிடியூட் ஆப் ஹியுமன் செட்டில்மென்ட் (IIHS), பெங்களூரு. தமிழ்நாடு ஐசிடி அகாடமி (ICT Academy), சென்னை ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஜப்பான் நாட்டின் பப்ளிக் எண்டர்பிரைசஸ் ஏஜென்சி (Public Enterprises Agenc) (**PEA**) Kanagawa Prefectural Government மற்றும் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் இடையே நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் திறன் மற்றும் அறிவினை உலகளாவிய தரத்திற்கு மேம்படுத்தும் வகையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு உள்ளது. இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் குடிநீர் வழங்கல் தொடர்பான பணிகளில் பயிற்சிகள் நடத்துதல், வெளிநாடுகளில் பின்பற்றப்படும் சிறப்பு முயற்சிகளை கண்டறிதல், குடிநீர் சுத்தகரிப்பு, பகிர்மானம், குழாய் உடைப்பு கண்டறிதல், குடிநீர் வீணாகுவதை தடுத்தல், உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வளங்கள் பரிமாற்றம் போன்ற சாத்திய கூறுகளை இவ்விரண்டு நிறுவனங்களும் கலந்தாலோசிக்கும்.

## 2.19 மாநகராட்சிகள்

### 2.19.1 மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சி, **01.05.1971** அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. **2011** ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை **15,61,129** ஆகவும், பரப்பளவு **147.99** சதுர கிலோ மீட்டர் ஆகவும்,ஆண்டு சராசரி வருமானம் **`334.25** கோடியாகவும் உள்ளது.

**2015–16**ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன :–

- சிறப்பு சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேதமடைந்த **56.87** கி.மீ. நீளமுள்ள சாலைகளை சீரமைக்க **`26.04** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சுற்றுச்சாலை சுங்கக் கட்டணம் உபரி நிதியின் கீழ் **68.17** கி.மீ. நீளமுள்ள புதிய சாலைகள் **`22.44** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் **`0.90** கோடி செலவில் புதிய கழிப்பிடங்கள் கட்டும் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- நகர் மற்றும் ஊரமைப்புத் திட்ட நிதியின் கீழ் **`1.00** கோடி செலவில் திருப்பரங்குன்றம் திருக்கோவிலைச் சுற்றி பேவர்பிளாக் சாலைகள், மழைநீர் வடிகால், சுத்திகரிக்கப்பட்ட குடிநீருடன் கூடிய கட்டடம் மற்றும்

நடைபாதை போன்ற பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- நகரின் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் நகரின் மையப் பகுதியில் செயல்பட்டு வரும் **25** மொத்த மற்றும் **240** சில்லறை வியாபார பழக்கடைகளை மாட்டுத்தாவணி பகுதிக்கு மாற்றியமைக்க `**12.30** கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றது.

### 2.19.2 கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி, **01.05.1981** அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. **2011** ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை **16,01,438** ஆகவும், பரப்பளவு **265.36** சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் `**642.72** கோடியாகவும் உள்ளது.

**2015–2016** ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன:-

- கவுண்டம்பாளையம், வடவள்ளி. வீரகேரளம் பகுதிகளில் தங்குதடையின்றி சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு `108.16 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதி பெற்று செயல்படுத்தப்படும்.

- கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் `556.57 கோடி செலவில் 24 மணிநேரம் குடிநீர் வழங்கும் திட்டத்தை (24X7) செயல்படுத்தும் பணி ஒப்பந்த நிலையில் உள்ளது.

- தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான (AMRUT ) திட்டத்தின் கீழ் 2015–16ஆம் ஆண்டில் 6 பூங்காக்கள் `4.28 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உள்ளது.

- கோயமுத்தூர் மாநகராட்சியில், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் கட்டட இடிபாடுகளை திரும்ப பயன்படுத்துதல் மற்றும் மறுசுழற்சி செய்ய `9.00

கோடிக்கு அரசாணை எண். 79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.05.2016ல் அனுமதி வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு உள்ளது.

**2.19.3 திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, **01.04.1994** அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப் பட்டது. **2011** ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை **9,16,857** ஆகவும், பரப்பளவு **167.23** சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் `**303.88** கோடியாகவும் உள்ளது.

**2015–16** ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டன.

- சிறப்பு சாலைத்திட்டத்தின் கீழ் **53.51** கிமீ. நீளத்திற்கு சாலைகளை மேம்படுத்த `**26.22** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- ஸ்வச் பாரத் மிஷன் திட்டத்தின் கீழ் `**0.63** கோடி மதிப்பீட்டில் **11** புதிய கழிப்பிடங்கள் கட்டும் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- மத்தியஅரசுஉணவுபதப்படுத்தும் அமைச்சகத்தின் (Ministry of food processing industries MoFPI) வழிமுறைகளின்படி `10.49 கோடி மதிப்பீட்டில் 2 இடங்களில் நவீனஆட்டிறைச்சிக் கூடம் கட்டுவதற்கும் நவீன மீன் சந்தைஅமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2 நவீன ஆட்டிறைச்சிக் கூடப்பணிகள் நடைபெற்று வருகிறது.

- தமிழ்நாடு அரசு மற்றும் தேசிய மீன் வளர்ச்சி வாரியம் நிதியின் கீழ், `332.00 லட்சம் மதிப்பீட்டில் நவீன மீன் சந்தை அமைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

- மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் (வார்டு எண். 61 முதல் 65 வரை) ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதி கடன், மான்யம் மற்றும் பொதுமக்கள்/ மாநகராட்சி பங்களிப்பு நிதிகளின் கீழ் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்த ` 63.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகிறது.

- மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ், **6** பணிகளுக்கு **`1.20** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன.

- உட்கட்டமைப்பு இடைவெளிநிரப்புநிதி மற்றும் இயக்குதல்மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புநிதியின் கீழ் நவீனஎரிவாயு தகன மையம், சமையலறைகழிவு / காய்கறி கழிவுகள் கொண்டு எரிவாயுதகன மேடை மாற்றுதல் மற்றும் மீத்தேன் வாயு முறையில் சமுதாய சமையலறை அமைக்கும் பணிகளுக்கு **`1.70**கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு **3** பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ளது.

- ஆசியவளர்ச்சி வங்கி நிதியுதவியின் கீழ் **5** பணிகள் சுகாதார வளாகம், மின்விளக்குகள், மின் சேமிப்புதிறன் கொண்ட மின் விளக்குகள், வழிகாட்டு பலகைகள் மற்றும் அமரும் இருக்கைகள் அமைக்கும் பணிகள் **`5.96**கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

### 2.19.4 சேலம் மாநகராட்சி

சேலம் மாநகராட்சி, **01.06.1994** அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. **2011** ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை **8,31,038** ஆகவும், பரப்பளவு **91.34** சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் **`164.59** கோடியாகவும் உள்ளது.

**2015–16** ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன:

- சிறப்பு சாலை திட்டத்தின் கீழ் **29.767** கீ.மீ. நீளத்திற்கு அரசு மான்யம் மற்றும் கடனாக **`18.00** கோடி மதிப்பீட்டில் **50** எண்ணிக்கையிலான சாலைப் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.
- ஸ்வச் பாரத் மிஷன் திட்டம் மற்றும் தமிழ்நாடு அரசு மான்யத்துடன் **`4.54** கோடி மதிப்பீட்டில் **30** எண்ணிக்கையில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.
- உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் மாநகராட்சி புதிய மைய அலுவலகத்திற்கு இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம், நவீன எரிவாயு

தகனமேடை, சமுதாய சமையலறை, உணவு கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரித்தில் மற்றும் போடிநாயக்கன்பட்டி ரயில்வே தரை கீழ் பாலம் ஆகிய **5** பணிகளுக்கு அரசு மான்யமாக தொகை **`8.91** கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

- தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான (AMRUT) திட்டத்தின் கீழ் சேலம் மாநகராட்சி பகுதியில் **4** இடங்களில் பூங்கா அமைக்கும் பணிக்கு **`1.35** கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நகர்புற நிதி ஆணையத்தின் மூலம் கடனாக **`67.00** கோடி பெறப்பட்டு சேலம் மாநகராட்சி பகுதியில் **122** கி.மீ. நீளத்திற்கு **293** சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

### 2.19.5 திருநெல்வேலி மாநகராட்சி

திருநெல்வேலி மாநகராட்சி, **01.06.1994** அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. **2011** ஆம் ஆண்டு

கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை **4,74,838** ஆகவும், பரப்பளவு **108.65** சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் `**113.46** கோடியாகவும் உள்ளது.

**2015–16** ஆம் ஆண்டில் கீழ்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

- ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் `**230.00**கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தமிழ்நாடு குடிநீா வடிகால் வாரியம் மூலம் கோரப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளது.

**2.19.6 ஈரோடு மாநகராட்சி**

ஈரோடு மாநகராட்சி **01.01.2008** அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. **2011** ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை **4,98,129** ஆகவும், பரப்பளவு **109.52** சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் `**155.65** கோடியாகவும் உள்ளது.

**2015–16** ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன:

- சிறப்பு சாலைத் திட்டத்தின் கீழ் **27.13** கி.மீ. நீள சாலைகள் `**25.86** கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளபட்டுள்ளது.

- தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திடம் கடனாக `**86.53** கோடி மதிப்பீட்டில் **100.02** கி.மீ நீளத்தில் **341** சாலைகள் சீரமைப்புப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

- உட்கட்டமைப்பு மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் மற்றும் ஸ்வச் பாரத் மிஷன் திட்ட நிதியின் கீழ் **11** நவீன கழிப்பிடங்கள் கட்டும் பணி `**1.42** கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

- ஸ்வச் பாரத் மிஷன் திட்டத்தில் **3554** தனி நபர் கழிவறை கட்டுதல் பணி `**4.26** கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

- தேசிய சுகாதார இயக்கத் திட்டத்தின் கீழ் ஐந்து புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் `**2.47** கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

- உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதியின் கீழ் சமுதாயக் கழிப்பிடங்களின் மூலம் எரிவாயு தயாரிக்கும் கலன் அமைத்தல் மற்றும் எரிவாயு தகன மேடைக்கு தேவைப்படும் எரிவாயுவை காய்கறிக் கழிவுகளிலிருந்து தயாரிக்கும் கலன் அமைக்கும் 2 பணிகள் `1.08 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

- மாநில அரசு சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் 6 எண்ணிக்கையிலான நடமாடும் கழிப்பிடங்கள் அமைக்கும் பணி `0.78 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

- திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தில் `12.77 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும் பொருட்டு முன் செயலாக்க அலகு அமைத்தல் இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் வாங்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான (AMRUT) திட்டத்தின் கீழ் `2.26 கோடி மதிப்பீட்டில்

4 பூங்காக்கள் மேம்பாடு செய்யும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### 2.19.7 திருப்பூர் மாநகராட்சி

திருப்பூர் மாநகராட்சி, **01.01.2008** அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. **2011** ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை **8,77,778** ஆகவும், பரப்பளவு **159.35** சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் **`170.69** கோடியாகவும் உள்ளது.

**2015–16**ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

- சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ், சாலை பணிகளுக்கு **`25.25** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- TUFIDCO கடனுதவி திட்டத்தின் கீழ், சாலை பணிகளுக்கு **`52.17** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- ஸ்வச் பாரத் மிஷன் திட்டத்தின் கீழ், புதிய கழிப்பிடங்கள் கட்டுதல் பணிகளுக்கு **`7.35** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் திட்டத்தின் கீழ், உயிரி எரிபொருள் ஆலை நிறுவுதல், Methane Plant அமைத்தல் மற்றும் சமையல்கூடம் கட்டுதல் ஆகிய பணிகளுக்கு `0.71 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**2.19.8.வேலூர் மாநகராட்சி**

வேலூர் மாநகராட்சி, 01.08.2008 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 5,04,079 ஆகவும், பரப்பளவு 87.91 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் `75.24 கோடியாகவும் உள்ளது.

2015–16ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

- சிறப்பு சாலை திட்டத்தின் கீழ் 23.450 கி.மீ. சாலைகளை சீரமைக்கும் பணிகளுக்காக `12.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மாநில பேரிடர் நிவாரண திட்டத்தின் கீழ் 5 கி.மீ. மழையால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும்

பணிகளுக்காக `2.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- திடக்கழிவு மேலாண்மை நிதி திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை பிரித்தெடுத்து உரமாக்கும் மையம், குப்பை சேகரிக்கும் வாகனங்கள் வாங்குவதற்கு `10.72 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ஸ்வச் பாரத் மிஷன் திட்டத்தின் கீழ் சதுப்பேரி மற்றும் சாத்துபாளையம் உரக்கிடங்கில் சுற்றுச்சுவர் மற்றும் கான்கிரீட் தளம் அமைத்தல் பணிக்கு `2.48 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான (AMRUT ) திட்டத்தின் கீழ் பசுமை இடங்கள் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்துதல் பணிக்கு `2.014 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.19.9 தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி, **05.08.2008** அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. **2011** ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை **3,70,896** ஆகவும், பரப்பளவு **90.63** சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் `**88.07** கோடியாகவும் உள்ளது.

**2015–16**ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

- குடிநீர் அபிவிருத்தி திட்டம் மற்றும் பாதாள சாக்கடை திட்டம் செயலாக்கத்தினால் சேதமடைந்த **50.640** கி.மீ. சாலைகளை சீரமைக்கவும், மழைநீர் வடிகால் கட்டவும் சிறப்புச் சாலை திட்டத்தின் கீழ் `**27.85** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, **70** சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளன.

- மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் சாலைகளை மேம்படுத்தும் பணிக்கு `**8.74** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, **47** சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் `**1.27** கோடி செலவில் ஊரணிகளை மேம்படுத்துதல், உயிரி செறிவூட்ட

சமுதாய கூட சமையலறை நிறுவுதல் மற்றும் உயிரி எரிவாயு மூலம் எரிவாயு தகனமேடை அமைத்த போன்ற பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளது

**2.19.10 தஞ்சாவூர் மாநகராட்சி**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **19.2.2014** அன்று தரம் உயர்த்தி தஞ்சாவூர் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டது. **2011** ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை **2,22,943** ஆகவும், பரப்பளவு **36.31** சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு வருமானம் `**80.57** கோடி ஆகவும் உள்ளது.

**2015–16**ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன:

- சிறப்பு சாலை திட்டத்தின் கீழ் `**16.99** கோடி செலவில் பழுதடைந்த **34.37** கி.மீ. சாலைகள் புதுப்பிக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- இடைவெளி நிரப்பும் திட்ட நிதியின் கீழ் `**0.70** கோடி செலவில் திடக்கழிவுகளிலிருந்து எரிவாயு மூலம் சமூக

சமையலறை மற்றும் எரிவாயு தகன மேடை கட்டும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

- தேசிய வாழ்வாதார இயக்க திட்ட நிதியின் கீழ் `0.35 கோடி மதிப்பீட்டில், வீடற்றவர்களுக்கு தங்குமிடம் அமைத்து தரும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

- ஸ்வச் பாரத் மிஷன் திட்டநிதியின் கீழ் `0.21 கோடி மதிப்பீட்டில் 3 இடங்களில் புதிய சமுதாய கழிவறை கட்டும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### 2.19.11 திண்டுக்கல் மாநகராட்சி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **19.2.2014** அன்று தரம் உயர்த்தி திண்டுக்கல் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டது. **2011** ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை **2,07,327** ஆகவும், பரப்பளவு **14.01** சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் **`40.50** கோடியாகவும் உள்ளது.

**2015–16** ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன :–

- சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளால் சேதமடைந்த **14.825** கி.மீ நீளமுள்ள சாலைகளை சீரமைக்க `**10.00** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் மழையின் காரணமாக சேதமடைந்த சாலைகளை சீரமைக்க `**0.70** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் உள்ள அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான (AMRUT) திட்டத்தின் கீழ் பூஙகாக்கள் அபிவிருத்தி பணிகளுக்கு `**2.14** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

- தேசிய வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நகர்ப்புற வீடற்ற ஏழைகள் தஙகும் விடுதி கட்டுவதற்கு `**0.25** கோடி நிதி

ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.

- தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் கமலாநேரு மகப்பேறு மருத்துவமனை அபிவிருத்தி செய்யும் பணிக்கு `0.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவுற்று பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

## 2.20 மாண்புமிகு முதலமைச்சரின் சிறந்த நகர்ப்புர உள்ளாட்சி விருது

சீரிய முறையில் செயலாற்றும் மாநகராட்சி, நகராட்சிகளுக்கு விருது வழங்க, **2012–13** ஆம் ஆண்டில் “**மாண்புமிகு முதலமைச்சர் விருது**” உருவாக்கப்பட்டது.

**2014–15**ஆம் ஆண்டிற்கு மதுரை மாநகராட்சி சிறந்த மாநகராட்சியாகவும் (பரிசு தொகை ரூ, **25** இலட்சம்) மற்றும் நகராட்சிகளில், புதுக்கோட்டை, மன்னார்குடி மற்றும் கோபிசெட்டிப்பாளையம் நகராட்சிகள் முறையே முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது சிறந்த நகராட்சிகளாகவும் (பரிசு தொகை முறையே `**15** இலட்சம், `**10** இலட்சம் மற்றும் `**5** இலட்சம்) தேர்வு செய்யப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2015ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின் போது, மேற்படி நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு பரிசு தொகை மற்றும் பாராட்டு பத்திரங்களை வழங்கினார்கள்.

# 3. பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை மாநகராட்சி 1688 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் நாள் அமைக்கப்பட்டது. சென்னை மாநகராட்சி, நாட்டின் மிகப் பழமையான உள்ளாட்சி அமைப்பாகவும், உலகின் இரண்டாவது பழமையான உள்ளாட்சி அமைப்பாகவும் உள்ளது.

2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் மக்கள் தொகை 67.27 இலட்சம் ஆகும். சென்னை மாநகராட்சியுடன், 2011 ஆம் ஆண்டு 42 உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டதன் மூலம் மாநகராட்சியின் பரப்பளவு 174 சதுர கிலோ மீட்டரில் இருந்து 426 சதுர கிலோ மீட்டராக அதிகரித்து, நாட்டின் நான்காவது மிகப் பெரிய மாநகராட்சியாகத் திகழ்கிறது. 329 வருட வரலாறு கொண்ட சென்னை மாநகராட்சி, தொன்மை வாய்ந்த மற்றும் நவீன உள்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளது. 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டத்தின் மூலம் சென்னை மாநகராட்சி அதன் சட்டப்பூர்வமான அதிகாரங்களைப் பெறுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 29.01.2016 அன்று முதல் சென்னை மாநகராட்சி **“பெருநகர சென்னை மாநகராட்சி”** என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு

வருகிறது. மாண்புமிகு மேயர் தலைமையிலான மன்றம் பெருநகர சென்னை மாநகராட்சியை நிர்வகித்து வருகிறது.

சென்னை மாநகராட்சியின் விரிவாக்கத்திற்கு முன்னர் இருந்த 155 வார்டுகள், 107 வார்டுகளாகவும், புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புப் பகுதிகள் 93 வார்டுகளாகவும் வரையறுக்கப்பட்டு தற்போது மொத்தம் 200 வார்டுகளாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கெனவே இருந்த 10 மண்டலங்கள் 7 மண்டலங்களாக மறு சீரமைக்கப்பட்டு, தற்போது இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகள் 8 புதிய மண்டலங்களாக வரையறுக்கப்பட்டு, மண்டலங்களின் மொத்த எண்ணிக்கை 10ல் இருந்து தற்போது 15ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இம்மண்டலங்கள், நிர்வாக வசதிக்காக 3 வட்டாரங்களாக அதாவது, வடக்கு வட்டாரம், மத்திய வட்டாரம், தெற்கு வட்டாரம் எனப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரமும் 5 மண்டலங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வட்டாரங்கள் துணை / இணை / கூடுதல் ஆணையர் நிலையில், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகின்றன.

அரசு, மாநகராட்சி விரிவாக்கத்திற்குப் பின்னர் கூடுதல் பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்காக, மனிதவள

ஆதாரங்களை மேம்படுத்தும் நோக்கில் கூடுதலாக 784 பணியிடங்களை உருவாக்கி அனுமதியளித்துள்ளது. இந்த நடவடிக்கை, முடிவுகளை துரிதமாக மேற்கொள்ளவும், பொதுமக்களின் குறைகளைக்களையவும் ஏதுவாக அமைந்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்து வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை தற்போது, 11,87,564 ஆகவும், தொழில்வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை 1,21,805 ஆகவும் உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 2015–16 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாயான `2,920.77 கோடியில், சொத்து வரி மூலம் `600 கோடி வசூலிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, `586.46 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 2014–15 ஆம் ஆண்டில் சொத்து வரி மூலம் `581.63 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 2014–15 ஆம் ஆண்டில் மூலதன செலவினங்கள் `1672.92 கோடி ஆகும். மேலும், 2015–16 ஆம் ஆண்டில் மூலதன செலவினங்கள் `1,765.28 கோடி ஆகும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் கடந்த 5 ஆண்டுகளில் எவ்வாறு இருந்தது என்று கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | வருமானம் (` கோடியில்) | வருவாய் உயர்வு (%) |
|---|---|---|
| 2011 – 12 | 1239.13 | 17.37 |
| 2012 – 13 | 1591.41 | 28.43 |
| 2013 – 14 | 2066.13 | 29.83 |
| 2014–15 | 2195.90 | 6.28 |
| 2015 – 16 | 2920.77 | 33.00 |
| **சராசரி** | **2002.67** | **22.98** |

### 3.1 அம்மா உணவகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஏழை எளிய மக்கள், தினக்கூலிகள், ஆட்டோ ஓட்டுநர்கள் போன்றவர்கள், சுகாதாரமான மற்றும் தரமான உணவுகளை மலிவு விலையில் வயிறார உண்ணும் வகையில் வழங்குவதற்காக, அம்மா உணவகங்கள் துவங்க உத்தரவிட்டார்கள். இதன் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் 293 அம்மா உணவகங்களும், சென்னை மாநகரிலுள்ள அரசு மருத்துவமனைகளில் 7 அம்மா உணவகங்களும், மொத்தம் 300 அம்மா உணவகங்கள்

துவங்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஒரு இட்லி ஒரு ரூபாய்க்கும், பொங்கல் ஐந்து ரூபாய்க்கும், பலவகை சாதங்கள் ஐந்து ரூபாய்க்கும், தயிர் சாதம் மூன்று ரூபாய்க்கும், மற்றும் மாலை நேரத்தில், இரண்டு சப்பாத்தி, பருப்பு கடைசல் மூன்று ரூபாய்க்கும் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**18.07.2016** வரை அம்மா உணவகங்கள் மூலமாக **31.81** கோடி இட்லிகளும், **12.49** கோடி பலவகை சாதங்களும், **15.27** கோடி சப்பாத்திகளும், விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதனால் ஒவ்வொரு நாளும் சுமார் மூன்று இலட்சம் ஏழை எளிய மக்கள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டமானது சமூக பொருளாதார நிபுணர்களால் உலகில் மிக சிறந்த திட்டமாகவும், சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாக விளங்குவதாகவும் பாராட்டப்படுகிறது. மேலும் மீதமுள்ள **107** அம்மா உணவகங்கள் அக்டோபர் **2016** க்குள் திறக்கப்பட உள்ளன.

### 3.2 அம்மா குடிநீர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.02.2016 அன்று சென்னை பெருநகரில், எதிர்மறை சவ்வூடு பரவுதல் (Reverse Osmosis) மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை தாங்களும் பருக வேண்டும் என்று ஏழை எளிய மக்களின்

விருப்பத்திற்கிணங்க, "**அம்மா குடிநீர் திட்டம்**", என்ற புதிய திட்டத்தினை செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

இதன்படி முதற்கட்டமாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏழை எளிய மக்கள் அதிகம் வசிக்கும் **20** இடங்களில், எதிர்மறை சவ்வூடு பரவுதல் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் `**3.00** கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மணிக்கு 2000 லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும். மக்களின் தேவைக்கேற்ப இதன் உற்பத்தி திறன் மேலும் அதிகரிக்கப்படும்.

மேலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஆய்வகங்கள் மூலம் பரிசோதிக்கப்பட்டு அதன் தரம் உறுதி செய்யப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு விலை ஏதுமின்றி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஒவ்வொரு குடும்பத்திற்கும், நாளொன்றுக்கு 20 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் ஏழை எளிய மக்கள் எளிதில் குடிநீர் பெறும் வகையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தானியங்கி நிலையத்தில், ஸ்மார்ட் கார்டு (Smart Card) மூலம் குடிநீர் பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் மூலம் 18.07.2016 வரை சராசரியாக 11,000 குடும்பங்கள் நாளொன்றுக்கு 20 லிட்டர் வீதம் மொத்தம் 1.73 கோடி லிட்டர், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர். இத்திட்டத்தில் மேலும், **30** இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க கூடுதல் இடங்கள் கண்டறியப்பட்டுள்ளது. அதிகம் வசிக்கும் பகுதிகளில்,

30 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

### 3.3 தேசிய நகர்ப்புர சுகாதாரத்திட்டம்

தேசிய நகர்ப்புர சுகாதார திட்ட வழிகாட்டுதல்களின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மருத்துவ வசதிகள் ஒருங்கிணைக்கப்பட்டு 50,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று நிர்ணயம் செய்யப்பட்டு, 140 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 136 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள நான்கில் கட்டடப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதுநாள் வரை நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களில், தொற்று நோய்கள், தொற்றா நோய்களுக்கு மட்டும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. தற்போது மேற்கூறிய மருத்துவ சேவைகளுடன் கர்ப்பகால முந்தைய மற்றும் பிந்தைய கவனிப்புகள், குழந்தைகள் மருத்துவம் போன்ற மருத்துவச் சேவைகளும் ஒரே குடையின் கீழ் அளிக்கப்படுகின்றன. மேலும் 2.5 இலட்சம் மக்கள் தொகைக்கு ஒரு நகர்ப்புர சமுதாய சுகாதார நிலையம் என, மண்டலத்திற்கு ஒன்று வீதம் (100 படுக்கைகள், பகுப்பாய்வு கூட வசதியுடன்) 15 நகர்ப்புர சமுதாய நல நிலையங்கள் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு,

தற்போது 9 நகர்ப்புர சமுதாய நல நிலையங்கள் வெற்றிகரமாக செல்பட்டு வருகின்றன.

இத்திட்டமானது சென்னை நகர்ப்புர சுகாதார சங்கத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. தேசிய நகர்ப்புர சுகாதார திட்டத்திலிருந்து `172.70 கோடி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், 1025 மகளிர் குழுக்கள் (மகிள ஆரோக்கிய சமிதி), குடிசை வாழ் பகுதியில் வசிக்கும் பின்தங்கியுள்ள மக்களுக்கும், பெண்களுக்கும் சுகாதாரத்தைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

### 3.4 ஆயுஷ் மருத்துவமனைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 3 ஆயுஷ் மருத்துவமனைகள் (ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, மற்றும் ஹோமியோபதி) மண்டலம் 4,10 மற்றும் 13ல் ஆரம்பிக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. இங்கு ஐந்து வகையான இந்திய மருத்துவச் சேவைகள் ஒரே குடையின் கீழ் வழங்கப்படுகின்றன. இதற்கென ஐந்து இந்திய மருத்துவர்களைக் கொண்டு ஐந்து வகையான இந்திய

மருத்துவச் சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்த மருத்துவமனைகளில் மார்ச் 2016 முதல் நாள் ஒன்றுக்கு 200 புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றன. இதுவரையில் 54,000 புறநோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்று பலன் அடைந்துள்ளனர்.

### 3.5 வீடற்றோருக்கான காப்பகங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி கடந்த ஜூன் 2013 முதல் 37 எண்ணிக்கையில் வீடற்றோருக்கான காப்பகங்களைத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் நடத்தி வருகிறது.

**காப்பகங்களின் விவரம்**

| எண் | காப்பகத்தின் வகை | மொத்தம் |
|---|---|---|
| 1 | ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் | 1 |
| 2 | சிறுவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் | 5 |
| 3 | சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் | 4 |
| 4 | ஆண்கள் மற்றும் பெண்கள் | 3 |
| 5 | குடும்பம் | 1 |
| 6 | ஆண்கள் மட்டும் | 10 |
| 7 | பெண்கள் மட்டும் | 9 |
| 8 | மனநலம் பாதிக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் | 4 |
| | மொத்தம் | 37 |

இந்த காப்பகங்களின் மூலம், பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை **5138** ஆகும். தற்போது **974** பயனாளிகள் தங்கி பயனடைந்து வருகிறார்கள். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி **33** எண்ணிக்கையில் புதிய வீடற்றோருக்கான காப்பகங்களை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

**3.6. பொது சுகாதார தடுப்பு நடவடிக்கைகள்:**

**3.6.1 தெரு நாய்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துதல்**

பெருநகர சென்னை மாநகராட்சி தெருநாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த **3** இனக்கட்டுப்பாட்டு மையங்களில், இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைகளைச் செய்து வருகிறது.

சென்னை மாநகராட்சி கால்நடைபிரிவின் மூலம் பொதுமக்களின் புகார்களின் அடிப்படையில் தெரு நாய்கள் பிடித்து வரப்பட்டு விலங்குகள் இன கட்டுப்பாட்டு விதிகளின்படி, நாய் இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, வெறி நோய் தடுப்பூசி போடப்பட்டு, அடையாளக் குறியிடப்பட்டு அவைகள் பிடிக்கப்பட்ட இடங்களிலேயே மீண்டும் சிகிச்சைக்கு பிறகு விடப்படுகின்றன.

கடந்த **2015–16**ம் ஆண்டில் **21,534** தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மொத்தம் **12** நாய் பிடிக்கும் வாகனங்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், தனியார் நாய் பிடிப்போர் இப்பணியில் ஈடுபடுத்தப்படுள்ளனர்.

சிறப்பு திட்டமாக இதுவரையில், **60,826** தெருநாய்களுக்கு வெறி நோய் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

### 3.6.2 கொசு தடுப்பு நடவடிக்கைகள்:

கொசுத்தொல்லை மற்றும் கொசுவினால் பரவும் நோய்களை தடுப்பதற்கும் நீர்வழித்தடங்களின் அருகில் வசிக்கும் பொது மக்களுக்கு **5.90** இலட்சம் விலையில்லா கொசு வலைகள் `**9.97** கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், **5** இலட்சம் நொச்சி செடிகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**41** வாகனத்தில் எடுத்துச்செல்லும் புகைப்பரப்பும் இயந்திரங்கள் மற்றும் **260** கையினால் எடுத்துச்செல்லும் புகைப்பரப்பும் இயந்திரங்கள் மூலம் கொசு மருந்து அடிக்கப்பட்டு கொசுக்கள் கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனுடன் **568** கைத் தெளிப்பான்கள் கொண்டு

மழைநீர்வடிகால்வாய்களில் கொசுப்புழு மருந்துகள் தெளிக்கப்பட்டு கொசுக்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனுடன் கொசுப் புழுக்களை உண்ணும் கம்புஃசியா என்னும் மீன்கள் நீர்நிலைகளில் விடப்பட்டு கொசுப்புழுக்கள் அழிக்கப்படுகின்றன.

இத்துடன் **2015–16** நிதியாண்டில் சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட நீர்வழித்தடங்களில் உள்ள ஆகாயத்தாமரைகள் மற்றும் மிதக்கும் பொருட்களை அகற்றி கொசு உற்பத்தியை தடுத்து தடையில்லா நீர் ஓட்டத்தினை ஏற்படுத்தும் வகையில் நீரிலும் நிலத்திலும் செல்லக்கூடிய ஆம்பிபியன் (Amphibian) உபகரணம் ஒன்று `**9.97** கோடி (உபகரணத்தினை ஐந்து வருடகாலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்) செலவுடன் ஃபின்லாந்து நாட்டிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

### 3.7 இறைச்சிக்கூடங்கள்

பொது மக்களுக்கு சுகாதாரமான இறைச்சியை அளிப்பதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியில் **3** இறைச்சிக்கூடங்கள் நேரடி கண்காணிப்பில் செயல்பட்டு வருகின்றன. இங்கு ஆடு/மாடுகள் கால்நடை உதவி மருத்துவர்கள் மூலம் பரிசோதனை செய்த பின்னரே

வெட்டப்படுகிறது. இதில் கூடுதலாக மண்டலம் 7ல் கள்ளிக்குப்பத்தில் ஆட்டிறைச்சிக் கூடம் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. மண்டலம் 1 மற்றும் 15ல் புதியதாக ஆட்டிறைச்சிக் கூடங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த இறைச்சி கூடங்களில், கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலைகள் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் வழிகாட்டுதல்களின்படி செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஒரு நாளைக்கு 5 மெட்ரிக் டன் திறனுடைய இரண்டு சாண எரிவாயு ஆலைகளை, பெரம்பூர் இறைச்சி கூடத்தில் நிறுவி, அனைத்து இறைச்சிக்கூடங்களில் ஏற்படும் மொத்த திடக்கழிவுகளை, விஞ்ஞான முறையில் அழிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.8 கல்வித்துறை

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் வாயிலாக 119 தொடக்கப் பள்ளிகள், 92 நடுநிலைப் பள்ளிகள், 38 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 32 மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 281 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 200 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. பெருநகர

சென்னை பள்ளிகளில், 88,327 மாணவ/மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முழுமையான மற்றும் தரமான கல்வி, ஒவ்வொரு குழந்தையையும் சென்று அடைய வேண்டும் என்ற உயரிய கொள்கையோடு செயல்பட்டு வரும் சென்னை பள்ளிகள், தனியார் பள்ளிகளுக்கு இணையாக போட்டிபோடும் அளவிற்கு உயர்ந்துள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சி, பள்ளி மாணவர்களுக்கு, மருத்துவம், பொறியியல், கலை, சட்டம் போன்ற மேல்படிப்புகளை படிப்பதற்கு அவர்கள் படித்து முடிக்கும் காலம் வரை ஊக்கத் தொகை வழங்குகின்றது. 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு, விலையில்லா சீருடை தையல் கூலியுடன் வழங்கப்படுகிறது.

10 மற்றும் 12 ஆம் வகுப்பு, மாணவ மாணவியர்கள் மாலை சிறப்பு வகுப்பில் சோர்வின்றி படிக்க, புரதச்சத்துமிக்க, சுவையான 100கிராம் **"சுண்டல்"** தினமும் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு ஓவியம், இசை மற்றும் நடனம் ஆகியவற்றிற்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்க கலை ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வள வகுப்பறை (Smart Class) மூலம் மாணவ, மாணவியர்களுக்கு, தனியார் பள்ளிகளுக்கு

இணையாக கணிப்பொறியை தாமே இயக்கி தகவல் தெரிந்து கொள்ளும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

மேல்நிலைப் பள்ளிகளில், கண்காணிப்பு கேமராக்கள் மாணவிகளின் பாதுகாப்பிற்காக பொருத்தப்பட்டுள்ளன. மாணவ மாணவிகளின் பொது அறிவை வளர்க்கும் வகையில் அனைத்து வகுப்புகளுக்கும் தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகள் வழங்கப்பட்டு படிக்கச் செய்யப்படுகிறது. சென்னை மழலையர் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் மற்ற பள்ளிகளைப் போல் விலையில்லா சீருடை மற்றும் காலணிகள் வழங்கப்படுகிறது.

70 உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில், கற்றல் கற்பித்தல் தொய்வின்றி சிறந்து மேலோங்க மின்னாக்கி பொருத்தப்பட்டுள்ளது. தகுந்த குடும்ப சூழ்நிலை மற்றும் சமுதாய சூழ்நிலை இல்லாத மாணவ/மாணவியர்களின் நலனுக்காக சென்னை மேல்நிலைப் பள்ளி, சுப்பராயன் தெரு, சேத்துபட்டு மற்றும் சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டை, ஆகிய இரண்டு பள்ளிகளில் அம்மா உண்டு உறைவிடப் பள்ளி துவங்கப்பட்டு, அங்கு பயின்ற மாணவர்கள் 100 சதவிகிதம் தேர்ச்சி விழுக்காட்டை பெற்றுள்ளனர்.

**3.9 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMCDM)**

வளர்ந்து வரும் சென்னை மாநகரின் உள்கட்டமைப்பை, உலகதரத்திற்கு இணையாக மேம்படுத்த, மாண்புமிகு தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்ட சிறப்பான திட்டம் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டமாகும். இந்த சிறப்பு திட்டத்தின் கீழ் கடந்த **5** ஆண்டுகளில் தமிழக அரசினால் **`1,488** கோடி நிதி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் சுமார் **1,146.67 கி.மீ.** நீளமுடைய சாலைகளும், **170.69 கி.மீ.** நீளமுடைய மழைநீர் வடிகால்வாய்களும், **238.83 கி.மீ.** நீளமுடைய நடைபாதை பணிகளும், **12,952** எண்ணிக்கையிலான ஆற்றல்மிகு தெரு மின் விளக்குகள் அமைக்கும் பணிகளும், **`1,313.15** கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இத்திட்டத்தின் ஒருங்கிணைந்த செயல்பாட்டினால் விரிவாக்கப்பட்ட சென்னை பகுதி மக்களின் நீண்ட நாள் கனவான, சென்னை மையப்பகுதியில் உள்ள கட்ட அமைப்பு வசதிகளுக்கு இணையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

### 3.10 சாலை பராமரிப்பு திட்டங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சியால் **387** கி.மீ. நீளமுடைய **471** பேருந்து தடசாலைகளும், **5525** கி.மீ. நீளமுடைய **33,374** உட்புறசாலைகளும், பராமரிக்கப்பட்டு வருகிறது. பேருந்து சாலைப் பணிகள் யாவும் புதிய நடைமுறைகள் புகுத்தப்பட்டும், நவீன இயந்திரங்களை பயன்படுத்தியும் மேற்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி பெருநகர சென்னை மாநகராட்சி வரலாற்றிலேயே முதன் முதலாக, சாலைப் பணியினை ஆரம்பிக்கும் முதல் முடியும் வரை, பணிகளை கண்காணிக்க, தரத்தினை உறுதி செய்ய திட்ட மேலாண்மை கலந்தாலுநர் (Project Management Consultant) நியமித்து அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அமைக்கப்படும் சாலையின் உயரம் அதிகமாகாமல் இருக்க அனைத்து சாலைகளிலும் நவீன மில்லிங் இயந்திரம் கொண்டு சாலையினை அகழ்ந்தெடுத்து சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சாலைகள் சாய்தளம்

(CAMBER), டி.பி.எம். மற்றும் பி.சி. ஆகிய மூன்று அடுக்குகளாக அமைக்கப்படுகிறது.

முதன் முறையாக 9 மீட்டர் (30 அடி) அகலம் கொண்ட எலக்ட்ரானிக் சென்சார் பேவர் இயந்திரம் மூலம் அமைக்கப்படுவதால் சாலைகளின் மேற்பரப்பு சீராகவும், வாகன போக்குவரத்திற்கு இலகுவாகவும் அமைகிறது. அனைத்து சாலைகளும் 5 கட்ட தர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

அனைத்து சாலைகளிலும் சாலை பயன்படுத்துவோரின் பாதுகாப்பிற்காக தெர்மோ பிளாஸ்டிக் வண்ணக் கோடுகளும், இரவில் மிளிரும் மிளிர்வான்களும் (studs) அமைக்கப்படுகின்றன. மேலும் மரங்களை சுற்றிலும் மழைநீர் செல்லும் வகையில், கான்கிரீட் ஜாலிகள், மழைநீர் செல்லும் வகையில், சாலைகளின் இரு ஓரங்களிலும் நீர் தடம் (water table) அமைத்தல், வேகத்தடைகள் மற்றும் எச்சரிக்கை பலகைகள் அமைத்தல், போன்ற போக்குவரத்து மேம்பாட்டு பணிகளும் ஒட்டுமொத்தமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறான சிறந்த தொழில் நுட்பத்தில் 2015–16ஆம் நிதியாண்டில் 168 கி.மீ. நீளமுள்ள 194 எண்ணிக்கையிலான பேருந்து தடசாலைகள் `414.59 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டது. இச்சாலைப் பணிகளை மேற்கொள்ள

தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2014–15ல் `74.88 கோடியும், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2015–16ல் `242.24 கோடி ரூபாயும், தமிழக அரசினால் நிதி வழங்கப்பட்டது. மேலும் 72.65 கி.மீ நீளமுடைய 92 சாலைகள் `161.70 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர சாலை உள்கட்டமைப்பு திட்டம் 2015–16ல் கீழ் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிகள் 2016 ஆகஸ்ட் மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

மேலும் தமிழ்நாடு பேரிடர் மீட்பு நிதியின் கீழ் 40.82 கி.மீ நீளமுடைய கடந்த பெருமழையில் பழுதடைந்த 103 பேருந்து தட சாலைகளில் `75.45 கோடி மதிப்பீட்டில் தற்காலிக சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இச்சாலைப் பணிகள் 2016 ஆகஸ்ட் மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

இவ்வாறு அமைக்கப்பட்ட சாலைகள் கடந்த 100 ஆண்டுகளில் சென்னை மாநகர் கண்டிராத 2015ன் கனமழையிலும் சேதமடையவில்லை. மேலும் எதிர்பாராத இருகோடைகால கனமழையிலும் எவ்வித சேதமும் ஏற்படவில்லை. நவீனங்களை புகுத்தி சிறந்த முறையில் சாலைப்பணிகள் செய்ததற்கு இதுவே சான்றாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி வரலாற்றிலேயே முதல் முறையாக கடந்த ஐந்தாண்டுகளில் மொத்தம் **33,374** உட்புறசாலைகளில் பழுதடைந்த **17,056** சாலைப்பணிகள் புனரமைப்பிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டு **`2,474.41** கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், **2015–16** ஆம் நிதியாண்டில் உட்புறச்சாலைகள், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படைவசதி மேம்பாட்டு நிறுவனம் திட்டம்–**1**, திட்டம்–**2**, மூலதனநிதி மற்றும் தமிழ்நாடு பேரிடர்மீட்பு நிதி (துற்காலிக சீரமைப்பு) வாயிலாக மொத்தம் **8,137** சாலைப்பணிகள் **`704.19** கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு **5,377** சாலைப்பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள சாலைப்பணிகள் **2016** ஆகஸ்டு மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

### 3.11 இயந்திர வாகனம் சாரா போக்குவரத்தை ஊக்குவித்தல்

இந்தியாவிலேயே முதல் முறையாக, இயந்திர வாகனம் சாரா போக்குவரத்து திட்டத்தை (Non–Motorised Transport) ஏற்று செயல்படுத்தும் முதல் மாநகராட்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி விளங்குகிறது.

பாதசாரிகளின் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மாசுபடுதல் மற்றும் வாகன நெருக்கடி போன்றவற்றை கருத்தில்கொண்டு இயந்திர வாகனம் சாரா போக்குவரத்தினை, (Non Motorised Transport) ஊக்குவிப்பதற்காக நடைபாதைகளை 5 அடியிலிருந்து 10 அடியாக அகலப்படுத்தும் திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படுகின்றது. பாதசாரிகளின் உரிமைகளை உறுதி செய்யும் பொருட்டு, குறிப்பாக சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரான முதியோர்கள், பெண்கள், குழந்தைகள், மாணவ மாணவியர் மற்றும் மாற்றுதிறனாளிகள் போன்றோர்களின் வசதிக்காக 34 பேருந்து தட சாலைகளில், முதற்கட்டமாக நடைபாதை மேம்பாட்டு பணிகள் `21.88 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 12 நடைபாதை பணிகள் `34.75 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

முதன்முறையாக நடைபாதைகள் அமைக்கும் பணிகள் எந்த ஏற்றத் தாழ்வுமின்றி பாதசாரிகளும், மாற்றுதிறனாளிகள் பயன்படுத்தும் வீல் சேர்களும் செல்வதற்கு, ஏதுவாக சாலையின் முழு நீளத்திற்கும் ஒரே உயரத்தில் அமைந்திருக்கும் வகையில் 15 செ.மீ. மட்டத்தில் அமைக்கப்படுகிறது. சாலைகளின் சந்திப்புக்களில் இதே அளவில் இருக்கும் வகையில் டேபிள் டாப்

(Table Top) முறையில் நடைபாதைகள் அமைக்கப்பட்டு அவை வேகத்தடைகளாகவும் பயன்படுகிறது.

அனைத்து கட்டிடங்களின் முகப்பிலும் வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக பெருநகர சென்னை மாநகராட்சி செலவிலேயே சாய்தளங்கள் (Ramp) அமைக்கப்படுகிறது. நடைபாதைகளில் இடையூறாக அமைந்துள்ள சேவை நிறுவனங்களின் பெட்டகங்கள், மின் மாற்றிகள் ஆகியவை நடைபாதை ஓரத்திற்கு மாற்றி அமைக்கப்பட்டும், வாகனங்கள் நிறுத்துவதை தவிர்க்கும் பொருட்டு கிரானைட் தடுப்பான்கள், நடைபாதையின் குறுக்கே அமைக்கப்பட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அமைக்கப்படும் நடைபாதைகள் பாதசாரிகள் மிகவும் பாதுகாப்பாக செல்லும் வகையில் உள்ளதால் இப்பணிகளுக்கு பொதுமக்களிடம் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. மேலும் இப்பணிகளுக்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு **5** தேசிய அளவிலான விருதுகள் கிடைத்துள்ளது.

**3.12 சிறப்பு திட்டங்கள்:—**

**மெரினா கடற்கரையைச் சீரமைக்கும் திட்டம்**

மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தின் ஒருபகுதியாக, காமராஜர் சாலை மேற்கு பகுதியில் உள்ள வெவ்வேறு கட்டடங்களின் மதில் சுவர்கள், மற்றும் நடைபாதையை ஒரே மாதிரியாக சீரமைக்க திட்டமிடப்பட்டது. இதில் புதைந்தநிலையில் மற்றும் சேதமடைந்த கல்தூண்களை மாற்றி, புதிய கல்தூண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இக்கல்தூண்களுக்கிடையே கலைநயம் மிக்க துருபிடிக்காத, வார்த்தெடுக்கப்பட்ட இரும்பாலான கிரில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்காக மொத்தம் `33.10 கோடி மதிப்பில் திட்டம் தீட்டப்பட்டு பணி நடைபெற்றுவருகிறது. இப்பணி இது நாள் வரை 90 சதவிகிதம் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் அக்டோபர் 2016 இறுதிக்குள் செய்து முடிக்கப்படும்.

### 3.13 2016–17 ம் ஆண்டில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள்

#### 3.13.1. தியாகராய சாலையில் பாதசாரிகள் வளாகம்

சென்னையின் மிகப் பிரபலமான வியாபார பகுதியான, பாண்டி பஜார் (தியாகராய நகர்) பகுதி பாதசாரிகள் வளாகமாக புதிய வடிவமைப்புடன் மேம்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தற்போதுள்ள வாகன போக்குவரத்தினைக் கட்டுப்படுத்தி சாலை முழுவதும் தொடர்ச்சியான நடைபாதை, தனிப்பட்ட பேருந்து தடம் மற்றும் சைக்கிள் பாதை அமைக்கப்படும்.

இப்பகுதியில் சிற்றுந்துகளின் பயன்பாடு முறைப்படுத்தப்படும். இந்தச் சாலையைக் குறிப்பாக, மாற்றுத்திறனாளிகள் எளிதில் பயன்படுத்த இயலும் வகையில் உருவாக்கப்படும். இத்திட்டத்தின் ஒருபகுதியாக சாலை தளவாடங்கள், போக்குவரத்து குறியீட்டு பலகைகள் மற்றும் பலஅடுக்கு வாகன நிறுத்தம் ஆகியவை அமைக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி (TNSUDP) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட உள்ளது.

### 3.13.2. சீர்மிகு நகரம் (Smart City)

மத்திய நகர்ப்புர மேம்பாட்டு அமைச்சகத்தால், சீர்மிகு நகரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 20 நகரங்களில் ஒன்றாக சென்னை தேர்வாகியுள்ளது. சீர்மிகு நகரத்தை உருவாக்க “சென்னை ஸ்மார்ட் சிட்டி லிமிடெட்” என்ற பெயரில் தமிழக அரசு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் பங்குகள் 50 : 50 என்ற விகிதத்தில் இந்நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது.

சீர்மிகு நகர திட்டத்தின் தொலை நோக்கு பார்வையின்படி, பெருநகர சென்னை மாநகரத்தை தன்னிறைவுடன், நிலையான சுற்றுச்சூழல் மற்றும் சீரிய பொருளாதாரத்தை கொண்ட உலக தரத்துடன் ஆன வணிக நகரமாக மாற்றப்படும். பல்வேறு போக்குவரத்து வழிகளான, இரயில் போக்குவரத்து, மாநகர

பேருந்துகள் போன்றவற்றை இணைத்து பாதுகாப்பான நடைபாதை மற்றும் சைக்கிள் தடத்தை மேம்படுத்த உள்கட்டமைப்புகள், தனிநபர் பயன்பாட்டிற்கு உகந்த, நகர்ப்புர போக்குவரத்து இயக்க மேம்பாட்டு திட்டம் மேற்கொள்ளபடவுள்ளது. சிறந்த தெரு விளக்கு, மேம்படுத்தப்பட்ட திடக்கழிவு மற்றும் மழைநீர் மேலாண்மை அத்துடன் தொடர்ச்சியான நீர் வழங்கல் ஆகியவை முன்மொழியப்பட்ட மற்ற திட்டங்கள் ஆகும்.

மக்களின் கருத்துகள் அடிப்படையில் தியாகராயநகர் "பகுதி சார்ந்த வளர்ச்சி" திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. பகுதி சார்ந்த வளர்ச்சி திட்டத்தின் கீழ் `877.92 கோடி மதிப்பீட்டில் 40 கூறுகள் அடங்கிய பணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் நகரம் முழுவதும் செயல்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் `488.31 கோடி மதிப்பீட்டில் 8 கூறுகள் அடங்கிய பணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

### 3.13.3. அடல் புனரமைப்பு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)

அடல் புனரமைப்பு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் (AMRUT) 2015–2016 திட்டத்தின் கீழ், பெருநகர

சென்னை மாநகராட்சியில் எட்டு பூங்காக்கள் `11.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

### 3.14 பாலங்கள்

தங்குதடையற்ற போக்குவரத்தினை உறுதி செய்யும் வகையில் சென்னை மாநகராட்சியால், ஆறுகள் மற்றும் கால்வாயின் குறுக்கே உள்ள பாலங்கள், தரைமட்ட பாலங்கள் மற்றும் நடை பாலங்கள், பேருந்து சாலை சந்திப்புகளில் உள்ள மேம்பாலங்கள் மற்றும் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே உள்ள மேம்பாலங்கள் என மொத்தம் 272 பாலங்களும், இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே 16 சுரங்கப்பாதைகள் மற்றும் முக்கிய பேருந்து சாலைகளில் 6 பாதசாரிகள் சுரங்கப்பாதைகளும், சிறந்த முறையில் பராமாரிக்கப்பட்டு வருகின்றன. கடந்த 5 ஆண்டுகளில் `114.95 கோடி மதிப்பீட்டில் 5 மேம்பாலங்கள், 10 சிறு பாலங்கள் மற்றும் 3 சுரங்கப்பாதைகள் புதிதாக பல்வேறு இடங்களில் கட்டப்பட்டும் மற்றும் பல்வேறு இடங்களில் ஏற்கனவே உள்ள மேம்பாலங்களை மேம்படுத்தும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இதில் `16.66 கோடி மதிப்பீட்டில், கத்திவாக்கம் நெடுஞ்சாலை – காக்ரேன் பேசின் சாலையில், மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28.02.2016 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. இப்பாலத்தினால் கொருக்குப்பேட்டை பகுதியில் உள்ள சுமார் 5 லட்சம் பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர். மேலும் தற்போது 21 பாலங்கள் `21.20 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் டிசம்பர் 2016க்குள் முடிக்கப்படும். டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதியில், எண்ணூர் நெடுஞ்சாலை இரயில்வே சந்திக்கடவு 2எ மற்றும் மணலி சாலை இரயில்வே சந்திக்கடவு 2பி–யை ஒருங்கிணைத்து வடிவமைப்பு, பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானம் ஒப்பந்தம் முறையில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கான ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

### 3.15 தெருவிளக்கு

பெருநகர சென்னை மாநகராட்சி 2,57,689 தெரு விளக்குகளைப் பராமரித்து வருகிறது. குறைந்த மின்சாரம் உபயோகிக்கும் தெரு விளக்குகளைப் பயன்படுத்தி, மகளிர், வயதானவர்கள் மற்றும் சாலை பயன்படுத்துவோர்களின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு, தெருக்களில் சீரான வெளிச்சம் அமைப்பது சென்னை மாநகராட்சியின் நோக்கமாகும். புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில்,

விரிவாக்கத்திற்கு முன் இருந்த சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ளது போன்று தெரு விளக்குகள் அமைக்கப்படுகின்றன. புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளின் சோடியம் ஆவி விளக்குகளை விட 45% குறைவாக மின்சாரம் உபயோகிக்கும் எல்.இ.டி தெரு விளக்குகள், 1,10,000 எண்ணிக்கையில் அமைக்கும் பணி `322 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இதுவரையில் 79,998 புதிய எல்.இ.டி. தெரு மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் எந்த ஒரு மாநகராட்சியிலும் இந்த எண்ணிக்கையில் எல்.இ.டி தெரு விளக்கு அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் மீதமுள்ள, 30,012 எல்.இ.டி. தெரு விளக்குகள் `145.64 கோடி செலவில் ஆகஸ்டு மாதம் 2016–க்குள் அமைக்கப்பட உள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சி ஒவ்வொரு மாதமும் தெருவிளக்கு மின்கட்டணமாக `6.00 கோடி தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்தி வந்தது. புதியதாக எல்.இ.டி விளக்குகளாக மாற்றி அமைத்ததால் மின்கட்டணம் மாதத்திற்கு `4.50 கோடியாக குறைந்துள்ளது. இதனால் மாதந்தோறும் மின்கட்டணம் செலுத்துவதில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு `1.50 கோடி சேமிப்பாகிறது.

**3.16 மழைநீர் வடிகால்**

பெருநகர சென்னை மாநகரில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கை தடுக்க, பெருநகர சென்னை மாநகராட்சி 7,351 எண்ணிக்கையிலான 1,894 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டமைப்பைப் பராமரித்து வருகிறது. மேலும், 48.80 கி.மீ. நீளத்திற்கு 30 நீர்வழிக் கால்வாய்களைப் பராமரித்து வருகிறது. இதில் கொடுங்கையூர் கால்வாய் (5.28 கி.மீ) கேப்டன் காட்டன் கால்வாய் (3.04 கி.மீ) பாடி குப்பம் கால்வாய் (2.78 கி.மீ) போன்ற கால்வாய்களும் அடங்கும்.

கடந்த 5 ஆண்டுகளில், `569.12 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 345 கி.மீ நீளமுடைய கூடுதல் மழைநீர் வடிகால் கட்டமைப்பின் விளைவாக, மழைக் காலங்களில் மழைநீர் தேங்கும் இடங்கள் 300 என்ற எண்ணிக்கையில் இருந்தது தற்போது நூறுக்கும் குறைவு என்ற நிலையை எட்டியுள்ளது.

விரிவாக்கத்திற்கு முன்பு இருந்த சென்னை மாநகரின் கட்டமைப்பு வசதிகளுக்கு இணையான வசதிகளை விரிவாக்கப்பட்ட பகுதிகளிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் கொள்கைப்படி, மழைக்காலங்களில் மழைநீர் தேங்காத வண்ணம் மழைநீரை

பாதுகாப்பாகச் சேகரித்து, ஏற்கனவே உள்ள குளம், ஏரிகளில் மழைநீர் சென்றடைய இணைப்புகள் ஏற்படுத்துதல், நிலத்தடி நீரை பாதுகாக்க மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் ஆரோக்கிய வாழ்விற்கான சுத்தமான சூழ்நிலைகள் ஏற்படுத்துதல் போன்றவற்றிற்காக, பெருநகர சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பகுதிகளில் கொஸஸ்தலையாறு, கூவம், அடையாறு மற்றும் கோவளம் வடிநிலப்பகுதிகளில் **1,069.40** கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டமைப்பை ஏற்படுத்த `**4,034.30** கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–7, 11 மற்றும் 12க்குட்பட்ட கூவம் மற்றும் அடையாறு வடிநிலப்பகுதிகளில் **280** கி.மீ. நீளத்திற்கு `**1,101.43** கோடி திட்ட செலவினத்தில், தமிழ்நாடு நீடித்த நிலையான நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயலாக்கத்தில் உள்ளது.

### 3.17 திடக்கழிவு மேலாண்மை

சென்னை மாநகரத்தில் நாள் ஒன்றுக்கு **5,400** மெட்ரிக் டன் குப்பை உற்பத்தியாகிறது. இத்திடக்கழிவுகளை

முதற்கட்டமாக வீடுதோறும் சென்று 5,422 மாநகராட்சியின் மூன்று சக்கர மிதிவண்டிகள் மூலம் சேகரிக்கிறது. இரண்டாம் கட்டமாக 369 நவீன குப்பை நெருக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கனரக / இலகுரக வாகனங்கள், 36 அதிக சுமை ஏற்றும் கனரக வாகனங்கள், 157 டிப்பர் வாகனங்கள் மற்றும் 12 இயந்திரப் பெருக்கிகள், 57 சக்கரத்தடை வாகனங்கள் மற்றும் 24 முன்பின்பளு தூக்கிகள் ஆகியவற்றை கொண்டு அகற்றி வருகிறது.

இப்பணிக்காக 2011 – 12 முதல் 2015 – 16 ஆண்டு வரை சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் மூலமும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் `62.25 கோடி செலவீனத்தில் நவீன குப்பை நெருக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கனரக / இலகுரக வாகனங்கள், டிப்பர் வாகனங்கள், இயந்திரப் பெருக்கிகள், சக்கரத்தடை வாகனங்கள், முன்பின் பளுதூக்கிகள், ஹைட்ராலிக் எக்ஸ்வேட்டர்கள் மற்றும் புல்டோசர்கள் என மொத்தம் 295 வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் `13.26 கோடி செலவினத்தில் 7,600 எண்ணிக்கையில் காம்பேக்டர் குப்பைதொட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, நேரடியாகவும் தனியார் நிறுவனங்கள் மூலமாகவும் **18,975** துப்புரவுப் பணியாளர்களைப் பணியில் ஈடுபடுத்தி வருகிறது. துப்புரவுப் பணியாளர்களின் வருகையினை கை விரல் ரேகை பதிக்கும் இயந்திரம் மூலம் (Bio metric attendance) வருகைப்பதிவு அனைத்து மண்டலங்களிலும் அமுல்படுத்தப்பட்டு, கண்காணிக்கப் படுகிறது. திடக்கழிவு மேலாண்மைப் பணிகளைத் திறம்பட செயல்படுத்த ஏதுவாக, குப்பை நெருக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கனரக / இலகுரக வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் செல்லும் விரிவான வழித்தட வரைபடம் தயாரிக்கப்பட்டு களப்பணி கண்காணிக்கப்படுகிறது.

மேலும், துப்புரவு பணியாளர்களுக்குப் பாதுகாப்பான பணிச்சூழலை உறுதி செய்யும் பொருட்டு அவர்களுக்கு, வாய்க்கவசம், கையுறை, மற்றும் இரவில் ஒளிரும் ஆடை ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில், விரிவாக்கம் செய்யப்பட்ட போது உருவாக்கப்பட்ட **8** மண்டலங்களில் துப்புரவு பணிகளை தனியார் மயமாக்குதலுக்கும் மற்றும் ஒருங்கிணைந்த குப்பை பதனிடுதல், கட்டிட கழிவுகளை பதனிடுதல் மற்றும் விஞ்ஞான ரீதியில் குப்பை வளாகம் சீரமைத்தல், போன்ற பணிகளை ஏற்கனவே உள்ள குப்பை கொட்டும் வளாகங்களான

கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி ஆகிய இடங்களில் நிறுவுவதற்கும் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (Detailed Feasibility Report) தயாரிக்க ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தொடக்க அறிக்கை பெறப்பட்டுள்ளது. முழுமையான சாத்தியக்கூறு அறிக்கை பெறப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளி கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 மண்டலங்களில் தற்போது 9 மண்டலங்களில் லாரி வாகன இயக்கூர்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும், வாகன இயக்கூர்தி நிலையங்கள் மணலி மற்றும் சோழிங்கநல்லூரில் `7.59 கோடி மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் மதனாங் குப்பத்தில் 2 வாகன இயக்கூர்தி நிலையங்கள் மண்டலம் 3 மற்றும் 7க்காக கட்டும் பணியும் மற்றும் திருவொற்றியூரில் மண்டலம்–1க்கான வாகன இயக்கூர்தி நிலையம் கட்டும் பணியும் `15.89 கோடி செலவில் நடைபெற்று வருகிறது .

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 200 வார்டுகளையும், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற பகுதியாக மாற்ற சென்னை மாநகராட்சி உறுதி பூண்டுள்ளது. அதன் பொருட்டு 2016–17 ம் ஆண்டில் 30 வார்டுகளை திறந்த

வெளியில் மலம் கழித்தலற்ற பகுதியாக மாற்றவும், 2017–18 ம் ஆண்டில் 70 வார்டுகளை திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற பகுதியாக மாற்றவும், மேலும் மீதமுள்ள 100 வார்டுகளை 2018–19 ம் ஆண்டில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற பகுதியாக மாற்றவும், பெருநகர சென்னை மாநகராட்சியால் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட இலக்கை அடைய, 2011 ம் ஆண்டின் குடிசைப்பகுதி மக்கள்தொகை மற்றும் நகரும் மக்கள் தொகையை கருத்திற்கொண்டு 18,900 கழிவறைகள் அமைக்க முடிவு செய்து, அதில் 2,900 கழிவறைகளை 2016–17 ம் நிதி ஆண்டில் அமைக்கவும், 6,600 கழிவறைகளை 2017–18 ம் நிதி ஆண்டில் அமைக்கவும், மற்றும் 9,400 கழிவறைகளை 2018–19 ம் நிதி ஆண்டில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது .

# 4. பேரூராட்சிகள் இயக்ககம்

நகர்ப்புர உள்ளாட்சிகள் அமைப்பில் மூன்றாம் அடுக்காக, பேரூராட்சிகள் நிர்வாகம் அமையப் பெற்றுள்ளது. பேரூராட்சிகள் நிர்வாகம், வேகமாக அதிகரித்து வரும் நகர்ப்புர மக்கள் தொகை பெருக்கத்தினை கருத்திற்கொண்டு, மேம்பட்ட சேவை வழங்குதல், கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மூலமாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட முனைப்புடன் செயல்படுகிறது.

## 4.1 நிர்வாக அமைப்பு

தமிழ்நாட்டில் **528** பேரூராட்சிகள் உள்ளன. அவை, **1920**–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

அரசாணை (நிலை) எண்.**142**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.**2**) துறை, நாள் **21.11.2014**–ன்படி ஆண்டு

வருமான உச்சவரம்பின்படி, பேரூராட்சிகள் நான்கு வகைப்பாடுகளாக கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப் பட்டுள்ளன : -

| வ. எண். | பேரூராட்சிகளின் நிலை | ஆண்டு வருவாய் (` இலட்சத்தில்) | பேரூராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சிறப்பு நிலை | 200.00 இலட்சத்திற்கு மேல் | 64 |
| 2. | தேர்வுநிலை | 100.00 இலட்சத்திற்கு மேல் 200.00 இலட்சம் வரை | 202 |
| 3. | முதல்நிலை | 50.00 இலட்சத்திற்கு மேல் 100.00 இலட்சம் வரை | 200 |
| 4. | இரண்டாம் நிலை | 50.00 இலட்சத்திற்குள் | 62 |
| | | **மொத்தம்** | **528** |

பேரூராட்சிகளின் இயக்குநர் துறையின் தலைவராவார். மண்டல அளவில் 17 மண்டல உதவி இயக்குநர்களால் நிர்வகிக்கப்பட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கண்காணிப்பின் கீழ் பேரூராட்சிகள் செயல்படுகின்றன. பல பேரூராட்சிகள் சுற்றுலா, வழிபாடு மற்றும் புராதன முக்கியத்துவம் வாய்ந்தவையாகவுள்ளன.

## 4. 2 செயல்பாடுகளும், முக்கிய சேவைகளும்

பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்குவதில் பேரூராட்சிகள் முக்கிய பங்கு ஆற்றுகின்றன. பேரூராட்சிகள்,

குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள் பராமரித்தல், பொது சுகாதாரம் பேணுதல், திடக்கழிவு மேலாண்மை, சாலைகள் சீரமைத்தல், மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதைகள் அமைத்தல், இடுகாடுகள் மற்றும் இறைச்சிக் கூடங்கள் பராமரித்தல் போன்ற பல்வேறு சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குகின்றன. இவை தவிர, பேருந்து நிலையங்கள், சமுதாயக் கூடங்கள் மற்றும் சந்தைகள் போன்ற கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிப் பராமரிக்கும் பணிகளையும் பேரூராட்சிகள் மேற்கொள்கின்றன. பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் வழங்குதல், வணிக உரிமம் வழங்குதல், வரி மற்றும் கட்டணங்கள் விதித்தல் மற்றும் வசூலித்தல், கட்டட அனுமதி அளித்தல் போன்றவை பேரூராட்சிகளின் பிற முக்கிய சட்டப்பூர்வமான செயல்பாடுகளாகும்.

## 4.3 உட்கட்டமைப்பு மேம்பாடு

பெருகிவரும் நகரமயமாதல் மற்றும் வேலைவாய்ப்பு, கல்வி, மருத்துவம் மற்றும் தரமான வாழ்க்கை ஆகியவற்றுக்காக அருகாமையிலுள்ள கிராமப்புரங்களிலிருந்து மக்கள் நகர்ப்புரங்களுக்கு இடம் பெயர்வதால் அதிகரித்து வரும் நகர்ப்புர மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக பேரூராட்சிகளில், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை, பாதாள சாக்கடைத் திட்டங்கள், சாலைகள், தெருவிளக்குகள்,

எரிவாயு தகனமேடைகள், இறைச்சிக் கூடங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் போன்ற முக்கிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி அவற்றினை மேம்படுத்திட வேண்டிய மிகப் பெரிய தேவை பேரூராட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த நிதி ஆதாரத்தினை உயர்த்துவதோடு, இவை தவிர மாநில அரசினால் வழங்கப்படும் மாநில நிதி ஆணையத்தின் நிதிப்பகிர்வின் கீழ் வரும் நிதி ஆதாரத்தினை கொண்டு, ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம், நபார்டு கடன் உதவி மற்றும் குறைந்தபட்ச தேவைத்திட்டம் போன்ற முன்னோடித் திட்டங்களின் மூலமும் அடிப்படை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4.4 ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (IUDM)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, முன்னோடித் திட்டமான ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தை **2011** ஆம் ஆண்டு துவக்கியுள்ளார்கள்.

பேரூராட்சிகளுக்கு தேவையான அனைத்து வகையான உட்கட்டமைப்பு பணிகளும் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித்

திட்டம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **2011–12** ஆம் ஆண்டு முதல் **2015–16** ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ், பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் மேம்பாடு, சாலை மேம்பாடு மற்றும் மழைநீர் வடிகால்கள் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு **`1099.54** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

| ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | | ஒதுக்கீடு (` கோடியில்) |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டவை | முடிக்கப்பட்டவை | |
| 2011–12 | 5275 | 5275 | 250.00 |
| 2012–13 | 569 | 552 | 248.04 |
| 2013–14 | 1043 | 900 | 284.96 |
| 2014–15 | 235 | 209 | 116.66 |
| 2015–16 | 27 | 0 | 199.88 |
| **மொத்தம்** | **7149** | **6936** | **1099.54** |

## 4.5 குடிநீர் வழங்கல்

அரசு, அனைத்து பேரூராட்சிகளிலும் உள்ள மக்களுக்கு குறைந்தபட்ச அளவான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு **70** லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க உறுதி பூண்டுள்ளது. பேரூராட்சிகள் தனி குடிநீர் திட்டங்களை பராமரித்து வருகின்றன. கூட்டுக் குடிநீர் திட்டங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படுகின்றன. மொத்தமுள்ள **528** பேரூராட்சிகளிலும், நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு **70**

லிட்டருக்கு குறையாமல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பேரூராட்சிகளில் கடந்தாண்டுகளில் கூடுதலாக வழங்கப்பட்ட குடிநீரின் அளவு:–

| வ. எண் | வருடம் | பேரூராட்சி களின் எண்ணிக்கை | குடிநீர் தேவை (மில்லியன் லிட்டரில்) | குடிநீர் விநியோ கம் (மில்லியன் லிட்டரில்) | கூடுதலாக வழங்கப்பட்ட குடிநீரின் அளவு (மில்லியன் லிட்டரில்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 2011-12 | 529 | 564 | 568.97 | 4.97 |
| 2 | 2012-13 | 529 | 572 | 589.20 | 17.20 |
| 3 | 2013-14 | 528 | 577 | 610.70 | 33.70 |
| 4 | 2014-15 | 528 | 585 | 689.25 | 104.25 |
| 5 | 2015-16 | 528 | 593 | 776.23 | 183.23 |

**2011–12** முதல் நாளது வரை நிறைவேற்றப்பட்ட ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம், உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி, இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதி, பகுதி–**2** திட்டம், வறட்சி நிவாரணம் மற்றும் பொது நிதி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ், பேரூராட்சிகள் மூலம் **5296** பணிகளும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் **22** பணிகளும் ஆகமொத்தம் **5318** பணிகள் செய்து முடிக்கப்பட்டன. இப்பணிகள் செய்து முடிக்கப்பட்டதன் பயனாக நாளொன்றுக்கு **92.23** மில்லியன் லிட்டர் குடிநீர் கூடுதலாக சுத்திகரிக்கப்பட்டு மொத்தம் **776.23** மில்லியன் லிட்டர் குடிநீர்

528 பேரூராட்சிகளில் தினசரி தடையின்றி விநியோகம் செய்யப்படுகிறது.

### 4.6 சுகாதாரம்

528 பேரூராட்சிகளில் இரண்டு வழிமுறைகளில் சுகாதாரப்பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒன்று பாதாளச்சாக்கடை திட்ட முறை, மற்றொன்று கசடு கழிவு மேலாண்மை திட்டம்.

#### 4.6.1 பாதாள சாக்கடைத் திட்டம்

மக்களுக்கு பாதுகாப்பான சுகாதார வசதிகளை வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் பேரூராட்சிகளில், சுகாதாரத்தையும், சுற்றுச்சூழலையும் பாதுகாக்க பாதாள சாக்கடைத் திட்டம் இன்றியமையாததாக உள்ளது. எனவே, பேரூராட்சிகளில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் பெறப்படும் நிதி ஆதாரங்களைக் கொண்டு பாதாள சாக்கடைத் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படவுள்ளது. மாமல்லபுரம், திருச்செந்தூர், திருமழிசை, ஒரத்தநாடு, பழனிச்செட்டிபட்டி, உளுந்தூர்பேட்டை மற்றும் திருப்பெரும்புதூர் ஆகிய 7 பேரூராட்சிகளில் `219.86

கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில், மாமல்லபுரம், ஒரத்தநாடு மற்றும் திருச்செந்தூர் ஆகிய **3** பேரூராட்சிகளில் பணிமுடிக்கப்பட்டுள்ளது. திருமழிசை, திருப்பெரும்புதூர், உளுந்தூர்பேட்டை மற்றும் பழனிச்செட்டிபட்டி ஆகிய **4** பேரூராட்சிகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

வேளாங்கண்ணி பேரூராட்சியில், தமிழ்நாடு அரசு மற்றும் அம்ரூட் திட்டத்தின் (AMRUT) கீழ் **`33.51** கோடி பாதாளசாக்கடை பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருப்போரூர், பொன்னேரி, பெரியநாயக்கன்பாளையம், பெருந்துறை, மண்ணச்சநல்லூர், ஆயக்குடி, வல்லம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய **8** பேரூராட்சிகளில், **`375.48** கோடி மதிப்பீட்டில் மரபு சார்ந்த பாதாள சாக்கடை திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்படவுள்ளது.

### 4.6.2 கசடு கழிவு மேலாண்மை

நச்சுத் தொட்டியில் பகுதி சுத்திகரிக்கப்பட்டு மீதம் தேங்கும் கழிவுகளே பொதுவாக கசடு கழிவு

என்றழைக்கப்படுகிறது. இதில், திரவ, திட, மேலும் கொழுப்பு, எண்ணெய் மற்றும் கிரீஸ் ஆகியன மிகையாக காணப்படும்.

கசடு கழிவு உற்பத்தியின் அடிப்படையில், முழு செயல்முறை வடிவமைப்பு, சேகரிப்பு, பாதுகாப்பான சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றுதல் ஆகியன கசடு கழிவு மேலாண்மையில் அடங்கும். வேகமாக நகரமயமாகும் பொருளதார சூழலில், குறிப்பிட்ட காலங்களில் நச்சுத் தொட்டியினை சுத்தம் செய்தல், மேலும் கசடுகளை வாகனத்தின் மூலம் இடமாற்றுதல், சுத்திகரிப்பு, மறு பயன்பாடு மற்றும் வெளியேற்றம் செய்வதற்கு கசடு கழிவு மேலாண்மை இன்றியமையாததாகும்.

மக்கள் தொகை குறைவாகவுள்ள 18 பேரூராட்சிகளில், கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அப்பேரூராட்சிகளாவன: ஆழ்வார்திருநகரி, செங்கம், ஆலங்காயம், பென்னாகரம், காவேரிப்பட்டணம், ஜலகண்டாபுரம், ஆலம்பாளையம், குன்னத்தூர், நீடாமங்கலம், குரும்பலூர், பரவை, முதுகுளத்தூர், சேத்தூர், சாம்பவார்வடகரை, பெண்ணாடம், தமிழ்நாடு காகித ஆலை புகளூர், கருங்குழி மற்றும் மாமல்லபுரம் (விரிவாக்கம்).

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் சோதனை அடிப்படையில் கருங்குழி பேரூராட்சியில் `**4.93** கோடி

மதிப்பீட்டில் கசடு கழிவு மேலாண்மை திட்டம் எடுத்துக் கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிஆணை வழங்கப்பட்டு நவீன தொழில்நுட்பத்தில் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இந்த முன்னோடி திட்டத்தின் முடிவுகளின் அடிப்படையில், ஏனைய பேரூராட்சிகளுக்கு படிப்படியாக விரிவு படுத்தப்படும்.

### 4.6.3 திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழித்தல்

திறந்த வெளியில் மனிதக் கழிவு கழித்தல், சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துவதுடன் மக்களின் கண்ணியத்தையும் பாதிக்கிறது. தமிழ்நாட்டை **திறந்த வெளியில் மனிதக் கழிவு கழித்தல் இல்லாத மாநிலமாக** மாற்றுவதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது. இந்நோக்கத்தை நிறைவேற்ற பேரூராட்சிகளில், புதிய பொது சுகாதார வளாகங்கள் கட்டுதல், பழுதடைந்த பழைய சுகாதார வளாகங்களை சீரமைத்தல் மற்றும் தகவல், கல்வி, தொடர்பு மூலமாக, மிகப் பெரிய அளவில் விழிப்புணர்வு செய்யப்பட்டு வருகிறது. திறந்தவெளியில் மனிதக்கழிவு கழிக்கும் இடங்களை கண்டறிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், அவ்வாறான இடங்கள் 1095 உள்ளதென கண்டறியப்பட்டது.

இவ்விடங்களில் பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஆண்டு | திட்டம் | புதிய கழிப்பிடங்கள் கட்டுதல் | கழிப்பிடங்களை புனரமைப்பு செய்தல் | திட்ட மதிப்பீடு (` கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2011–12 | திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழிக்கும் திட்டம் | 52 | 75 | 5.53 |
| 2 | 2011–12 | ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் | 80 | | 6.04 |
| 3 | 2012–13 | திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழிக்கும் திட்டம் | 160 | 221 | 22.60 |
| 4 | 2012–13 | நபார்டு திட்டம் | 376 | | 45.20 |
| 5 | 2013–14 | திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழிக்கும் திட்டம் | 174 | | 22.60 |
| 6 | 2013–14 | அரசு நிதி | 77 | | 10.00 |
| 7 | 2013–14 | பொது நிதி | –– | 401 | 8.01 |
| 8 | 2014–15 | திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழிக்கும் திட்டம் | 183 | – | 22.60 |
| 9 | 2015–16 | சுவச்பாரத் திட்டத்தில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 432 | – | 17.02 |
| | | **மொத்தம்** | **1534** | **697** | **159.60** |

1202 புதிய சுகாதார வளாகம் கட்டும் பணிகளும், 697 சுகாதார வளாகங்கள் புனரமைப்பு செய்யும் பணிகளும் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மீதம் 332 சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இதன் பலனாக திறந்த வெளியில் மனிதக் கழிவு கழித்தல் பழக்கத்திலுள்ள 1095 இடங்களில், 910 இடங்களில் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிகளில், தமிழ்நாடு அரசு மானியம் மற்றும் சுவச்பாரத் திட்டத்துடன் சேர்த்து 3,60,577 வீடுகள் தோறும் புதிய தனிநபர் கழிப்பிடம் கட்டுதல், 7,794 சுகாதாரமற்ற கழிப்பிடத்தினை மாற்றி சுகாதாரமான கழிப்பிடம் கட்டுதல் மற்றும் 28,868 இருக்கைகள் கொண்ட சமுதாய கழிப்பிடங்கள் கட்டுதல் ஆகியவை பேரூராட்சிகளுக்கான திட்ட இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. 2015–16ஆம் ஆண்டு 54,100 வீடுகளில் புதிய தனிநபர் கழிப்பிடம் கட்டுதல், 7,794 சுகாதாரமற்ற கழிப்பிடத்தினை மாற்றி சுகாதாரமான கழிப்பிடம் கட்டுதல் மற்றும் 2,619 இருக்கைகள் கொண்ட சமுதாய கழிப்பிடங்கள் கட்டுதல் ஆகியவை இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இப்பணிகளில், 30,173 தனிநபர் கழிப்பிடங்கள் 4,857 துப்புவரற்ற கழிப்பிடங்கள் சுகாதாரமான

கழிப்பிடங்களாக மாற்றுதல் மற்றும் **552** இருக்கைகள் கொண்ட சமுதாயக் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## 4.7 சாலைகள்

பேரூராட்சிகளில், கீழ்காணும் வகையில் **20,314** கி.மீ சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன:-

| வ. எண் | வகைபாடு | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 1 | தார் சாலைகள் | 10,523 |
| 2 | சிமெண்ட் சாலைகள் | 4966 |
| 3 | சிமெண்ட் கற்சாலைகள் ( Paver block) | 559 |
| 4 | கருங்கல் ஜல்லி சாலை | 1175 |
| 5 | செம்மண் சாலை | 495 |
| 6 | மண்சாலை | 2596 |
| | **மொத்தம்** | **20,314** |

பேரூராட்சிகளில் **2011–12** முதல் **2015–16** ஆம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சாலை மேம்பாட்டு பணிகள் பின்வருமாறு:

| வ. எண் | ஆண்டு | மொத்த பணிகளின் எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | மதிப்பீடு (` கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | 2011–12 | 1908 | 1561 | 284.56 |
| 2 | 2012–13 | 1022 | 1166 | 334.40 |
| 3 | 2013–14 | 768 | 808 | 248.29 |
| 4 | 2014–15 | 694 | 743 | 231.02 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 2015–16 | 713 | 699 | 278.18 |
| | **மொத்தம்** | **5105** | **4977** | **1376.45** |

மொத்தம் எடுக்கப்பட்ட **5105** சாலைப் பணிகளில், **4881** பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. எஞ்சிய **224** பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மொத்தம் **4977** கி.மீ சாலைகள், தார் சாலை, சிமெண்ட் சாலை மற்றும் சிமெண்ட் கற்சாலைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

### 4.7.1 நபார்டு – தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி–ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (NABARD)

**2011–2012** ஆம் ஆண்டு முதல் **2015–16** ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்தின் கீழ் சாலை மேம்பாடு, பாலம் அமைத்தல், மழைநீர் வடிகால் அமைத்தல், சுகாதார வளாகம் கட்டுதல், நீர் நிலைகள் மேம்பாடு செய்தல் மற்றும் இறைச்சிக் கூடம் அமைத்தல் போன்ற **2308** பணிகளுக்கு **`631.51** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்வருமாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| வ. எண் | ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு (` கோடியில்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 2011–12 | 419 | 97.90 | அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. |
| 2 | 2012–13 | 975 | 200.14 | அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. |
| 3 | 2013–14 | 381 | 118.40 | அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 2014–15 | 301 | 115.07 | அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. |
| 5 | 2015–16 | 232 | 100.00 | 58 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 174 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| மொத்தம் | | 2308 | 631.51 | |

## 4.7.2 தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்புத் திட்டம் (TURIP)

நகர்ப்புர சாலைகளை உலக தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் 2011–12 ஆம் ஆண்டிலிருந்து, தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்பு திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், பேரூராட்சிகளில் சாலைகள் மேம்படுத்தப்படுவதுடன் கூடுதலாக மழைநீர் வடிகால் வசதி மற்றும் நடைபாதை வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

2011–12 ஆம் ஆண்டு முதல் 2014–15 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் 905 எண்ணிக்கையிலான 826 கி.மீ நீளச்சாலைகள் `232.90 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

| வ.எண் | ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | மதிப்பீடு (` கோடியில்) |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2011–12 | 339 | 247 | 50.57 |
| 2 | 2012–13 | 191 | 222 | 50.00 |
| 3 | 2013–14 | 147 | 159 | 50.57 |
| 4 | 2014–15 | 228 | 198 | 81.76 |
| | **மொத்தம்** | **905** | **826** | **232.90** |

**2015–16** ஆம் ஆண்டில் சிறப்புச் சாலைகள் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு நிதி மற்றும் பேரூராட்சிகளின் பொதுநிதி பங்களிப்புடன் **145** பேரூராட்சிகளில் **384** எண்ணிக்கையிலான **328.11** கி.மீ நீளச்சாலைகள் **`163.52** கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது. நாளது வரை **334** பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய **50** பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் ஆகஸ்ட் **2016**–க்குள் செய்து முடிக்கப்படும்.

### 4.7.3 பிளாஸ்டிக் சாலைகள்

திடக்கழிவுகளில் கிடைக்கப்பெறும் பிளாஸ்டிக் கழிவுகள் **5** சதவீதம் ஆகும். இவை பல்வேறு வகையாகவும், நச்சுத்தன்மை கொண்டதாகவும் உள்ளன. பொதுவாக, நகர்ப்புரங்கள் மற்றும் ஊரகப்பகுதிகளில், சாலைகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்களில் பிளாஸ்டிக் பைகள் மற்றும் இதர பிளாஸ்டிக் கழிவுகள் இருப்பதை காணலாம். பிளாஸ்டிக் கழிவுகள் மக்காத தன்மை

கொண்டவையாக இருப்பதால் நீரை தேங்கச் செய்கிறது. இதன் மூலம் சுகாதார சீர்கேடுகளை விளைவிக்கிறது. இதனை தடுக்கும் பொருட்டு, பிளாஸ்டிக் கழிவுகள் சாலைகள் அமைப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.

2011–12 ஆம் ஆண்டு முதல், இத்திட்டம் பொது நிதி மற்றும் இதர சாலைப்பணிகள் திட்டங்களுக்காக சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிதி, ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 1220 பிளாஸ்டிக் சாலைகள், 1120.40 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி 1134.60 கி.மீ நீளத்திற்கு `321.40 கோடி செலவீனத்தில் பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டு முதல் சேகரமான பிளாஸ்டிக் கழிவுகளை விற்பனை செய்ததன் மூலமாக பேரூராட்சிகளுக்கு `2.77 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

### 4.8 திடக்கழிவு மேலாண்மை

பேரூராட்சிகளில், தற்போது நாளொன்றுக்கு 1967 மெட்ரிக் டன் குப்பைகள் உருவாகிறது. இவற்றில், மக்கும் குப்பைகள் 925 மெட்ரிக் டன், மக்காத குப்பைகள் 747 மெட்ரிக் டன், வடிகால் மற்றும் இதர மண் கழிவுகள் 295 மெட்ரிக் டன் ஆகும்.

சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவர் மூலம் 250 கிராம் முதல் 300 கிராம் வரை குப்பைகள் உருவாகின்றன. பல்வேறு பேரூராட்சிகளில், குப்பைகளின் தன்மை பகுப்பாய்வு செய்யப்பட்டது. விவரங்கள் பின்வருமாறு அட்டவணை படுத்தப்பட்டுள்ளன :–

| வ. எண் | குப்பைகளின் வகை | சதவிகிதத்தில் |
|---|---|---|
| 1 | மக்கும் குப்பை | 47 – 60 |
| 2 | பிளாஸ்டிக் | 4 – 8 |
| 3 | காகிதம் | 2 – 5 |
| 4 | ரப்பர் | 1 – 2 |
| 5 | கண்ணாடி | 1 – 3 |
| 6 | மண் துகள்கள் | 15 – 20 |
| 7 | உலோகம் | 2 – 3 |
| 8 | துணி | 3 – 5 |

பேரூராட்சிகளில், திடக்கழிவு மேலாண்மையை சீரிய முறையில் செயல்படுத்திட, 9171 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் குப்பைகளை சேகரிப்பதற்கும், தரம் பிரிப்பதற்கும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். 6846 துப்புரவு பணியாளர்கள், தெருக்கள் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### 4.8.1 இயற்கை / மண்புழு உரமாக்குதல்

தற்பொழுது **461** பேரூராட்சிகளில் இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் **99.09** மெட்ரிக் டன் அளவிற்கு இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இயற்கை உரத்தினை விற்பதன் மூலம் மாதம் ஒன்றுக்கு `**35.00** லட்சம் பேரூராட்சிகளில் வருமானம் ஈட்டப்படுகிறது. தற்போதைய நிலையில் **908** மெட்ரிக் டன் அளவில் இயற்கை உரம் இருப்பில் உள்ளது.

இத்துடன் மண்புழு உரம் தயாரிக்கும் பணி **136** பேரூராட்சிகளில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாள்தோறும் **11.79** மெட்ரிக் டன் அளவிற்கு மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மண்புழு உரத்தினை விற்பதன் மூலம் மாதம் ஒன்றுக்கு `**8.50** லட்சம் பேரூராட்சிகளில் வருமானம் ஈட்டப்படுகிறது. தற்போதைய நிலையில் **233** மெட்ரிக் டன் அளவில் மண்புழு உரம் இருப்பில் உள்ளது.

### 4.8.2 ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம்

**2013–14** ஆம் ஆண்டு முதல் **2015–16** ஆம் ஆண்டு வரை, ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் **395** பேரூராட்சிகளில் வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல், வளம் மீட்பு பூங்காவிற்கு எடுத்துச் செல்லுதல்,

உரமாக்குதல், அறிவியல் முறைப்படி நிலப்புதைகளம் உருவாக்குதல், தகவல், கல்வி மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நாளது வரை, 76 பேரூராட்சிகளில் பணி முடிக்கப்பட்டு, எஞ்சிய பேரூராட்சிகளில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

மேலும், சோளிங்கர், செங்கம், பெரியநாயக்கன் பாளையம், வத்தலகுண்டு மற்றும் உத்தமபாளையம் ஆகிய 5 பேரூராட்சிகளில் `1.00 கோடி மதிப்பீட்டில் காய்கறி கழிவு மற்றும் உணவுக்கழிவிலிருந்து, உயிரி எரிவாயு கலன் மூலம் எரிவாயு தயாரிக்க பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

### 4.9 உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி

பேரூராட்சிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதிலுள்ள நிதி இடைவெளியை நிரப்புவதற்கு, இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2011–12 ஆம் ஆண்டு முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் 722 பணிகளுக்கு `266.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதன் மூலம் புதிய அலுவலகக் கட்டடம்

கட்டுதல், குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், மழைநீர் வடிகால், இறைச்சிக் கூடம், நவீன எரிவாயு தகனமேடை, சமுதாயக் கூடம் அமைத்தல், பேருந்து நிலையம் மேம்பாடு, மயான மேம்பாடு மற்றும் குடிநீர் திட்டங்களுக்கான பேரூராட்சி பங்குத் தொகை செலுத்துதல் போன்ற பணிகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன :–

| வ. எண் | ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (` கோடியில்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 2011–12 | 155 | 20.99 | அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. |
| 2 | 2012–13 | 94 | 25.62 | |
| 3 | 2013–14 | 185 | 69.45 | 184 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. எஞ்சிய 1 பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 4 | 2014–15 | 230 | 85.38 | 223 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 7 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 5 | 2015–16 | 58 | 65.44 | 3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 55 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. |
| | **மொத்தம்** | **722** | **266.88** | |

2016–2017 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக `71.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.10 இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி

பேரூராட்சிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் உள்ள நிதி இடைவெளியை நிரப்புவதற்கு, மாநில நிதி பகிர்வு மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2011–12 ஆம் ஆண்டு முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்தின் கீழ் 603 பணிகளுக்கு `125.74 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதன் மூலம் அலுவலகக் கட்டடம் கட்டுதல், குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், மழைநீர் வடிகால், சாலை, சமுதாயக் கூடம் அமைத்தல், பேருந்து நிலையம் மேம்பாடு, மயான மேம்பாடு மற்றும் குடிநீர் திட்டங்களுக்கான பேரூராட்சி பங்குத் தொகை செலுத்துதல் போன்ற பணிகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன :-

| வ. எண் | ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (` கோடியில்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 2011–12 | 84 | 13.99 | அனைத்து |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 2012–13 | 169 | 17.09 | பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. |
| 3 | 2013–14 | 112 | 27.42 | |
| 4 | 2014–15 | 111 | 34.25 | அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. |
| 5 | 2015–16 | 127 | 32.99 | 26 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 101 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. |
| | **மொத்தம்** | **603** | **125.74** | |

**2016–2017** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக `**30.60** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.11 பதினான்காவது நிதி ஆணைய மானியம்

பேரூராட்சிகளுக்கு **2015–2016** ஆம் ஆண்டு முதல் **2019–2020** ஆம் ஆண்டு வரை பதினான்காவது நிதி ஆணைய மானியம் ஆண்டு தோறும் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த ஒதுக்கீடு, அடிப்படை மானியம் மற்றும் செயல்திறன் மானியம் என இரண்டு கூறுகளாக வழங்கப்படும். **2015–2016** ஆம் ஆண்டு, அடிப்படை மானியமாக `**229.11** கோடி ஒதுக்கப்பட்டு, அத்தொகை இரு தவணைகளில் அடிப்படை

மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மானியத் தொகை, குடிநீர் திட்ட பங்குத் தொகை, பாதாள சாக்கடை திட்டத்திற்கான பங்குத் தொகை, மின்வாரியத்திற்கு மின்கட்டணம் செலுத்துதல், குடிநீர்க் கட்டணம் செலுத்துதல், திடக்கழிவு மேலாண்மை திட்டம், சாலைகள் மற்றும் நடைபாதை அமைத்தல் மற்றும் பூங்கா விளையாட்டுத் திடல் பராமரித்தல் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

**2016–17**ஆம் ஆண்டு, பதினான்காவது நிதி ஆணைய அடிப்படை மான்யம் முதல் தவணை `**158.62** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மான்யம் முழுமையாக **528** பேரூராட்சிகளுக்கும் விடுவிக்கப்பட்டுள்ளது.

### 4.12 மழைநீர் சேகரிப்பு

**2001** ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டமானது, நிலத்தடி நீரை செறிவூட்டுவதில், குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. **1920** ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு **215 (a)** மற்றும் **1973** ஆம் ஆண்டு கட்டட விதிகளில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களின் மூலம், அனைத்து புதிய கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் பயனை

ஒருங்கிணைக்க, புதிதாக ஏற்படுத்தப்படும் கட்டமைப்புகள் தவிர, தனியார் மற்றும் பொதுக் கட்டடங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பேரூராட்சிகளில், இத்திட்டத்தினை தொய்வின்றி உத்வேகப்படுத்திட அனைவருக்கும் இது தொடர்பான செய்தி, கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரம் போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

பேரூராட்சிகளால், **6,286.84** ஏக்கர் பரப்பளவிலான **1,916** நீர்நிலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பேரூராட்சிகளில், மொத்தமுள்ள **24,30,512** கட்டடங்களில், **23,62,144** கட்டடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் குறித்த விவரங்கள் கீழ்காணும் அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **கட்டடத்தின் வகைப்பாடு** | **கட்டடங்களின் எண்ணிக்கை** | **மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட கட்டடங்கள்** |
|---|---|---|---|
| 1. | அரசுக் கட்டடங்கள் | 24,226 | 23,926 |
| 2. | குடியிருப்புக் கட்டடங்கள் | 22,45,375 | 21,78,886 |
| 3. | வணிகக் | 1,48,979 | 1,47,400 |

| | | | |
|---|---|---|---|
| | கட்டடங்கள் | | |
| 4. | தொழிற்சாலைக் கட்டடங்கள் | 11,932 | 11,932 |
| | **மொத்தம்** | **24,30,512** | **23,62,144** |

பேரூராட்சிகளில் மொத்தமுள்ள **1,916** நீர்நிலைகளில் **807** நீர்நிலைகள் பல்வேறு திட்டங்களின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய **1,109** நீர்நிலைகள் வரும் ஆண்டுகளில் படிப்படியாக புனரமைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேற்படி நடவடிக்கைகளின் காரணமாக, நிலத்தடி நீர் செறிவூட்டும் திறன் **4.13** TMC ஆக உள்ளது.

### 4.13 விலங்குகள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துதல்

மத்திய அரசு, **1960** ஆம் ஆண்டு பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு **38**, உட்பிரிவு **1 (9)** ன் கீழ் **2001** ஆம் ஆண்டு பிராணிகள் (நாய்கள்) கருத்தடை அறுவை சிகிச்சை விதிகளை அறிவிக்கை செய்துள்ளது.

இவ்விதிகளை தீவிரமாக செயல்படுத்தும் விதமாக, அனைத்து பேரூராட்சிகளிலும் தெருநாய் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதில், **1,06,129** தெருநாய்கள் உள்ளது கண்டறியப்பட்டது. இவற்றில், **2015–16**ஆம் ஆண்டு வரை, **90,494** தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை

செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 15,635 தெருநாய்களுக்கு 2016–17 ஆம் ஆண்டில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யவும் மற்றும் தடுப்பூசி போடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு 1422 நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டுள்ளது.

**4.14 துணை நகரம்**

மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் பேரூராட்சி துணை நகரமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. துணை நகரங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம், பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட பெருநகர இணைப்புகளில் ஏற்படும் நெரிசலை குறைப்பது மற்றும் துணை நகரங்களில் அவர்களை நிலை நிறுத்துவது ஆகியன இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இதற்கென மின்னாற்றல் தணிக்கை, குடிநீர் தணிக்கை, செலவு குறைந்த தொழிற் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பதில் மேம்பட்ட திறன் வளர்ப்பு போன்ற சீர்திருத்தங்களை துணை நகரங்களில் மேற்கொள்ள இத்திட்டம் வழிவகை செய்கிறது. வீட்டு மனைகளில் 10 முதல் 15 விழுக்காடு வரை நகர்ப்புர ஏழைகளுக்காக ஒதுக்கீடு செய்வதும் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிலையில் மேற்கொள்ளப்பட

வேண்டிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதும் இத்திட்டத்தின் பிற நோக்கங்களாகும். இத்திட்டத்தின் கீழ் குடிநீர், பாதாள சாக்கடை மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய மூன்று திட்டப்பணிகள் `123.75 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்து பணிகளும் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

| வ. எண். | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (` கோடியில்) | பணிகளின் முன்னேற்ற நிலை |
|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை உட்கட்டமைப்புகள் | 4.44 | பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. |
| 2. | ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் | 42.20 | பணிகள், அக்டோபர் 2016 க்குள் முடிக்கப்படும் |
| 3. | ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் | 77.11 | பணிகள், அக்டோபர் 2016 க்குள் முடிக்கப்படும் |
| | **மொத்தம்** | **123.75** | |

### 4.15 பசுமை வீடுகள் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்கு திட்டம் 2023–ன் குடிசை இல்லா நகரங்கள் திட்டத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டில் உள்ள 528 பேரூராட்சி பகுதிகளில்

பொருளாதார ரீதியாக நலிவுற்ற (Economically Weaker Sections) நிலையில் உள்ள குடிசை / மண் வீடுகளில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு சூரிய ஒளி மின் சக்தியுடன் கூடிய கான்கிரீட் வீடுகள் கட்ட, முதல் கட்டமாக **2015–16**ம் ஆண்டு **20,000** பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதற்கான நிதி ஒதுக்கீடு, வீடு ஒன்றுக்கு **`2.10** லட்சம் நிதி உதவியுடன் **`.420.00** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சூரிய ஒளி மின் சக்தியுடன் கூடிய **20,000** கான்கிரீட் வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இத்திட்டம், மத்திய அரசின் அனைவருக்கும் வீடுகள் வழங்கும் திட்டத்துடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை **149** எண்ணிக்கை பசுமை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**4.16 பேரூராட்சிகளில் புவி சார் தகவல் முறை அடிப்படையிலான சொத்துவரி விதித்தல்**

பேரூராட்சிகளில், மின்னணு ஆளுகை திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதன் முன்னோடியாக, வரி விதிக்கப்படாத மற்றும் மதிப்பு குறைத்து வரிவிதிக்கப்பட்ட சொத்துக்களை கண்டறிந்து அவற்றிற்கு வரிவிதிப்பு செய்து

அதன் மூலம் வருவாய் பெருக்கிட புவி தகவல் அடிப்படையிலான சொத்துவரி விதித்தல் திட்டத்தினை அரசு கொள்கை அளவில் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை பொன்னேரி பேரூராட்சியில் சோதனை முறையில் நடைமுறைப்படுத்த 2013 ஆம் ஆண்டில் `32.84 லட்சத்தினை அனுமதித்து வழங்கியுள்ளது. இத்திட்டம் முடிக்கப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக `6.00 லட்சம் வருமானம் பேரூராட்சிக்கு கிடைக்கப்பெற்று வருகிறது. இந்த புவி சார் தகவல் முறை அடிப்படையிலான சொத்துவரி விதித்தல், இதர பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

**4.17 தெரு விளக்குகள்**

பேரூராட்சிகளில், 969 உயர்கோபுர விளக்குகள், 2662 மெர்க்குரி விளக்குகள், 40,063 சோடியம் விளக்குகள், 2,65,588 குழல் விளக்குகள், 76,236 சி.எப்.எல் விளக்குகள் 3,234 சோலார் விளக்குகள் மற்றும் 20,006 ஆற்றல் மிகு தெரு மின்விளக்குகள் (எல்.இ.டி) உள்ளிட்ட 4,08,758 தெருவிளக்குகள் பராமரிக்கப்படுகின்றன. அனைத்து தெரு விளக்குகளையும் ஆற்றல் மிகு தெரு மின்விளக்குகளாக (எல்.இ.டி) மாற்றுவதற்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 4.18 விருது

பேரூராட்சிகளில், சுகாதார நிலை, குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் இதர அடிப்படை வசதிப் பணிகளின் இலக்கீட்டினை எய்தும் வகையில் திறம்பட செயல்படும் பேரூராட்சிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில், மூன்று சிறந்த பேரூராட்சிகளுக்கான விருதுகளை அரசு ஏற்படுத்தியுள்ளது. இதற்கான விருது தொகை முறையே `**10.00** லட்சம், `**5.00** லட்சம் மற்றும் `**3.00** லட்சம் ஆகும்.

**2014–2015** ஆண்டிற்கான முதல் மூன்று பரிசுகள், முறையே நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடி பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு பேரூராட்சி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் சிறுகமணி பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டன.

# 5. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் 1978–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நிறுவப்பட்டது. சென்னைக் குடிநீர் வாரியம், சென்னைப் பெருநகர் பகுதியின் தேவைக்கேற்ப குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளை தற்போதைக்கும், எதிர்காலத்திற்கும் திட்டமிட்டு மேம்படுத்தி செயற்படுத்துதல், தேவையான உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் தொலைநோக்கு பார்வையோடு திட்டங்களை நடைமுறைபடுத்துதல் போன்ற முக்கிய பொறுப்புகளைக் கொண்டு இயங்கி வருகின்றது.

தற்சமயம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தனது சேவைகளை, 15 பகுதி அலுவலகங்கள் மற்றும் 200 பணிமனைகள் வாயிலாக 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள 67.27 இலட்சம் மக்களுக்கு (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) வழங்கி வருகிறது. மேலும் சில உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மொத்த நுகர்வோருக்கும் மற்றும் தொழிற்சாலைகளுக்கும் தனது சேவையை வழங்கி வருகிறது.

**சென்னைக் குடிநீர் வாரியத்தின் சேவையை பெறும் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மொத்த நுகர்வோர்**

| வ. எண் | உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மொத்த நுகர்வோர்கள் | குடிநீர் வழங்கும் அளவு நாளொன்றுக்கு (மில்லியன் லிட்டரில்) |
|---|---|---|
| 1 | பல்லாவரம் நகராட்சி | 1.90 |
| 2 | பம்மல் நகராட்சி | 2.10 |
| 3 | அனகாபுத்தூர் நகராட்சி | 1.00 |
| 4 | ஆவடி நகராட்சி | 0.80 |
| 5 | பொழிச்சலூர் கிராம பஞ்சாயத்து | 0.95 |
| 6 | கௌல் பஜார் கிராம பஞ்சாயத்து | 0.30 |
| 7 | இரயில்வே மற்றும் அரசு மருத்துவமனை | 12.00 |
| 8 | ஆவின் | 0.41 |
| 9 | கன்டோன்மெண்ட் – (இராணுவ அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள்) | 1.60 |
| 10 | உணவகங்கள் மற்றும் மொத்த நுகர்வோர்கள் | 4.28 |
| 11 | தொழிற்சாலை நுகர்வோர்கள் | 25.68 |
| | **மொத்தம்** | **51.02** |

## 5.1 சென்னை நகரின் குடிநீர் ஆதாரங்கள்

சென்னை நகரின் குடிநீர் தேவையை நிறைவு செய்ய நில மேற்பரப்பு நீர், கடல் நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் நிலத்தடி நீர் மூலம் நீர் பெறப்படுகிறது.

### 5.1.1 நில மேற்பரப்பு நீர்

சென்னை நகருக்கு குடிநீர் வழங்குவதில் நிலமேற்பரப்பு நீர் ஆதாரம் முதன்மையானதாகும். சென்னைக்கு அருகாமையிலுள்ள நீர்த்தேக்கங்களான பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம், கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி மற்றும் தெலுங்கு கங்கை திட்டம் ஆகியவை குடிநீர் வழங்கும் முதன்மை மேற்பரப்பு நீர் ஆதாரங்களாகும்.

**சென்னைக்கு குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களின் கொள்ளளவுகள்**

| வ. எண் | நீர்த்தேக்கங்கள் | மொத்தக் கொள்ளளவு (மில்லியன் கன அடியில்) |
|---|---|---|
| 1 | பூண்டி | 3,231 |
| 2 | புழல் | 3,300 |
| 3 | செம்பரம்பாக்கம் | 3,645 |
| 4 | சோழவரம் | 881 |
| 5 | வீராணம் | 1,465 |
| | **மொத்தம்** | **12,522** |

புதிய வீராணம் குடிநீர் வழங்கல் திட்டம் சென்னை நகருக்கு கூடுதல் நீர் ஆதாரமாக 2004–ல் துவங்கப்பட்டது. இதன் மூலம் வீராணம் ஏரியிலிருந்து ஆண்டுதோறும் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீர் நகருக்கு கிடைக்கப் பெறுகிறது.

ஆந்திரபிரதேசத்தில் அமைந்துள்ள கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தெலுங்கு கங்கை திட்டத்தின் மூலம் கிருஷ்ணா நதி நீர் சென்னை நகருக்கு பெறப்பட்டு வருகிறது. ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழக அரசுகளிடையே கையெழுத்தான ஒப்பந்தப்படி சென்னையின் குடிநீர் தேவைக்கு ஒவ்வொரு ஆண்டும் 12 ஆயிரம் மில்லியன் கனஅடி நீர் வழங்கப்பட வேண்டும். முந்தைய பல வருடங்களில் 4.5 ஆயிரம் மில்லியன் கன அடி முதல் 8.2 ஆயிரம் மில்லியன் கன அடிவரை மட்டுமே நீர் கிடைக்கப் பெற்றது. 2015–16ஆம் ஆண்டில், 31.08.2015 வரை பெறப்பட்ட நீரின் அளவு 5.569 ஆயிரம் மில்லியன் கன அடி ஆகும். 01.09.2015 லிருந்து இன்று வரை கண்டலேறுலிருந்து நீர் வரத்து ஏதும் இல்லை.

**சென்னை நகர ஏரிகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழையின் அளவு**

| வருடம் | மழையின் அளவு (மி.மீ) | | வித்தியாசம் % |
|---|---|---|---|
| | இயல்பான அளவு (30 வருட சராசரி) | பெய்த அளவு | |
| 2012 | 1293.42 | 981.80 | –24.09 |
| 2013 | 1297.50 | 1064.87 | –17.93 |
| 2014 | 1286.21 | 1025.80 | –20.25 |
| 2015 | 1273.17 | 2155.23 | +69.28 |

### 5.1.2 கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்

கிடைக்கக் கூடிய நில மேற்பரப்பு நீர், பருவமழையையே பெரிதும் சார்ந்திருக்கிறது. பருவமழை தேவையான அளவு பொழியாதபோது நீர்த்தேக்கங்களில் கிடைக்கக்கூடிய நீரின் அளவில் அதிக பற்றாக்குறை ஏற்பட்டு அதனால் சென்னை நகரின் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. சென்னைக்கு அருகே வற்றாத ஆறுகள் இல்லாததும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு கூடுதல் சவாலாகிறது. வளர்ந்து வரும் சென்னை மாநகருக்கு குடிநீர் பற்றாக்குறையை நீக்கும் வண்ணம் 2003–04 ஆம் ஆண்டிலேயே தொலைநோக்கு பார்வை கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவிட அறிவித்தார்கள். அரசு தற்சமயம் நாளொன்றுக்கு 100 மில்லியன்

லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் இரண்டு நிலையங்களை மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் நிறுவி இயக்கி வருகிறது. இந்நிலையங்கள் சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தில் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

### 5.1.2.1 கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் (காட்டுப்பள்ளி) –மீஞ்சூர்

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் (காட்டுப்பள்ளி) –மீஞ்சூரில் வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் இயங்கி வருகிறது. இந்த நிலையம் செயல்பாட்டில் உள்ளதுடன் இதன் மூலம் வட சென்னை பகுதிகளாகிய மணலி, மாதவரம், எண்ணூர், கத்திவாக்கம், திருவொற்றியூர், தண்டையார்பேட்டை மற்றும் வியாசர்பாடி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

### 5.1.2.2 கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் – நெம்மேலி

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் ஒன்று நெம்மேலியில் `805.08 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் நிதி

உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் **22.02.2013** அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்நிலையம் செயல்பாட்டில் உள்ளதுடன் இதன் மூலம் தென் சென்னை பகுதிகளாகிய சோழிங்கநல்லூர், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், செம்மஞ்சேரி, துரைப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, தரமணி, பள்ளிப்பட்டு, அடையாறு, பெசன்ட் நகர், நந்தனம், எம்.ஆர்.சி. நகர், இராஜா அண்ணாமலைபுரம் மற்றும் மயிலாப்பூர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பருவமழை தேவையான அளவு பொழியாத **2012–2015** ஆண்டுகளில் கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களை நாம் சார்ந்து இருக்க வேண்டிய சூழ்நிலை அதிகமாகியதுடன் நகரின் குடிநீர் தேவையை சமாளிக்க இந்த நிலையங்கள் உதவிகரமாக இருந்தது.

### 5.1.3 நிலத்தடி நீர்

மீஞ்சூர், தாமரைப்பாக்கம், பூண்டி மற்றும் நெய்வேலி ஆகிய நிலத்தடி நீராதரங்களில் இருந்து சுமார் நாளொன்றுக்கு **25** மில்லியன் லிட்டர் குடிநீர் நகருக்கு விநியோகிக்கப்படுகிறது.

### 5.1.4 குடிநீர் விநியோக இயக்கம் மற்றும் பராமரிப்பு

**2012** முதல் **2014** ஆம் ஆண்டுவரை பருவமழை தொடர்ந்து தேவையான அளவு பொழியாததனால் நகருக்கு விநியோகிக்கப்படும் குடிநீரின் அளவு மறு சீரமைக்கப்பட்டு நாளொன்றுக்கு **540** மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை நகருக்கு விநியோகம் செய்யப்பட்டது. **2015**–ஆம் ஆண்டு பெய்த கனமழையால் ஏரிகள் நிரம்பியதால் தற்போது நாளொன்றுக்கு **830** மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை நகருக்கு விநியோகம் செய்யப்படுகின்றது. மேலும் சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று சேவைகளை வழங்க சென்னைக் குடிநீர் வாரியம் பல்வேறு திட்டங்களை எடுத்துக்கொண்டுள்ளது.

பாதுகாப்பான குடிநீரினை நகருக்கு விநியோகம் செய்திட சென்னைக் குடிநீர் வாரியம், கீழ்ப்பாக்கம், புழல், செம்பரம்பாக்கம், சூரப்பட்டு, வடக்குத்து ஆகிய இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களையும் மேலும் (காட்டுப்பள்ளி) – மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களையும் இயக்கி வருகிறது.

## குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்புத் திறன்

| குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் | சுத்திகரிப்புத் திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்) |
|---|---|
| கீழ்ப்பாக்கம் | 270 |
| புழல் | 300 |
| செம்பரம்பாக்கம் | 530 |
| வடகுத்து | 180 |
| சூரப்பட்டு | 14 |
| கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்– ((காட்டுப்பள்ளி )- மீஞ்சூர் மற்றும் நெம்மேலி | 200 |
| **மொத்தம்** | **1494** |

1978–ல் வாரியம் துவங்கப்பட்ட நாளிலிருந்து, குடிநீர் விநியோக இயக்கத்தில் வாரியம் பல படிகளில் முன்னேற்றம் கண்டுள்ளது.

## குடிநீர் விநியோக சேவையில் முன்னேற்றங்கள்

| விவரங்கள் | 1978ஆம் ஆண்டில் | 2016ஆம் ஆண்டில் |
|---|---|---|
| செயலாக்கப் பகுதி (ச.கி. மீ) | 174 | 426 |
| மக்கள் தொகை (இலட்சத்தில்) | 28.60 | 73.11 |
| குடிநீர் விநியோகம் (நா.மி.லி) | 240 | 830 |
| குடிநீர் குழாய்களின் நீளம் (கி.மீ) | 1250 | 6,610 |

| | | |
|---|---|---|
| குடிநீர் பகிர்மான நிலையங்கள் | 3 | 74 |
| குடிநீர் சுத்திகரிப்பு திறன் (நா.மி.லி) | 182 | 1,494 |
| நுகர்வோர்களின் எண்ணிக்கை | 1,16,000 | 6,73,339 |

**2015–16** ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் செலவினம் **`1076.93** கோடி. வாரியத்தின் மொத்த வருமானம் **`830.67** கோடி ஆகும். இதில் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் வரிகளின் மூலம் **`147.46** கோடியும், குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் கட்டணங்களின் மூலம் **`263.58** கோடியும், இதர வருவாய் **`64.63** கோடியும் ஆகும். கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வாங்குவதற்கும் மற்ற நோக்கத்திற்காகவும் குடிநீர் வாரியத்திற்கு தமிழக அரசு மானியம் வழங்குகிறது. **2015–16** ஆம் ஆண்டு **`354.79** கோடி நிதியினை வாரியம் மானியமாக பெற்றுள்ளது.

### 5.2. குடிநீர் வழங்கல் – புதிய திட்டங்கள்

சென்னைக் குடிநீர் வாரியம், குடிநீர் வசதி இல்லாத இடங்களுக்கு, குறிப்பாக சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட **42** பகுதிகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி

குடிநீர் வழங்கிட பல்வேறு திட்டங்களை எடுத்துக்கொண்டுள்ளது.

**இணைக்கப்பட்ட 42 பகுதிகளின் குடிநீர் வழங்கல் திட்டங்களின் நிலவரம்**

| இணைக்கப் பட்ட பகுதிகளின் எண்ணிக்கை | குடிநீர் விநியோகப் பணிகள் முடிக்கப்பட்டவை | பணிகள் நடை பெற்று வருபவை | பணிகள் மேற்கொள்ளப் பட வேண்டியவை |
|---|---|---|---|
| 42 | 8 | 28 ** | 6 |

** உள்ளகரம் புழுதிவாக்கத்தின் ஒரு பகுதியில் குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள் முடிவடைந்துள்ளது. மற்ற பகுதிகளில் மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

திருவொற்றியூர், கத்திவாக்கம், அம்பத்தூர், மதுரவாயல், வளசரவாக்கம், போரூர், ஆலந்தூர் மற்றும் மீனம்பாக்கம் ஆகிய இணைந்த 8 பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளது.

இடையான்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், மணலி, சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், புழல், சின்னசேக்காடு, மாதவரம், நெற்குன்றம், ராமாபுரம், நொளம்பூர், காரம்பாக்கம், மணப்பாக்கம், நந்தம்பாக்கம், முகலிவாக்கம், பள்ளிக்கரணை, கொட்டிவாக்கம்,

பெருங்குடி, பாலவாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம் மற்றும் ஒக்கியம்–துரைப்பாக்கம், ஆகிய இணைந்த 27 பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாத்தூர், ஜல்லடம்பேட்டை, மடிப்பாக்கம், நீலாங்கரை, செம்மஞ்சேரி மற்றும் உத்தண்டி ஆகிய இணைந்த 6 பகுதிகளுக்கு மத்திய அரசின் அம்ருட் மற்றும் பிற நிதியுதவியின் கீழ் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் விரைவில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

**5.2.1 சென்னை, கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் **16.04.2013** அன்று சட்டப்பேரவையில் விதி எண் **110**ன் கீழ் மற்றுமொரு நாளொன்றுக்கு **150** மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தினை, நெம்மேலியில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள **10.50** ஏக்கர் காலி இடத்தில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

நெம்மேலியில் தற்போது இயங்கி வரும் கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அருகில் காலியாக உள்ள நிலத்தில் 150 எம்.எல்.டி. கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்க `1371.86 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. (சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை நகருக்கு கொண்டு செல்லும் குழாய்கள் உட்பட) இந்த விரிவான திட்ட அறிக்கைக்கான நிர்வாக ஒப்புதலை தமிழக அரசு அளித்துள்ளது. இதில் 60 சதவீதம் ஜெர்மன் அரசின் நிதி நிறுவனத்திலிருந்து கடனாகவும் மீதமுள்ள 40 சதவீத தொகையை தமிழக அரசு தனது சொந்த ஆதாரங்களிலிருந்தும் எதிர்வரும் மத்திய அரசின் திட்டங்களிலிருந்தும் இணைந்து செயல்படுத்த உள்ளது.

ஜெர்மானிய நிதி நிறுவனம் இந்த திட்டத்திற்காக மத்திய அரசுடன் கடன் ஒப்பந்த ஆவணத்தில் 28.06.2016 அன்று கையொப்பமிட்டுள்ளது. விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் குடிநீரால் தென் சென்னை பகுதிகளான வேளச்சேரி, ஆலந்தூர், சின்னமலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசன்பேட்டை, சோழிங்கநல்லூர், உள்ளகரம்–புழுதிவாக்கம், மடிப்பாக்கம்

மற்றும் தகவல் தொழில் நுட்ப பகுதிகளில் குடிநீர் விநியோகம் மேம்படும்.

### 5.2.2 சென்னை கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் தென் சென்னை பகுதியில் கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பட்டிபுலத்தில் அமைக்கப்படும் என்று சட்டப் பேரவையில் 2013ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இதற்காக உத்தேசிக்கப்பட்ட நிலம், சட்டப் பிரச்சனைக்குட்பட்டுள்ளது எனக் கண்டறியப்பட்டதால் இந்த இடத்திற்கு அருகாமையில் கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூர் என்ற இடம் மாற்றாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

பேரூரில் 400 எம்.எல்.டி. கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்க `4070.68 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. திட்ட அறிக்கை பரிசீலனையின்போது `2891.70 கோடி மதிப்பீட்டிற்கு திருத்தி

அமைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை மூலம் நிதி உதவி பெறும் வகையில் மத்திய அரசின் மூலம் ஜப்பான் பன்னாட்டு முகமைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் மற்றும் மதிப்பீடு பற்றி கலந்தாய்வு செய்யும் பொருட்டு ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் ஆய்வு குழுவினர் 12.01.2016 அன்று முதல் சென்னையில் கலந்தாய்வு செய்து வருகின்றனர். ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் உயர்மட்ட குழு 13.06.2016 அன்று சென்னைக்கு வருகை தந்து குடிநீர் வாரிய அதிகாரிகள் மற்றும் அவர்களது ஆய்வு குழுவினருடனும் கலந்து ஆலோசனை மேற்கொண்டனர். அதனடிப்படையில் திட்ட மதிப்பீட்டினை திருத்தி அமைத்து அதற்கு மத்திய நகர்ப்புர வளர்ச்சி அமைச்சகம் மற்றும் மத்திய நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறை மூலம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமைக்கு கடன் வழங்குவதை இறுதி செய்ய பரிந்துரை செய்யப்பட உள்ளது.

### 5.2.3 செம்பரம்பாக்கத்திலிருந்து, பூந்தமல்லி புறவழிச் சாலை சந்திப்பு வரை குடிநீர் கொணரும் இரண்டாவது பிரதான குழாய் பதித்தல்

செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்தின் முழு சுத்திகரிப்பு நீரின் அளவான நாளொன்றுக்கு 530 மில்லியன்

லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை சென்னைக்கு வழங்க ஏதுவாக செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 2000 மில்லி மீட்டர் விட்டமுள்ள இரண்டாவது குடிநீர் குழாயை 6.5 கி.மீ. நீளத்திற்கு, `41.35 கோடி மதிப்பீட்டில் பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பு வரையில் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் மார்ச் 2017 ஆம் ஆண்டிற்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.2.4 புதியதாக அமைக்கப்பட்டுவரும் கண்ணன் கோட்டை மற்றும் தேர்வாய் கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து, பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீர் கொண்டு செல்ல குழாய் பதிக்கும் பணி

புதிதாக அமைக்கப்பட்டுவரும் தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா கால்வாய் வரை 17 கி.மீ நீளத்திற்கு 900 மி.மீ விட்டமுள்ள பிரதான விசை குடிநீர் குழாய் பதிக்க `93.77 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஜனவரி 2017ல் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.2.5 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குடிநீர் திட்டப் பணிகள் (CMCDM)

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சென்னை நகருக்கும் அத்துடன் சிறப்பு கண்ணோட்டத்துடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும், உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தை தொடங்கினார்கள். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் கீழ்கண்டவாறு :–

**சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கல் திட்டங்கள்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (` கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| | **2011–12 குடிநீர் மேம்பாட்டு திட்டங்கள்** | | |
| 1 | குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாத குடிசைப் பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பதித்தல் | 23.56 | |
| 2 | புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் நிரப்பும் நிலையங்கள் அமைத்தல் | 12.23 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 3 | அடைப்பு ஏற்பட்ட பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்களை | 20.71 | |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றி அமைத்தல் | | |

| | | | |
|---|---|---|---|
| | **2012–13குடிநீர் வழங்கல் திட்டம்** | | |
| 4 | நொளம்பூர் | 18.00 | மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும். |
| 5 | காரம்பாக்கம் | 20.56 | மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும். |
| 6 | இராமாபுரம் | 32.54 | பிப்ரவரி 2017–க்குள் முடிக்கப்படும். |
| 7 | மணப்பாக்கம் | 10.92 | பிப்ரவரி 2017–க்குள் முடிக்கப்படும். |
| 8 | நந்தம்பாக்கம் | 6.00 | அக்டோபர் 2016–க்குள் முடிக்கப்படும். |
| 9 | ஒக்கியம்– துரைப்பாக்கம் | 46.00 | பிப்ரவரி 2017–க்குள் முடிக்கப்படும். |
| 10 | ஈஞ்சம்பாக்கம் | 22.30 | செப்டம்பர் 2016–க்குள் முடிக்கப்படும். |
| 11 | சோழிங்கநல்லூர்– காரப்பாக்கம் | 35.70 | மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும். |
| | **2013–14 குடிநீர் வழங்கல் திட்டம்** | | |
| 12 | சடையன்குப்பம் | 28.21 | |
| 13 | இடையான்சாவடி | | |

| | | | |
|---|---|---|---|
| 14 | கடப்பாக்கம் | | பிப்ரவரி 2017–க்குள் முடிக்கப்படும். |
| 15 | மணலி | 21.33 | |
| 16 | சின்னசேக்காடு | 11.00 | |
| 17 | வடபெரும்பாக்கம் மற்றும் தீயம்பாக்கம் | 20.00 | |
| 18 | கொட்டிவாக்கம் | 23.00 | ஆகஸ்ட் 2017–க்குள் முடிக்கப்படும். |
| 19 | பெருங்குடி | 45.00 | மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும். |
| 20 | பாலவாக்கம் | 30.00 | ஆகஸ்ட் 2017–க்குள் முடிக்கப்படும். |
| 21 | சூரப்பட்டு | 82.61 | ஏப்ரல் 2017–க்குள் முடிக்கப்படும் |
| 22 | கதிர்வேடு | | |
| 23 | புத்தகரம் | | |
| 24 | புழல் | | |
| 25 | பள்ளிக்கரணை | 42.82 | மறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளது. |
| 26 | முகலிவாக்கம் | 31.37 | |
| **மொத்தம்** | | **583.86** | |

### 5.2.6 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் (JnNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசு 35 சதவீதம் மானியம் வழங்குகிறது, மாநில அரசு 15 சதவீதத்தை வட்டியில்லா கடனாக

வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் பின்வருமாறு :-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (` கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | சென்னை மாநகரின் குடிநீர் விநியோக அமைப்பில் மேம்பாட்டுப் பணிகள் | 322.00 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| | **குடிநீர் வழங்கல் திட்டம்** | | |
| 2. | மதுரவாயல் | 23.30 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 3. | திருவொற்றியூர் | 85.11 | |
| 4. | அம்பத்தூர் | 267.08 | |
| 5. | ஆலந்தூர் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுப் பணிகள் | 64.39 | |
| 6. | உள்ளகரம்– புழுதிவாக்கம் | 24.24 | ஒரு பகுதி பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் அக்டோபர் 2016–க்குள் முடிக்கப்படும். |
| 7. | நெற்குன்றம் | 19.17 | செப்டம்பர் 2016–க்குள் முடிக்கப்படும் |
| **மொத்தம்** | | **805.29** | |
| **இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்பு நிதிப் பணிகள்** | | | |
| 1 | ஆவடி | 103.84 | ஒரு பகுதி பணிகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள பணிகள் செப்டம்பர் 2016–க்குள் முடிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| 2 | அனகாபுத்தூர் | 14.87 | பணிகள் ஜுன் 2018–க்குள் முடிக்கப்படும் |
| 3 | ஸ்ரீ பெரும்புதூர் | 42.20 | பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும் |
| **மொத்தம்** | | **160.91** | |

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் மத்திய அரசால் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

## 5.2.7 ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) திட்டம்

மாதவரம் பகுதிக்கான குடிநீர் வழங்கல் திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதி உதவியுடன் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பணியின் விவரம் பின்வருமாறு :

| **திட்டம்** | **திட்ட மதிப்பீடு (` கோடியில்)** | **பணியின் தற்போதைய நிலை** |
|---|---|---|
| மாதவரம் | 55.00 | பணிகள் நவம்பர் 2016–க்குள் முடிக்கப்படும் |

## 5.2.8 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்– III (TNUDP-III)

| வ. எண் | திட்டம் | திட்ட மதிப்பீடு (` கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | பம்மல் | 43.10 | பணிகள் செப்டம்பர் 2016–க்குள் முடிக்கப்படும் |
| 2 | பல்லாவரம் | 99.95 | பணிகள் ஏப்ரல் 2017–க்குள் முடிக்கப்படும். |
| | **மொத்தம்** | **143.05** | |

### 5.2.9 சென்னை மாநகரில் பழுதடைந்த குடிநீர் விநியோக குழாய்களை மாற்றி அமைக்கும் திட்டம் (I&A Fund)

சென்னை நகரில் மொத்தமுள்ள **6610** கிலோமீட்டர் நீள குடிநீர் விநியோக குழாய்களில் **30** ஆண்டுகளுக்கும் மேல் பழமையான **914** கிலோமீட்டர் நீளத்திற்கான குடிநீர் குழாய்களை கண்டறிந்து அவற்றில் சுமார் **258** கிலோமீட்டர் நீளத்திற்கான குழாய்களை உலக வங்கி நிதி உதவியுடன் குடிநீர் கசிவு மற்றும் அதனை நிவர்த்தி செய்யும் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்ட நிதி மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட நிதி உதவியுடன் குடிநீர் விநியோகிக்கும் குழாய்களை மேம்படுத்தும் திட்டத்தின் மூலமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக **310** கிலோமீட்டர் நீளத்திற்கு பழமையான குழாய்களை மாற்றி புதிய குழாய்கள் பதிக்கும் பணிகளும், குடிநீர் கொண்டு செல்லும் புதிய பிரதான குழாய்கள் மற்றும் விடுபட்ட தெருக்களுக்கு புதிய குழாய்கள்

பதிக்கும் பணிகளும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தை மேலும் மேம்படுத்துவதற்காக மொத்தம் `116.04 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு விரைவில் பணி ஆணை வழங்கப்பட்டு பணி துவங்கப்பட உள்ளது.

### 5.2.10 தாம்பரம், பல்லாவரம் மற்றும் பம்மல் பகுதிகளுக்கு குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் பதித்தல்

பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பில் இருந்து தாம்பரம் வரை 22 கி.மீ. நீளத்திற்கு 1,200 மில்லி மீட்டர் விட்டமுள்ள குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் பதித்து, தாம்பரம், பல்லாவரம், பம்மல் மற்றுமுள்ள உள்ளாட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்தினை விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியில் இருந்து `93.48 கோடியில் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்போது நடைபெற்று வரும் இப்பணிகள் ஆகஸ்ட் 2016—க்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.3 கழிவுநீரகற்று சேவைகள்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் கழிவு நீர் சுத்திகரித்தல், சுத்திகரிக்கப்பட்ட

நீரினை மீண்டும் பயன்படுத்துதல், மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் மின் உற்பத்தி செய்தல் உள்ளிட்ட கழிவு நீரகற்றல் வசதிகளை செய்து வருகிறது. சென்னையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 769 மில்லியன் லிட்டர் ஆகும்.

குடியிருப்புகளிலிருந்தும் மற்றும் பிற கட்டடங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுநீர் 4000 கி.மீட்டர் நீளம் உள்ள கழிவுநீர் அமைப்பின் மூலம் சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் கழிவுநீர் 232 கழிவுநீரேற்றும் நிலையங்களின் மூலம் அனுப்பப்படுகிறது. சென்னை மாநகரின் கழிவுநீர் அமைப்பு 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் தனித்தனியான சேகரித்தல், அனுப்புதல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றும் வசதிகளைக் கொண்டுள்ளது. கழிவுநீரேற்று நிலையங்களிலிருந்து அனுப்பப்படும் கழிவுநீர் 13 கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கப்படுகிறது.

**கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறன்**

| வ. எண் | சுத்திகரிப்பு நிலையம் | திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்) |
|---|---|---|
| 1 | நெசப்பாக்கம் (3 பிரிவுகள் 23+40+54) | 117 |

| | | |
|---|---|---|
| 2 | கொடுங்கையூர் (3 பிரிவுகள் 110+80+80) | 270 |
| 3 | கோயம்பேடு (3 பிரிவுகள் 34+60+120 ) | 214 |
| 4 | பெருங்குடி (2 பிரிவுகள் 79+72) | 151 |
| 5 | வில்லிவாக்கம் (1 பிரிவு 5) | 5 |
| 6 | ஆலந்தூர் (1 பிரிவு 12 ) | 12 |
| | **மொத்தம் (13 பிரிவுகள்)** | **769** |

**கட்டுமானப் பணியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**

| **வ. எண்** | **அமைவிடம்** | **சுத்திகரிப்பு திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்)** | **திட்ட மதிப்பீடு (` கோடியில்)** | **பணியின் தற்போதைய நிலை** |
|---|---|---|---|---|
| 1 | திருவொற்றியூர் | **31** | 26.33 | பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப் படும் |
| 2 | சோழிங்கநல்லூர் | 18 | 33.71 | பணிகள் டிசம்பர் 2016க்குள் முடிக்கப் படும் |
| | **மொத்தம்** | **49** | **60.04** | |

வாரியம் துவங்கிய **1978** ஆம் ஆண்டிலிருந்து வாரியத்தின் கழிவுநீரகற்றும் சேவைகள் கீழ்கண்டவாறு பன்மடங்காக வளர்ச்சி அடைந்துள்ளது.

**கழிவுநீரகற்றும் சேவையில் முன்னேற்றங்கள்**

| **வ.** | **விவரங்கள்** | **1978ஆம்** | **2016ஆம்** |
|---|---|---|---|

| எண் | | ஆண்டில் | ஆண்டில் |
|---|---|---|---|
| 1 | கழிவுநீரகற்று குழாய்களின் நீளம் (கி.மீ) | 1,223 | 4000 |
| 2 | கழிவுநீரேற்று நிலையங்களின் எண்ணிக்கை | 58 | 232 |
| 3 | கழிவுநீர் சுத்திகரிப்பு திறன் (நாளொறுக்கு மில்லியன் லிட்டரில்) | 57 | 769 |
| 4 | நுகர்வோர்களின் எண்ணிக்கை | **1,14,000** | **8,10,014** |

### 5.3.1 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்ட நிதியின் கீழ் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் (CMCDM)

சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் பழைய சென்னை மாநகருக்கு இணையாக பாதாள சாக்கடை திட்டங்களை சென்னைப் பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ள சென்னை குடிநீர் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சென்னை வாழ் மக்களின் வாழ்க்கை தரம், சுற்று சூழல் மற்றும் சுகாதாரம் பெருமளவில் மேம்படும். இந்நிதியின்கீழ் சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்காக கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**42 இணைக்கப்பட்ட பகுதிகளின் பாதாள சாக்கடை திட்டங்களின் நிலவரம்**

| இணைக்கப்பட்ட பகுதிகளின் | பாதாள சாக்கடை | பணிகள் நடை | நடைபெற உள்ளவை |
|---|---|---|---|

| எண்ணிக்கை | பணிகள் முடிக்கப் பட்டவை | பெறுபவை | விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டவை | விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டு வருபவை |
|---|---|---|---|---|
| 42 | 4 | 16 | 11 | 11 |

கூடுதலாக இணைக்கப்பட்ட **42** பகுதிகளில் **4** பகுதிகளான மாதவரம், வளசரவாக்கம், ஆலந்தூர், மற்றும் மீனம்பாக்கம் ஆகியவற்றில் பணிகள் முடிவுற்றுள்ளன.

இணைந்த **16** பகுதிகளான திருவொற்றியூர், கத்திவாக்கம், சூரப்பட்டு, புத்தகரம், கதிர்வேடு, அம்பத்தூர், நொளம்பூர், மதுரவாயல், போரூர், உள்ளகரம்–புழுதிவாக்கம், பள்ளிக்கரணை, ராமாபுரம், பெருங்குடி, சோழிங்கநல்லூர் மற்றும் காரப்பாக்கம், ஆகியவற்றில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. முகலிவாக்கத்திற்கான பாதாள சாக்கடை திட்ட ஒப்பந்தம் நீக்கப்பட்டு, திட்ட மதிப்பீடு திருத்தி அமைக்கப்பட்டு மறு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது.

இணைந்த **11** பகுதிகளான மணலி, சின்னசேக்காடு, இடையான்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், நெற்குன்றம், காரம்பாக்கம், மணப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், ஒக்கியம்–

துரைப்பாக்கம் மற்றும் ஜல்லடம்பேட்டை, ஆகியவற்றிற்கு மத்திய அரசின் அம்ருட் மற்றும் பிற நிதிகளின் கீழ் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் விரைவில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

மீதமுள்ள இணைந்த 11 பகுதிகளான புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், நந்தம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, மடிப்பாக்கம், செம்மஞ்சேரி மற்றும் உத்தண்டி ஆகிய பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை கலந்தாய்வினர் மூலம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கழிவு நீரகற்று பணிகள்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (` கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| | **2011–12 கழிவுநீர் மேம்பாட்டு திட்டங்கள்** | | |
| 1 | கழிவு நீரேற்று நிலையங் களுக்கு இடையில் உந்து குழாய் பதித்தல் | 9.26 | பணிகள்நிறைவடைந்து பயன்பாட்டில் உள்ளது. |
| 2 | பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை பெரிதாக்குதல் | 20.39 | |
| 3. | முகப்பேரில் பாதாள சாக்கடை அமைப்பின் திறப்பு வாயில்கள் அமைத்தல் மற்றும் நீர்மூழ்கி மின் இயந்திரத்துடன் கூடிய | 14.08 | |

| | | | |
|---|---|---|---|
| | சாலை ஓர கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டுதல் | | |
| 4 | தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் கழிவுநீரேற்று நிலையங்களின் மேம்பாட்டு பணிகள் | 11.24 | |
| 5 | கழிவுநீர் பிரதான குழாய்களை பெரிதாக்குதல் | 31.18 | |
| 6 | 35 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 50 தூர் வாரும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் | 9.90 | இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன |
| 7 | பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை புதிய வழி தடத்தில் அமைத்தல், பெரிதாக்குதல் மற்றும் தொடர்புப் பணிக | 36.55 | பணிகள் டிசம்பர் 2016–க்குள் முடிக்கப்படும் |
| **2012–13 பாதாளச் சாக்கடைத் திட்டம்** | | | |
| 8 | கத்திவாக்கம் | 86.15 | பணிகள் செப்டம்பர் 2016–க்குள் முடிக்கப்படும் |
| 9 | சோழிங்கநல்லூர்– காரப்பாக்கம் | 110.90 | பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும் |
| 10 | இராமாபுரம் | 48.50 | பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும் |
| 11 | கழிவுநீர் அமைப்பின் பராமரிப்புக்காக இயந்திரங்கள் கொள்முதல் | 15.20 | இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் |

| | | | |
|---|---|---|---|
| | | | உள்ளன |
| **2013–14 பாதாளச் சாக்கடைத் திட்டம்** | | | |
| 12 | திருவொற்றியூர் (அன்னை சிவகாமி நகர்) | 8.51 | பணிகள்நிறைவடைந்து பயன்பாட்டில் உள்ளது. |
| 13 | நொளம்பூர் | 26.01 | பணிகள் ஆகஸ்ட் 2017–க்குள் முடிக்கப்படும் |
| 14 | சூரப்பட்டு | 35.00 | பணிகள் செப்டம்பர் 2017–க்குள் முடிக்கப்படும் |
| 15 | புத்தகரம் மற்றும் கதிர்வேடு | 60.00 | பணிகள் செப்டம்பர் 2017–க்குள் முடிக்கப்படும் |
| 16 | முகலிவாக்கம் | 54.79 | மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது |
| | **மொத்தம்** | **577.66** | |

## 5.3.2 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் (JnNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசு 35 சதவீதம் மானியம் வழங்குகிறது. மாநில அரசு 15 சதவீதத்தை வட்டியில்லா கடனாக வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு :-

| **வ.** | **திட்டத்தின் பெயர்** | **திட்ட** | **பணியின்** |
|---|---|---|---|

| எண் | | மதிப்பீடு (` கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | தகவல் தொழில் நுட்ப சாலையில் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வசதிகள் அமைக்கும் பணிகள் | 41.77 | பணிகள் முடிவுற்றுள்ளன |

| | | | |
|---|---|---|---|
| | **பாதாள சாக்கடைத் திட்டம்** | | |
| 2 | உள்ளகரம்–புழுதிவாக்கம் | 28.08 | பணிகள் டிசம்பர் 2016–க்குள் முடிக்கப்படும் |
| 3 | அம்பத்தூர் (சிப்பம்–II, III, IV & V) | 130.91 | சிப்பம் III IV & V ஆகியவற்றின் பணிகள் முடிவுற்றுள்ளன். சிப்பம் IIற்கான பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும் |
| 4 | மதுரவாயல் | 57.45 | பணிகள் டிசம்பர் 2016–க்குள் முடிக்கப்படும் |
| 5 | போரூர் | 38.29 | பணிகள் செப்டம்பர் 2016–க்குள் முடிக்கப்படும் |
| 6 | பெருங்குடி | 20.19 | பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| 7 | பள்ளிக்கரணை | 58.61 | பணிகள் டிசம்பர் 2016–க்குள் முடிக்கப்படும் |
| | **மொத்தம்** | **375.30** | |
| **இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்புத் தொகை பணிகள்** | | | |
| 8 | ஆவடி நகராட்சி | 158.05 | பணிகள் டிசம்பர் 2016–க்குள் முடிக்கப்படும். |
| 9 | தாம்பரம் நகராட்சி | 160.97 | பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும். |
| 10 | திருமழிசை பேரூராட்சி | 20.47 | பணிகள் டிசம்பர் 2016–க்குள் முடிக்கப்படும் |
| 11 | ஸ்ரீ பெரும்புதூர் பேரூராட்சி | 47.40 | பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும். |
| | **மொத்தம்** | **386.89** | |

### 5.3.3 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–III - (TNUDP-III)

இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட 3 பகுதிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (` கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | மாதவரம் | 50.22 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 2 | திருவொற்றியூர் | 87.63 | பணிகள் அக்டோபர் 2016–க்குள் முடிக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| 3 | அம்பத்தூர் ( பகுதி –I) | 65.75 | பணிகள் நிறைவடைந்தன. |
| | மொத்தம் | 203.60 | |

## 5.3.4. தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டு திட்டம் (TNIPP)

### சோழிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம்

விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகரத்தின் தெற்கு பகுதிகளிலிருந்து உற்பத்தியாகும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வதற்கு சோழிங்கநல்லூரில் கூடுதலாக நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் `65.97 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது. இந்த சுத்திகரிப்பு நிலையம் நவீன தொழில்நுட்பத்துடனும் அதில் 36 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிஆணை வழங்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

## 5.3.5 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து மின்சாரம் தயாரித்தல்

சென்னைக் குடிநீர் வாரியம் கடந்த 9 ஆண்டுகளில் நாளொன்றுக்கு 498 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன்

கொண்ட 7 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை துவக்கியுள்ளது. இந்த சுத்திகரிப்பு நிலையங்களில் உயிரி வாயு (Bio Gas) மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த மின்சாரம் சுத்திகரிப்பு நிலையங்களின் இயக்கத்திற்கு தேவையான மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படுகிறது.

**கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து மின்சாரம் தயாரித்தல் 2015–16**

| வ. எண் | கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் | கழிவுநீர் சுத்திகரிக்கும் திறன் (நா.மி.லி) | சராசரி தயாரிக்கும் மின்சார அளவு KwH/day | தேவை யான மின்சாரத்தின் அளவு KwH/ day | தேவையின் மீது தயாரிக்கப் படும் அளவின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|
| 1 | கொடுங்கையூர் | 110 | 14,000 | 13,500 | 103.70 |
| 2 | கோயம்பேடு | 60 | 5,000 | 9,000 | 55.55 |
| 3 | கோயம்பேடு | 120 | 8400 | 14,000 | 60.00 |
| 4 | நெசப்பாக்கம்– I | 40 | 5,800 | 5,800 | 100.00 |
| 5 | நெசப்பாக்கம்– II | 54 | 3,000 | 9,000 | 33.33 |
| 6 | பெருங்குடி– I | 60 | 7,200 | 8,500 | 84.71 |
| 7 | பெருங்குடி– II | 54 | 7,000 | 8,500 | 82.35 |
| மொத்தம் | | 498 | 50,400 | 68,300 | 73.79 |

இதன் மூலம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், மின் தேவைக்காகத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தை சார்ந்திருக்கும் நிலையில் இருந்து 74%

குறைந்துள்ளது. கடந்த 9 வருடங்களில், `47.70 கோடி மதிப்பிலான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2015–16ல் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் மதிப்பு `8.10 கோடியாகும். இனி வரும் காலங்களில் நிறுவப்பட உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சாத்தியக் கூறுகள் உள்ள இடங்களில் இம்முயற்சியினைத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் மின் உற்பத்திக்கு உயிரி வாயு (Bio-gas) பயன்படுத்தப்படுவதால் புவி வெப்பத்தை அதிகரிக்கும் திறன் கொண்ட மீத்தேன் மற்றும் கரியமில வாயுக்கள் சுற்றுச்சூழலில் வெளியேற்றப்படுவது தவிர்க்கப்படுவதுடன், மாநில மின் கட்டமைப்பில் இருந்து பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் அளவும் குறைந்துள்ளது.

### 5.3.6 கழிவுநீர் அகற்றும் பணிகளை இயந்திரயமயமாக்குதல்

கழிவுநீர் அகற்றும் அமைப்பை சுத்தம் செய்யும் பணிகளில் இயந்திரமயமாக்கலை வாரியம் நடைமுறைபடுத்தியுள்ளது. இதற்கு தேவையான இயந்திரங்களை சென்னைக் குடிநீர் வாரியம் வாங்கியுள்ளது. தற்போது 119 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 241 தூர் வாரும் இயந்திரங்கள், 28 ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் 43 அதிவேக உறிஞ்சும்

இயந்திரங்கள் கழிவு நீர் அமைப்பினை பராமரித்திட பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### 5.3.7 கழிவுநீரகற்ற முன்னெச்சரிக்கை பராமரிப்பு பணிகள்

சென்னைக் குடிநீர் வாரியம், 8,10,014 கழிவுநீரகற்று இணைப்புள்ள நுகர்வோரின் பயன்பாட்டிற்காக 4000 கி.மீ. நீளமுள்ள கழிவுநீர் குழாய்களை பராமரித்து வருகிறது. சென்னை மாநகரின் புவி தளம் சமமாக உள்ளதால் கழிவுநீர் கட்டமைப்பை பராமரிப்பு செய்தல் சவாலான பணியாக உள்ளது.

சென்னைக் குடிநீர் வாரியம், கழிவுநீர் அமைப்புகளில் முன்னெச்சரிக்கை பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதை நடைமுறைபடுத்தியுள்ளது. கள நிலையை பொறுத்து கழிவுநீர் அமைப்புகளின் பராமரிப்பு காலம் வகைப்படுத்தப்படுகிறது. இதன் அடிப்படையில் உரிய இயந்திரங்களைக் கொண்டு கழிவுநீர் அமைப்பினை வாரியம் பராமரித்து வருகிறது.

மேற்கண்ட முன்னெச்சரிக்கை பராமரிப்புப் பணியினால் மாநகரில் கழிவுநீர் அடைப்புகள் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளன.

### 5.3.8 நீர்வழிப்பாதையில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

சென்னை நகர நீர் வழிப் பாதைகளில் **337** இடங்களில் கழிவு நீர் கலப்பதை நிறுத்த **2012–13** ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் `**300** கோடி ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் சென்னை நகர நீர்வழிப் பாதைகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலப்பதை தடுக்க இயலும். இக்கழிவுநீர் உரிய வகையில் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும்.

முதல் கட்டமாக உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியிலிருந்து `**150** கோடி ஒப்பளிக்கப்பட்டு, மொத்தமுள்ள **337** இடங்களில், **179** இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஜனவரி **2017**ல் முடிக்கப்படும்.

இரண்டாவது கட்டமாக சென்னை நகரின் நீர் வழி தடத்தில் கழிவுநீர் கலக்கும் மீதமுள்ள **158** இடங்களில் **7** சிப்பங்களாக பணிகள் மேற்கொள்ள `**163** கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சிப்பம் **1** அடையாறு நீர் வழிபாதையில் **60** சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பக்கிங்காம் கால்வாய் மற்றும் கூவம் நதி வடிகால் பகுதிகளைச் சார்ந்த **3** சிப்பங்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள **3** சிப்பங்களுக்காக ஒப்பந்தப்

புள்ளிகள் பெறப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டு 1 சிப்பம் பரிசீலனையில் உள்ளது. மீதமுள்ள 2 சிப்பங்களின் ஒப்பதந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்பட்டு ஒரு சிப்பத்திற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளது. மீதமுள்ள 1 சிப்பத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

### 5.3.9. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற் சாலைகளுக்கு மறு பயன்பாட்டுக்கு அளித்தல்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் நாளொன்றுக்கு 28.67 மில்லியன் லிட்டர் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை சென்னை பெட்ரோலியம் கார்ப்பொரேஷன் லிமிடெட், சென்னை உரத்தொழிற்சாலை லிமிடெட் மற்றும் மணலி பெட்ரோ இராசயன பொருட்கள் தொழிற்சாலைக்கும் வழங்கி வருகிறது. இதன்மூலம் வாரியத்திற்கு 2015–16ஆம் ஆண்டில் `14.27 கோடி வருமானம் கிடைத்தது.

### 5.3.10. கழிவு நீர் மறு சுழற்சி திட்டங்கள்

சென்னை மாநகரில் குடிநீர் தட்டுப்பாட்டை குறைக்கும் நடவடிக்கையாக பயன்படுத்தப்பட்ட நீரை சுத்திகரித்து குடிநீர்

அல்லாத பிற உபயோகங்களுக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை, குடிநீரல்லாத பிற உபயோகங்களுக்கு உபயோகிப்பது குறைக்கப்படும்.

### 5.3.10.1 கழிவுநீரை மறுசுழற்சி முறையில் சுத்தம் செய்து மீண்டும் உபயோகப்படுத்துதல்

**கோயம்பேட்டில் 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன்கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம்**

இருங்காட்டுக் கோட்டை, ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கு, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை வழங்க `**394** கோடி மதிப்பீட்டில் கோயம்பேட்டில் நாளொன்றுக்கு **45** மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (Tertiary Treatment Reverse Osmosis) அமைக்க தமிழக அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. பணி விரைவில் தொடங்கப்படும்.

### 5.3.10.2. கொடுங்கையூரில் 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில், சுத்திகரிக்கப்பட்ட நீரை தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்துவதற்குப் பதிலாக இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில், மூன்றாம் நிலை சுத்திகரிப்பு செய்து வடசென்னை பகுதியில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் மின்சார வாரிய மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்குவதற்காக அறிவித்தார்கள். இதற்காக கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் `255 கோடி மதிப்பீட்டில் TNSUDP நிதியின் கீழ் அமைக்கப்படும். தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளது.

## 5.4 நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சென்னை மாநகருக்கு தேவைப்படும் தண்ணீரை தொடர்ந்து பாதுகாப்புடன் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு நீடித்த குடிநீர் ஆதார

பாதுகாப்பு இயக்கத்தை அறிவித்தார்கள். இத்திட்டத்தின் கீழ் பெருவளாகங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை நிறுவி அதன் மூலம் மழைநீரை சேமித்தல், நகரை சுற்றியுள்ள ஏரிகளை சீரமைத்தல் மழைநீர் வடிகால்களில் இருந்து பெறப்படும் மழைநீரை சேகரித்து நீரூற்று கிணறுகள் மூலம் நிலத்தடி நீராதாரத்தை மேம்படுத்துதல், நீர் நிலைகளின் எல்லைகளை வரையறை செய்தல், மறுசுழற்சி மூலம் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை கொண்டு குடிநீரல்லாத பிற உபயோகங்களுக்கு பயன்படுத்தவும் நீர்நிலைகளின் நீராதாரங்களை மேம்படுத்தவும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**பெருவளாகங்களில் மழை நீர் சேகரிப்பு**

பெரு வளாகங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை நிறுவும் பணிகளின் கீழ் மாநிலக் கல்லூரி வளாகம், சேப்பாக்கம், அரசினர் உயர்நிலை பள்ளி வளாகம், மாத்தூர், பொப்பிலி ராஜா மேல்நிலை பள்ளி. புழல், அம்பத்தூர் மற்றும் வளசரவாக்கம் சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகம் ஆகிய ஐந்து பகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**கோவில் குளங்களில் மழைநீர் சேகரிப்பு**

கோவில் குளங்களில் மழைநீர் சேகரிப்பு திட்டத்தின் கீழ் திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோவில் குளம் மற்றும்

மைலாப்பூர் மாதவப் பெருமாள் கோவில் குளங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**மழைநீர் வடிகால் மூலம் மழைநீர் சேகரித்தல்**

மழைநீர் வடிகால்களிலிருந்து பெறப்படும் மழைநீரை கொண்டு நிலத்தடி நீராதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் கொளத்தூரில் உள்ள டீச்சர்ஸ் காலனி 6வது பிரதான சாலை, மற்றும் 4வது குறுக்குத் தெருவில் அமைந்துள்ள பூங்காக்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**நீர் நிலைகளை புனரமைத்தல்**

நீர் நிலைகளை மறு சீரமைத்தல் மற்றும் புனரமைப்பு செய்யும் திட்டத்தின் கீழ் சோளிங்கநல்லூர் மற்றும் பெருங்களத்தூர் பகுதிகளில் அமைந்துள்ள ஏரிகளில் அரசு சாரா பொது நல சங்கங்களின் உதவியுடன் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மழைநீர் சேகரிப்பில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொலை நோக்கு சிந்தனையுடன் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக மழைநீர் சேகரிப்பினை சென்னைக் குடிநீர் வாரியம் 2002 முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதன் மூலம் சென்னை நகரம் மழைநீர் சேகரிப்பில் முன்னோடியாக திகழ்கிறது. சென்னைக் குடிநீர் வாரியம் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை மக்களிடையே பிரபலமடையச் செய்ய கையேடுகள், குறிப்பேடுகள், கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகள் ஆகியவை மூலம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

குடிநீர் மற்றும் கழிவுநீர் புது இணைப்பை பெறுவதற்கும், பழைய இணைப்பைப் புதுப்பிப்பதற்கும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவது அனைத்து கட்டடங்களுக்கும் கட்டிடங்களின் அளவு மற்றும் பரப்பு வித்தியாசம் இல்லாமல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தற்போது சுமார் 7,82,670 கட்டிடங்களில், மொத்தம் 8,47,500 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உள்ளன. 2015–16ஆம் ஆண்டு 10500 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டன. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் மூலம் நிலநீர் செறிவூட்டு திறன் 2.60 ஆயிரம் மில்லியன் கனஅடி (TMC) ஆக உள்ளது. முறையாகவும், தொடர்ச்சியாகவும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பராமரிக்க நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் சிறப்பு முகாம்கள் வருடந்தோறும் நடத்தப்படுகிறது. சென்னை நகரில் உள்ள மழைநீர் சேகரிப்பு

அமைப்புகளை பகுதிப் பொறியாளர்களும், பணிமனை பொறியாளர்களும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள்.

மழைநீர் சேகரிக்கும் திட்டத்தை செயல்படுத்தியதால், ஒவ்வொரு வருடமும் குறிப்பாக மழைக்காலத்தில் நிலத்தடி நீரின் மட்டமும் தரமும் ஆண்டு தோறும் மேம்பட்டு வருகிறது.

### 5.5 குறைகளை களைதல்

வாரியத்தின் சேவைகளை மேம்படுத்தவும், வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கவும் மற்றும் நுகர்வோர்களின் குறைகளை விரைந்து களையவும், வாரியம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

#### 5.5.1 24X7 புகார்களை பதிவு செய்தல் மற்றும் கண்காணிக்கும் அமைப்பு

சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் குறைகள் களையும் பிரிவு **24** மணி நேரமும் வாரத்தின் எல்லா நாட்களும் புகார்களை பெறவும், பதிவு செய்யவும், கண்காணிக்கவும் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண் **45674567** மூலமாகவோ, நுகர்வோர் தங்களது புகார்களையும்/ குறைகளையும் பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட

புகார்கள்/குறைகள் அந்தந்த பணிமனைப் பொறியாளர்களுக்கு தாமதமின்றி இணையதளம் மூலமும், குறுந்தகவல் சேவை மூலமும் அனுப்பப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. புகார் பிரிவில் சாராசரியாக ஒரு நாளைக்கு **85** புகார்கள் பதிவு செய்யப்படுகின்றன. குறைநிவர்த்தி அமைப்பு பொதுமக்களால் எளிதாக பயன்படுத்தும் விதத்தில் சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. ஒரு தனியான நுகர்வோர் குறை தீர்க்கும் பிரிவு தலைமை அலுவலத்தில் நுகர்வோர்களுக்கு சேவை செய்ய அமைக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் தங்களது புகார்களை அலைபேசி தொடர்பு மூலமாக பதிவு செய்தவுடன், புகார் பெறப்பட்டதற்கான ஒப்புகையை வாரியத்திடமிருந்து குறுந்தகவல் சேவை மூலமாக பெற சென்னைக் குடிநீர் வாரியம் குறுந்தகவல் சேவை முறையை (SMS) செயல்படுத்தியுள்ளது. புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்கள் குறித்து நுகர்வோருக்கு மீண்டும் குறுந்தகவல் சேவை மூலமாக தகவல் தரப்படுகிறது.

### 5.5.2 இணையதளம் மூலம் புகார்களை நிவர்த்தித்தல்

சென்னைக் குடிநீர் வாரியம் www.chennaimetrowater.tn.nic.in இணைய தளத்தை கொண்டுள்ளது.

நுகர்வோர் தங்களின் புகார்களை வாரியத்தின் இணையதளத்தின் மூலம் பதிவு செய்ய முடியும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்கள் நிவர்த்திக்க சம்பந்தப்பட்ட பகுதி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு மக்கள் சாசனத்தில் குறிப்பிட்டபடி நிவர்த்திக்கப்படுகிறது.

### 5.5.3 திறந்தவெளி குறைதீர்க்கும் கூட்டம்

வாரியம், சேவை வழங்குதலை மேம்படுத்துவதற்காக, திறந்தவெளி குறைதீர்ப்பு கூட்டங்கள் (Open House Meeting) வாரியத்தின் அனைத்து பகுதி அலுவலகங்களிலும், ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடத்தப்பட்டு வாரியத்தின் மூத்த அதிகாரிகள் இந்த கூட்டங்களில் தலைமை தாங்குகின்றனர். இக்கூட்டங்களில் பெறப்படும் புகார்கள் / குறைகள் / ஆலோசனைகள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

# 6. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சென்னை மாநகர் நீங்கலாக மாநிலம் முழுவதும் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்தும் நோக்குடன் சட்டபூர்வமான ஒரு நிறுவனமாக **14.04.1971** அன்று தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம், மேலாண்மை இயக்குநரை தலைவராகக் கொண்டு தொழில்நுட்ப பிரிவு, நிதி பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவுகளுடன் சென்னையில் இயங்கி வருகிறது. தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வேலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நகரங்களை தலைமையிடமாகக் கொண்டு, நான்கு தலைமைப் பொறியாளர்களுடனும் மற்றும் தருமபுரியில் திட்ட தலைமைப் பொறியாளருடனும் இயங்கி வருகின்றது.

### 6.1 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாடுகள்

அ. ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளுக்கான குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கான திட்டமிடுதல், ஆய்வு, வடிவமைப்பு, செயலாக்கம் மற்றும் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வருதல்.

ஆ. கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்

இ. குடிநீர் தரக் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு

ஈ. குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத் தன்மைக்கான செயல்பாடுகள்

உ. பயிற்சி நடவடிக்கைகள்

**6.2 ஊரகக் குடிநீர்த் திட்டம்**

கடந்த 40 ஆண்டுகளாக, மத்திய அரசு ஊரகப் பகுதி மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் என வரையறுக்கப்பட்டதை தற்போது 12–வது ஐந்தாண்டு திட்டகாலத்தில் 55 லிட்டர் என தற்காலிகமாக உயர்த்தியுள்ளது. 2017 ஆம் ஆண்டின் முடிவில் நாட்டிலுள்ள 50 விழுக்காடு கிராம மக்களுக்கு வீட்டிற்கு அருகாமையிலேயே வீட்டிணைப்புடன் அல்லது வீட்டிலிருந்து 100 மீட்டர் தொலைவில் (மற்றும் மலைப்பகுதியில் 10 மீட்டர் உயரத்திலும்) நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கும் வண்ணம் திட்டங்கள் செயல்படுத்த இலக்கிடப்பட்டுள்ளது.

ஊரகக் குடியிருப்புகளில் தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீரின் அளவிற்கும் வரையறுக்கப்பட்ட அளவிற்குமான இடைவெளியை ஆய்வு செய்து குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஊரக குடிநீர்த் திட்டங்கள் மாநில அரசின் குறைந்தபட்சத் தேவைத் திட்டம், மத்திய அரசின் தேசிய ஊரக குடிநீர்த் திட்டம் மற்றும் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும்பொருட்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. பயனாளி ஒரே ஒரு உள்ளாட்சி அமைப்பாக இருந்தால் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் பராமரிப்பிற்காக அந்த உள்ளாட்சி அமைப்பிடம் ஒப்படைக்கப்படுகின்றன. பயனாளிகள் ஒரு உள்ளாட்சி அமைப்பிற்கு மேல் இருந்தால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே திட்டங்களின் பராமரிப்பை மேற்கொள்கிறது.

**01.04.2016** அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டில் மொத்தம் **1,00,018** ஊரக குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் **90,694** ஊரக குடியிருப்புகள், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு **40** லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு, முழுமையான குடிநீர் வசதி பெற்றுள்ளன. குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட **351** குடியிருப்புகளோடு

சேர்த்து 9,324 குடியிருப்புகள் பகுதியளவு குடிநீர் வசதி பெற்றுள்ளன.

2016–17 ஆம் ஆண்டில், ஏற்கனவே செயலாக்கத்தில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலம் 351 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளோடு சேர்த்து பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற 3269 குடியிருப்புகள் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இது தவிர, பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற 5588 ஊரகக் குடியிருப்புகளுக்கு ஏற்கனவே செயலாக்கத்தில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலமாக குடிநீர் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள 467 பகுதியளவு குடிநீர் வழங்கப்பட்ட குடியிருப்புகளுக்கு முழுமையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க 2017–18 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

### 6.3 குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத் தன்மை

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர்த் திட்டங்களை செயலாக்குவதோடு அல்லாமல் குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத் தன்மையை மேம்படுத்த குடிநீர் ஆதாரங்களின் அருகே தடுப்பணைகள், செறிவூட்டுக்

குழாய்கள், கசிவுநீர் குட்டைகள் போன்ற நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகள் நிர்மாணிக்கும் பணிகளையும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்படுத்தி வருகிறது.

**2011–12, 2012–13, 2013–14** மற்றும் **2014–15** ஆம் ஆண்டுகளில் **3,348** நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகள் **`228.24** கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன.

### 6.4 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

மக்களுக்கு போதிய அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நோக்குடன் மாநிலத்தின் கடலோரப் பகுதிகள், குடிநீரின் தரம் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் குடிநீர் தேவை உள்ள பகுதிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து, ஆறுகள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்த்தேக்கங்களை பொதுவான நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகரங்கள் மற்றும் ஊரக குடியிருப்புகள் பயன்பெறும் வண்ணம் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை செயலாக்கி வருகின்றது.

**2015–2016** ஆம் ஆண்டில், **27.79** இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச தேவைத் திட்டம், தேசிய

விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் 27 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் `924.92 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன. விவரங்கள் பின்வருமாறு:–

கீழ்க்காணும் 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 3.15 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் `94.55 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன : –

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (` கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | திருச்சி மாவட்டம், அந்தநல்லூர், மணிகண்டம் மற்றும் மணப்பாறை ஒன்றியங்களைச் சார்ந்த 212 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 48.67 | 1.14 |
| 2 | திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 93 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் பிரதான கூட்டுக் குடிநீர் திட்ட மொத்த ஒதுக்கீட்டின் கீழ்) | 9.37 | 0.37 |

| | | | |
|---|---|---|---|
| 3 | திருநெல்வேலி மாவட்டம் மானூர் மற்றும் பாளையங்கோட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 34 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 6.35 | 0.22 |
| 4 | திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர், குஜிலியம்பாறை மற்றும் ஒட்டன்சத்திரம் ஒன்றியங்களைச் சார்ந்த 235 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் பிரதான கூட்டுக் குடிநீர் திட்ட மொத்த ஒதுக்கீட்டின் கீழ்) | 5.50 | 0.73 |
| 5 | தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி, ஆழ்வார்திருநகரி (பகுதி), திருச்செந்தூர் (பகுதி), சாத்தன்குளம் (பகுதி) மற்றும் உடன்குடி (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 30 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 9.19 | 0.30 |
| 6 | கோயம்புத்தூர் மாவட்டம், ஜமீன் ஊத்துக்குளி பேரூராட்சி மற்றும் 63 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 15.47 | 0.39 |
| | **மொத்தம்** | **94.55** | **3.15** |

மேலும், பின்வரும் **18** கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்,**20.31** இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் `**640.76** கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளன.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீடு (` கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | பணி முன்னேற்ற விவரம் |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஒன்றியத்திலுள்ள 9 கிராம ஊராட்சிகளைச் சார்ந்த 185 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 42.94 | 0.81 | 96 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 2 | ஈரோடு மாவட்டம், பவானிசாகர், நம்பியூர் ஒன்றியங்களைச் சார்ந்த காரப்பாடி மற்றும் 5 இதர கிராம ஊராட்சிகளிலுள்ள 88 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 11.72 | 0.19 | 95 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 3 | அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியத்தைச் சார்ந்த 281 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 26.06 | 1.09 | 87 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 4 | திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் மற்றும் உடுமலைப்பேட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 158 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 54.14 | 1.23 | 85 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 5 | ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த வெள்ளக்கோயில், காங்கேயம் நகராட்சிகள் மற்றும் 528 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 91.40 | 4.72 | 85 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீடு (` கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | பணி முன்னேற்ற விவரம் |
|---|---|---|---|---|
| 6 | தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம் (பகுதி), ஸ்ரீவைகுண்டம் (பகுதி) மற்றும் தூத்துக்குடி (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 90 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 17.17 | 0.48 | 75 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 7 | கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் ஒன்றியத்தைச் சார்ந்த குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 60 குடியிருப்புகள், 59 வழியோரக் குடியிருப்புகள் மற்றும் லால்பேட்டை பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 18.16 | 0.60 | 65 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 8 | தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி (பகுதி), கயத்தார் (பகுதி), ஒட்டபிடாரம் (பகுதி), விளாத்திகுளம் (பகுதி) மற்றும் புதூர் (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 248 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 94.04 | 1.25 | 60 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 9 | தேனி மாவட்டம், கடமலைகுண்டு – மயிலாடும்பாறை ஒன்றியத்தைச் சார்ந்த ஆத்தங்கரைப்பட்டி மற்றும் 14 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 2.65 | 0.07 | 60 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீடு (` கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | பணி முன்னேற்ற விவரம் |
|---|---|---|---|---|
| 10 | திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு அருகிலுள்ள இராதாபுரம் மற்றும் வள்ளியூர் ஒன்றியங்களைச் சார்ந்த கூடங்குளம் மற்றும் 12 ஊராட்சிகளைச் சார்ந்த 100 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 68.10 | 0.88 | 60 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 11 | திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் மற்றும் சங்கரன்கோவில் ஒன்றியங்களைச் சார்ந்த 147 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 31.32 | 1.56 | 54 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 12 | திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் பேரூராட்சி (பகுதி), பாப்பாக்குடி (பகுதி), கடையம் மற்றும் கீழப்பாவூர் ஒன்றியங்களைச் சார்ந்த 163 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 46.55 | 1.55 | 54 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 13 | நீலகிரி மாவட்டம், முள்ளிகூர், இத்தலார் மற்றும் நஞ்சநாடு ஊராட்சிகளைச் சார்ந்த முள்ளிகூர் மற்றும் 54 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 25.85 | 0.30 | 52 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீடு (` கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | பணி முன்னேற்ற விவரம் |
|---|---|---|---|---|
| 14 | திருநெல்வேலி மாவட்டம், மானூர் (பகுதி) மற்றும் பாளையங்கோட்டை (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 170 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 32.40 | 1.13 | 41 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 15 | திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 101 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் பிரதான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டின் கீழ்) | 4.11 | 0.43 | சோதனை ஓட்டத்தில் உள்ளது. 57 குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகிக் கப்படுகிறது. |
| 16 | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 109 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் பிரதான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டின் கீழ்) | 4.08 | 0.59 | சோதனை ஓட்டத்தில் உள்ளது. 78 குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகிக் கப்படுகிறது. |
| 17 | திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 201 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் பிரதான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டின் கீழ்) | 8.96 | 0.86 | சோதனை ஓட்டத்தில் உள்ளது. 94 குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகிக் கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர், வேப்பந்தட்டை, ஆலத்தூர் ஒன்றியங்களைச் சார்ந்த 306 குடியிருப்புகள், அரும்பாவூர் மற்றும் பூலம்பாடி பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 61.11 | 2.57 | சோதனை ஓட்டத்தில் உள்ளது. 217 குடியிருப்புக ளுக்கு குடிநீர் விநியோகிக் கப்படுகிறது. |
| | **மொத்தம்** | **640.76** | **20.31** | |

கீழ்க்காணும் 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 4.33 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் `189.61 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீடு (` கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1 | தேனி மாவட்டம் வடுகப்பட்டி பேரூராட்சி, பெரியகுளம் ஒன்றியத்தைச் சார்ந்த 57 ஊரக குடிருப்புகள், பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மேலும், திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் | 45.70 | 0.92 | ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீடு (` கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | குறிப்புரை |
|---|---|---|---|---|
| | திட்டம் | | | |
| 2 | திருப்பூர் மாவட்டம் வெள்ளக்கோயில், மூலனூர், தாராபுரம், குண்டடம், காங்கேயம் ஒன்றியங்கள் மற்றும் ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியத்தைச் சார்ந்த 1262 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (பகுதி–2). | 91.16 | 2.72 | பணி ஆணை வழங்கும் நிலையில் உள்ளது. |
| 3 | கரூர் மாவட்டம், குளித்தலை மற்றும் தோகமலை ஒன்றியங்களைச் சார்ந்த 253 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 52.75 | 0.69 | |
| | மொத்தம் | 189.61 | 4.33 | |

## 6.5 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் :

**2015–2016** ஆம் ஆண்டில் **113.58** இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச தேவை திட்டம், தேசிய

ஊரக குடிநீர் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த நகர்புர வளர்ச்சித் திட்டம், ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி, வீட்டு வசதி மற்றும் நகர்புர வளர்ச்சி நிதியம் மற்றும் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் நிதி உதவியுடன் **14** பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் **`5192.18** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன. விவரங்கள் பின்வருமாறு :

கீழ்க்காணும் **3** பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் **52.67** இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் **`2303.92** கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (`கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | பணி முன்னேற்றம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | மதுரை மாவட்டம் மேலூர், 2 நகராட்சிகள், 6 பேரூராட்சிகள் மற்றும் 1,430 ஊரக குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 784.00 | 15.92 | திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 28.12.15 அன்று திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. |
| 2 | வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944* வழியோர ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 1295.00 | 24.46 | |
| 3 | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள், 965 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். | 224.92 | 12.29 | திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27.02.16 அன்று திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. |
| | **உப மொத்தம் – I** | **2303.92** | **52.67** | |

**குறிப்பு : (*** 25 குடியிருப்புகளுக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணைய அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் குடிநீர் வழங்கப்படும்)

கீழ்க்காணும் **10** பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் **`2748.04** கோடி மதிப்பீட்டில் **59.23** இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (` கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | பணி முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1 | புதுக்கோட்டை மாவட்டம் 1751 குடியிருப்புகள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 315.70 | 7.63 | 88 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 2 | புதுக்கோட்டை மாவட்டம் 1,766 ஊரக குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டம் 125 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 301.50 | 6.65 | 85 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (` கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | பணி முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 3 | கடலூர் மாவட்டம், கடலூர் நகராட்சி, புவனகிரி, பரங்கிப்பேட்டை பேரூராட்சிகள் மற்றும் 812 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 260.54 | 7.75 | 84 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 4 | தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, அதிராமபட்டிணம் மற்றும் பெருமகளூர் பேரூராட்சிகள் மற்றும் 1153 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 495.70 | 7.00 | 75 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 5 | நாகப்பட்டினம் மாவட்டம், குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 295 குடியிருப்புகள் மற்றும் 315 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 105.70 | 3.70 | 70 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 6 | சேலம் மாவட்டம், நங்கவள்ளி மற்றும் மேச்சேரி ஒன்றியங்களைச் சார்ந்த 698 ஊரக குடியிருப்புகள் மற்றும் 6 பேரூராட்சிகளுக்கான மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 158.64 | 3.93 | 54 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (` கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) | பணி முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 7 | கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர், 6 பேரூராட்சிகள் மற்றும் 134 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 130.46 | 1.83 | 45 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 8 | விருதுநகர் மாவட்டம், 755 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 234.00 | 6.51 | 35 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 9 | திண்டுக்கல் மாவட்டம், நத்தம் மற்றும் 2 பேரூராட்சிகள், 1276 ஊரக குடியிருப்புகளுக்கான (திண்டுக்கல் மாவட்டம் 2 பேரூராட்சிகள், 354 ஊரக குடியிருப்புகள் மற்றும் திருச்சி மாவட்டம் 135 ஊரக குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய) கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 636.00 | 11.27 | 44 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 10 | கன்னியாகுமரி மாவட்டம், அழகியபாண்டிபுரம், 8 பேரூராட்சிகள் மற்றும் 246 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 109.80 | 2.96 | 30 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| | **உப மொத்தம் – II** | **2748.04** | **59.23** | |

கீழ்க்காணும் பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் `**140.22** கோடி மதிப்பீட்டில் **1.68** இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (` கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை ( இலட் சத்தில்) | பணி முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1 | திருச்சி மாவட்டம், முசிறி, துறையூர், தாத்தையங்கார்பேட்டை மற்றும் உப்பிலியாபுரம் ஒன்றியத்திலுள்ள 293 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 140.22 | 1.68 | பணி ஆணை வழங்கும் நிலையில் உள்ளது. |
| | **உப மொத்தம் – III** | **140.22** | **1.68** | |
| | **பெரு மொத்தம்** | **5192.18** | **113.58** | |

## 6.6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் புனரமைப்புப் பணிகள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் நீண்டகாலம் பயன்பாட்டில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் நீராதாரங்களின் கொடுதிறன் குறைவு, மின்னிறைப்பான்களின் செயல் திறன் குறைவு, சாலை அகலப்படுத்துதலின்போது ஏற்படும் குடிநீர் குழாய்கள் மற்றும் தடுக்கிதழ்கள் சேதம் போன்ற காரணங்களால் பயனாளிகளுக்கு வடிவமைக்கப்பட்ட அளவு

குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்படுகிறது. இந்நிலையை சீர் செய்து பயனாளிகளுக்கு வடிவமைக்கப்பட்ட அளவு குடிநீர் வழங்கும் நோக்கத்துடன் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2015–16 ஆம் ஆண்டில், மாநில அரசின் பங்களிப்பு நிதி, தேசிய ஊரகக் குடிநீர்த் திட்ட நிதி, மத்திய இயற்கை இடர்பாடு நிதி மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை நிதியுதவியுடன் `40.04 கோடி செலவில் 5262 புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**முடிக்கப்பட்டப் பணிகளின் விவரம்**

| வ. எண். | வகை | பணிகளின் எண்ணிக்கை | தொகை (` கோடியில்) |
|---|---|---|---|
| | **தேசிய ஊரகக் குடிநீர்த் திட்ட நிதியுதவி / மாநில அரசின் பங்களிப்பு நிதி** | | |
| 1 | நீராதாரங்களை மேம்படுத்துதல் | 57 | 4.69 |
| 2 | நீண்டகால பயன்பாட்டிலுள்ள மின் மோட்டார் மாற்றும்/ பழுது நீக்கும் பணிகள் | 86 | 3.44 |
| | **மாநில பேரிடர் மேலாண்மை நிதி / இடைப்பாடுத் திட்டம்** | | |
| 3 | நீராதார மேம்பாட்டுப் பணிகள் | 53 | 5.00 |
| | **மாநில பேரிடர் மேலாண்மை நிதி / வெள்ள நிவாரண நிதி** | | |
| 4 | மோட்டார், கேபிள், பைப்லைன் சீரமைப்புப் பணிகள் | 86 | 2.00 |
| | **மத்திய அரசின் இயற்கை இடர்பாடு / வெள்ள நிவாரண நிதி** | | |
| 5 | நீராதார மேம்பாட்டுப் பணிகள் | 216 | 3.80 |
| 6 | மின் மோட்டார், பேனல்போர்டு, | 2389 | 9.10 |

| வ. எண். | வகை | பணிகளின் எண்ணிக்கை | தொகை (` கோடியில்) |
|---|---|---|---|
| | கேபிள் சீரமைப்புப் பணிகள் | | |
| 7 | பைப்லைன் சீரமைப்புப் பணிகள் | 2375 | 12.01 |
| | **மொத்தம்** | **5262** | **40.04** |

## 6.7 குடிநீரின் தரப் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு

பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் மாநில அளவிலான ஒரு குடிநீர் தரப்பரிசோதனைக் கூடம், மாவட்ட அளவிலான **31** குடிநீர் தரப்பரிசோதனைக் கூடங்கள் மற்றும் உப கோட்ட அளவிலான **51** குடிநீர் தரப்பரிசோதனைக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன**.** இதன் வாயிலாக ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் இரசாயனம் மற்றும் நுண்கிருமிகள் உள்ளிட்ட அடிப்படை தரக் காரணிகளுக்கான பரிசோதனைகள் மற்றும் குடிநீர் தரக் கண்காணிப்பு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன**.** தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் உள்ள மாநில அளவிலான குடிநீர் தரப்பரிசோதனைக் கூடம் மாநில அளவிலான வழிகாட்டி பரிசோதனைக் கூடமாக மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது**.**

2015–16 ஆம் நிதியாண்டில் 52,000 குடிநீர் மாதிரிகள், மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசோதனைக் கூடங்களில் மாநில அரசின் நிதி உதவியுடன் தரப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. மேலும் தேசிய ஊரக குடிநீர் திட்ட நிதி உதவியுடன் 82,000 குடிநீர் மாதிரிகள் உப கோட்ட பரிசோதனை கூடங்களில் தரப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. 3,000 விலையில்லா நீர் பரிசோதனை பெட்டிகள் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டன. மற்றும் 10,000 கடைநிலை பணியாளர்களுக்கு நீர் பரிசோதனை பெட்டி உபயோகத்திற்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2016–17 ஆம் நிதியாண்டில் 65,000 குடிநீர் மாதிரிகள், மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசோதனைக் கூடங்களில், மாநில அரசின் நிதி உதவியுடன் தரப் பரிசோதனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ், 1.53 இலட்சம் குடிநீர் மாதிரிகள் உப கோட்ட அளவிலான 51 குடிநீர் தரப்பரிசோதனைக் கூடங்களில் தரப் பரிசோதனை செய்யப்பட உள்ளன மற்றும் 15,000 கடைநிலை பணியாளர்களுக்கு குடிநீர் தரப் பரிசோதனை பெட்டி உபயோகத்திற்கான பயிற்சி அளிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 12524 ஊராட்சிகளுக்கு நீர்த்தரப் பரிசோதனைப்பெட்டிகள் வழங்கப்பட உள்ளன. மேலும் மாநில

அளவிலான தரப்பரிசோதனைக் கூடத்தை NABL Accreditation (National Accreditation Board for Testing and Calibration Laboratories) நிலைக்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 6.8 குடிநீர் பாதுகாப்பு வாரம்

தமிழக அரசு, ஆண்டுதோறும் குடிநீரின் தரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக குடிநீர் பாதுகாப்பு வாரம் நடத்தி வருகிறது .

2015–2016ஆம் ஆண்டில் நடக்க இருந்த தேசிய ஊரக குடிநீர் மற்றும் சுகாதார விழிப்புணர்வு வாரம் (குடிநீர் பாதுகாப்பு வாரம் என அழைக்கப்படுவது) இந்த வருடம் 27.06.16 முதல் 03.07.16 வரை நடத்தப்பட்டது. இதில் 31 மாவட்ட பேரணிகள், 385 ஒன்றிய பேரணிகள், 6,262 கிராமசபை கூட்டங்கள் மூலம் நீர் தர விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ஊராட்சிகளுக்கு 3,000 விலையில்லா நீர்த்தரப் பரிசோதனைப் பெட்டிகள் வழங்கப்பட்டன. 26,374 ஆசிரியர்கள் மற்றும் 13,187 விசைப்பம்பு இயக்குபவர்களுக்கு பரிசோதனை செய்முறை பயிற்சி மற்றும் நீர்

மாதிரி சேகரிப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. சுமார் 2 இலட்சம் நீர்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டன.

2016–17–ம் ஆண்டிற்கான குடிநீர் பாதுகாப்பு வாரம் நடத்தப்பட உள்ளது. இதில் 31 மாவட்ட பேரணிகள், 385 ஒன்றிய பேரணிகள், 12,524 ஊராட்சி பேரணிகள் மூலம் நீர்த்தர விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது. 12,524 விலையில்லா நீர்த்தரப் பரிசோதனைப் பெட்டிகள் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட உள்ளன. ஆசிரியர்கள் மற்றும் விசைப்பம்பு இயக்குபவர்களுக்கு பரிசோதனை செய்முறை பயிற்சி மற்றும் நீர் மாதிரி சேகரிப்பு பயிற்சியும் அளிக்கப்பட உள்ளது . சுமார் 5 இலட்சம் நீர்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.9 நகர்ப்புர குடிநீர் திட்டம்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் திட்டப்பணிகளை செயலாக்கும் முகமையாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுகிறது. திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டவுடன், பராமரிப்புக்காக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் இத்திட்டங்கள் ஒப்படைக்கப்படுகின்றன.

#### 6.9.1 செயலாக்கத்தில் உள்ள நகர்ப்புர குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள்

2015–16 ஆம் ஆண்டில், 17 நகராட்சிகள் மற்றும் 17 பேரூராட்சிகளில் உள்ள 14.62 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 34 தனி குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் `562.43 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் இருந்தன. 2015–16 ஆம் ஆண்டில், 3 நகராட்சிகள் மற்றும் 9 பேரூராட்சிகளில் உள்ள 3.65 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 12 தனி குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் `81.66 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டன.

மீதமுள்ள பணிகளில், 14 நகராட்சிகள் மற்றும் 8 பேரூராட்சிகளில் உள்ள 10.98 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 22 தனி குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் `480.77 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும் 2 மாநகராட்சிகள் மற்றும் 2 பேரூராட்சிகளில் உள்ள 6.83 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 4 தனி குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் `373.82 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்த புள்ளி நிலையில் உள்ளன.

### 6.10 கூட்டுக் குடிநீர்த் திட்டம் – இயக்குதல் மற்றும் பராமரிப்பு

அரசு ஆணை (நிலை) எண்.84, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.10.03.1994–ன்படி ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1.4.2016 நிலவரப்படி, 8 மாநகராட்சிகள், 66 நகராட்சிகள், 323 பேரூராட்சிகள், 46,438 ஊரக குடியிருப்புகள் மற்றும் 532 தொழிற்சாலைகள்/நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், 547 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 4.18 கோடி மக்கள் பயன்பெறும் வண்ணம், இவ்வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்ட 547 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலமாக நாளொன்றுக்கு **சராசரியாக** 1,842 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

| வ. எண் | பயனாளிகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | திட்டத்தில் வடிவமைக்கப் பட்டபடி வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு (எம்.எல்.டி) | தற்போது சராசரியாக வழங்கப்படும் குடிநீரின் அளவு (எம்.எல்.டி) |
|---|---|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 8 | 265 | 195 |
| 2 | நகராட்சிகள் | 66 | 264 | 220 |
| 3 | பேரூராட்சிகள் | 323 | 333 | 306 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | ஊரகக் குடியிருப்புகள் | 46,438 | 1,055 | 1,026 |
| 5 | தொழிற்சாலைகள்/ வணிக நிறுவனங்கள் | 532 | 144 | 95 |
| | **மொத்தம்** | **47,367** | **2,061** | **1,842** |

**2015–16** ஆம் ஆண்டில், இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்காக **`588.86** கோடி செலவிடப்பட்டுள்ளது. குடிநீர் கட்டணங்களின் மூலமாக பெறப்பட்ட வருமானம் **`261.04** கோடி ஆகும்.

வருவாய்க்கும், செலவினத்திற்கும் உள்ள இடைவெளியை சரிசெய்ய தமிழ்நாடு அரசு **2014–15** ஆம் நிதியாண்டில் **`140.00** கோடியும், **2015–16**–ஆம் நிதியாண்டில் **`207.11** கோடியும் சிறப்பு மானியமாக அளித்துள்ளது.

## 6.11 குடிநீர்த் திட்டங்களுக்கான ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்தல்

### 6.11.1 குடிநீர்த் திட்டங்கள்

**2015–16** ஆம் ஆண்டில், **`10,920.53** கோடி மொத்த மதிப்பீட்டில் **126.34** இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் **32**

குடிநீர் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் இருந்தன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள 32 திட்டங்களின் தற்போதைய நிலை பற்றிய விவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | விபரம் | குடிநீர் திட்டங்கள் (எண்ணிக்கை) | பயனாளிகள் | மக்கள் தொகை (இலட்சத்தில்) | மதிப்பீட்டுத் தொகை (` கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | அரசின் அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படவுள்ள திட்டங்கள் | 5 | 3 நகராட்சிகள், 15 பேரூராட்சிகள் மற்றும் 1479 ஊரகக் குடியிருப்புகள் | 12.45 | 1004.40 |
| 2 | ஒப்புதல் பெறுவதற்கான பல்வேறு நிலைகளில் உள்ள திட்டங்கள் | 8 | 7 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 2519 ஊரகக் குடியிருப்புகள் | 17.13 | 2052.06 |
| 3 | ஆய்வுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ள திட்டங்கள் | 19 | 1 மாநகராட்சி, 12 நகராட்சிகள், 51 பேரூராட்சிகள் மற்றும் 14524 ஊரகக் குடியிருப்புகள் | 96.76 | 7864.07 |
| | **மொத்தம்** | **32** | **1 மாநகராட்சி, 22 நகராட்சிகள், 77** | **126.34** | **10920.53** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பேரூராட்சிகள் மற்றும் 18522 ஊரகக் குடியிருப்புகள் | | |

## 6.11.2 கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள்:

தமிழக அரசின் அறிவிப்பின் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் குதிரைமொழியிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் ஆலந்தலையிலும் தலா நாளொன்றுக்கு **60** மில்லியன் லிட்டர் திறனுடைய கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் அமைக்க, `**1,355** கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் **3.20** இலட்சம் மக்களும் தூத்துக்குடி மாவட்டத்தில் **8.05** இலட்சம் மக்களும் பயன்பெறுவர்.

தற்போது கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் அமைப்பதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டு இரு மாவட்ட ஆட்சியர்களின் முன்நுழைவு அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு, கடலோர ஒழுங்குமுறை மண்டல ஒப்புதல் பெறுவதற்கான செயல்முறை பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 6.11.3. சென்னை பெங்களூருக்கிடையே தொழிற்சாலைகள் தேவைக்கென பிரத்யேக நீராதார குழாய் அமைப்புத் திட்டம்

தொழிற்சாலைகளின் நீர்த்தேவையினை கருத்தில் கொண்டு, சென்னை பெங்களூர் வழித் தடத்தில், புதிய தொழிற்சாலைகள் அமைவதை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விரிவான ஆய்வு மேற்கொண்டது. சென்னை மற்றும் ஒசூருக்கு இடையே, 10,881 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு 46 தொகுப்புகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளது. இத்தொழிற்சாலைத் தொகுப்புகளுக்கு போதுமான நீர் வழங்கும் திட்டத்திற்கான முன்சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உட்கட்டமைப்பு வளர்ச்சி வாரியத்தின் (TNIDB) அறிவுரையின்படி, முதற்கட்டமாக பொன்னேரி மற்றும் ஒசூர் தொழிற்சாலை முனையங்களுக்கான விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது பொன்னேரி தொழிற்சாலை முனையம் சார்ந்த பணிகளை சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திடம் அரசு ஒப்படைத்துள்ளது.

### 6.12 பாதாள சாக்கடைத் திட்டங்கள்:

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பாதாள சாக்கடைத் திட்டங்களை தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட தலைநகரங்கள் மற்றும் பிற நகரங்களில் செயல்படுத்தி வருகின்றது.

தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலுக்கிணங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அனைத்து நகரங்களிலும் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கும் நோக்கில் **3** மாநகராட்சிகள் **117** நகராட்சிகள் மற்றும் **516** பேரூராட்சிகள் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளுக்கென **636** விரிவான திட்ட மதிப்பீடுகள் **`20,820** கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளன

### 6.12.1 செயலாக்கத்தில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள்

**2015–16** ஆம் ஆண்டில், தேனி–அல்லி நகரம், கடலூர், உடுமலைப்பேட்டை, புதுக்கோட்டை, நாகப்பட்டினம், திருவள்ளூர் நகராட்சிகள் மற்றும் மாமல்லபுரம், திருச்செந்தூர், ஒரத்தநாடு பேரூராட்சிகளுக்கான **9** பாதாள சாக்கடைத் திட்டங்கள் **`387.01** கோடி மதிப்பீட்டில் **6.08** இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நடப்பாண்டில், **19** பாதாள சாக்கடைத் திட்டங்கள் `**1012.16** கோடி மதிப்பீட்டில் **14.29** இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும், சத்தியமங்கலம், இராமேஸ்வரம், பொள்ளாச்சி நகராட்சிகள் மற்றும் வேளாங்கண்ணி பேரூராட்சிக்கான **4** பாதாள சாக்கடைத் திட்டங்கள் `**233.15** கோடி மதிப்பீட்டில் **1.88** இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

## 6.12.2. கழிவுநீர் கசடு மேலாண்மை (Septage Management):

நடப்பாண்டில், கருங்குழி பேரூராட்சிக்கான கழிவுநீர் கசடு மேலாண்மை திட்டப்பணி `**4.93** கோடி மதிப்பீட்டில் **12,000** மக்கள் பயன்பெறும் வகையில் செயலாக்கத்தில் உள்ளது.

பரிட்சார்த்த முறையில் கருங்குழி பேரூராட்சியில் முன்னோடியாக செயல்படுத்தப்படும் கழிவுநீர் கசடு மேலாண்மை திட்டம் முடிவுற்றபின் திட்ட செயல்பாட்டினை ஆராய்ந்து இத்தொழில் நுட்பம் மக்கள் தொகை அடர்த்தி குறைவாக உள்ள இதர பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

### 6.13 நிலநீர் பிரிவின் செயல்பாடுகள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் குடிநீர் திட்டங்களுக்கான நீராதாரம் தோற்றுவிக்கும் பணிகள் விஞ்ஞான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொலையுணர்வு நுட்பம் மற்றும் புவியியல் தகவல் முறைமை ஆகிய நவீன தொழில் நுட்பம், நீராதாரங்களை தோற்றுவிக்கும் பணிகள், நீராதாரங்களின் நீடித்த நிலைத்தன்மைக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நீர் செறிவூட்டுக் கட்டமைப்பு பணிகள் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் அமையப் பெற்றுள்ள நிலத்தடி நீர் வளங்களை குறிக்கும் வரைபடங்களை தயாரிக்கும் பணிகள் மத்திய அரசின் நிதியாதாரத்துடன் மேற்கொள்ளப்பட்டு மாவட்டங்களின் வரைபடங்கள் தயாரிக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

இவ்வரைபடங்களில் நீரின் தன்மை குறித்த விபரங்களை ஒருங்கிணைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு வரைவு

வரைபடங்கள் இறுதி ஒப்புதலுக்காக தேசிய தொலை உணர்வு மையம், ஐதராபாத் மற்றும் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கிய தாமிரபரணி ஆற்று வடிநிலப் பகுதியில், குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத் தன்மையை உறுதி செய்யும் வகையில், மத்திய அரசின் நிதி உதவியுடன் 3 ஆண்டுகளில் முடித்திட ஒரு ஆய்வுத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு `2.75 கோடி ஆகும்.

இத்திட்டம் 2014–ம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 10 இடங்களில் தானியங்கி நீர் அளவை கருவிகள் நிறுவப்பட்டுள்ளது. 5 இடங்களில் தானியங்கி தட்பவெப்ப அளவுக் கருவிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மிகத் துல்லியமான செயற்கைக் கோள் தொலை உணர்வு படங்கள் தேசிய தொலை உணர்வு மையம், ஐதராபாத்தில் இருந்து வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. தற்போது ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2017 மே மாதம் முடிக்கப்படும்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள பயனற்ற கற்குவாரிகளை

குடிநீர் ஆதாரங்களுக்காகவும் மற்றும் மழைநீர் சேகரிக்கும் அமைப்பாகவும் உபயோகப்படுத்தும் வகையில் ஒரு ஆய்வினை தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் `48.20 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் 2014 நவம்பர் மாதம் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள 6 பயனற்ற கற்குவாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் ஜுன் 2016–ல் முடிக்கப்பட்டு ஆய்வு அறிக்கை இறுதி செய்யும் நிலையில் உள்ளது.

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள பயனற்ற கற்குவாரிகளை மழைநீர் சேகரிப்பு மற்றும் குடிநீர் வழங்கும் குளங்களாக மாற்றும் ஒரு திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.

குடிநீர் வழங்கல் அபிவிருத்தி செய்யும் பொருட்டு ஆய்விற்கு 4 கற்குவாரிகள் முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளப்படும். இந்த 4 கற்குவாரிகளிலும் பருவ மழைக் காலங்களில் 0.75 மில்லியன் கன மீட்டர் நீர் சேகரிக்க இயலும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட நீரின் மூலம் விழுப்புரம் மாவட்டம்,

வானூர் ஒன்றியம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், தாமஸ் மலை ஒன்றியத்திலுள்ள சுமார் **1,60,000** மக்களின் கோடை கால குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய இயலும்.

### 6.14 மேலாண்மை தகவல் அமைப்பு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனைத்து திட்டங்களின் தகவல் விவரங்களை சேகரிக்க மேலாண்மை தகவல் அமைப்பின் மூலமாக ஒருங்கிணைக்கப்பட்ட மின் ஆளுமை இணையம் மூலம், வாரியத்தின் அனைத்து அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும் திட்ட மேலாண்மை, நிதி கணக்கீடு, மனித வள மேலாண்மை மற்றும் அனைத்து குடிநீர் திட்டங்கள், பாதாள சாக்கடைத் திட்டங்கள், பராமரிப்பிலுள்ள குடிநீர்த் திட்டங்கள், மழைநீர் சேகரிப்பு, நீர் செறிவூட்டும் தடுப்பணைகள் ஆகிய பணிகளின் முன்னேற்ற விவரங்கள் ஒரே மென்பொருள் உதவியுடன் இணைத்து கணினி வழியாக உடனுக்குடன் பெறப்படுகிறது. கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் தலைமை நீரேற்று நிலையங்கள் மூலம் தினசரி வழங்கப்படும் நீரின் அளவுகள் பற்றிய விவரங்கள் கணினி வழியாக உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில், மின்னனு ஒப்பந்தப்புள்ளி (e-Tender) கோரல் முறை அனைத்து அலுவலகங்களிலும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. வாரியத்தில் குடிநீர் திட்டங்கள் மிகச் சிறப்பான முறையில் திட்டமிட்டு வடிவமைக்க ஏதுவாக வடிவமைப்பு மென்பொருளை (CAD Software) பயன்படுத்தி குடிநீர் பகிர்மானக் கட்டமைப்பு மற்றும் கழிவுநீர் குழாய் இணைப்புகளின் கட்டமைப்புகள் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

TWADNEST எனப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட மின் ஆளுமை இணையம் வாரியத்தின் தேவைக்கேற்ப அவ்வப்பொழுது திருத்தி அமைக்கப்படுகிறது. மேலும் அதன் உபயோகத்திற்கேற்ப உள்ள வன்பொருட்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும், திறன் உயர்த்தப்பட்டும் வருகிறது.

வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்படும் குடிநீர்த் திட்ட செயலாக்கத்தின் பணி முன்னேற்றத்தினை உடனுக்குடன் ஆய்வு செய்யும் பொருட்டு, சென்னை தலைமை அலுவலகம், கோவை, மதுரை, தஞ்சாவூர், தருமபுரி மற்றும் வேலூரில் உள்ள தலைமைப் பொறியாளர் அலுவலகங்கள் மற்றும் திருச்சி, கடலூர், சேலம், திருநெல்வேலியில் உள்ள நான்கு மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகங்கள் காணொளி காட்சி மூலம்

இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து சிறப்பாக கண்காணித்து செயல்படுத்தி வருகின்றது.

வாரியத்தில் நடைபெற்று வரும் குடிநீர்த் திட்டங்களின் பணி முன்னேற்றத்தினை, களப் பணியிடத்திலிருந்து உடனுக்குடன் தெரிவிக்கும் பொருட்டு (Android- Mobile) கைத்தொலைபேசி பயன்பாட்டு இணையம் உருவாக்கப்பட்டு செயலாக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தளவாடப் பொருள்களின் தரக் கட்டுப்பாட்டை உறுதிபடுத்த இணையதள சேவையின் மூலமாக செயல்படும் உடன் நிகழ்வு (Online) இணையம், மண்டல பரிசோதனை கூடங்களுடன் இணைக்கப்பட்டு செயலாக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

## 7. தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம்

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம் (TNUDF), தமிழக அரசு மற்றும் தனியார் பங்களிப்பில் ஒரு பொறுப்பாட்சியாக, ICICI வங்கி, HDFC மற்றும் IL&FS ஆகிய தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் தோற்றுவிக்கப்பட்டது.

இம்மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் முதலீடுகளை அதிகரிப்பதற்கான நிதி இடையீட்டாளராக செயல்படுதல் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட்ட மற்றும் நீடித்த நிலைத்தன்மையுடய அமைப்புகளாக வளரவும் அவை தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் மிகத் தரமான நகர்ப்புர சேவைகளை வழங்குவதற்கும் ஏதுவாக செயல்படுவது தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் தொலைநோக்குப் பார்வை ஆகும்.

நகர்ப்புர உட்கட்டமைப்பு சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் புதுமையான திட்டங்களை உருவாக்குதல், தற்சார்பற்ற மதிப்பீடுகள் மற்றும் நீடித்த நிதி உதவி வழங்குதல் ஆகியவற்றின் மூலம் இம்மாநிலத்தின் நகர்ப்புர மக்களின் வாழ்க்கை தர மேம்பாட்டிற்கு பங்களிப்பது தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் குறிக்கோளாகும்.

## 7.1 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள் வருமாறு :

- நகர்ப்புர உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு, நிதி அளிப்பதன் மூலம், நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

- பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி மூலமாக, உட்கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்.

- நகர்ப்புர வளர்ச்சி அமைப்புகள் மூலதன சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக, அவற்றின் நிதி நிர்வாகத்தை மேம்படுத்துதல்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால் செயல்படுத்தப்படும் அடிப்படை வசதி திட்டங்களான சாலைகள், பாலங்கள், மழை நீர் வடிகால்கள், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றுக்கு நிதி உதவி அளிப்பதோடு மட்டுமல்லாமல், வணிக நோக்குடைய திட்டங்களான பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் போன்றவற்றுக்கும் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம் நிதி உதவி அளிக்கிறது.

இந்த நிதியமானது, தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு பொறுப்பாட்சி நிறுவனத்தின் (TNUITCL) மூலம்

நிர்வகிக்கப்படுகிறது மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் இயக்கப்படுகிறது.

இந்த நிறுவனத்தின் மொத்த மூலதனம் தமிழக அரசின் பங்குத் தொகையான `**142.91** கோடியையும் சேர்த்து `**199.60** கோடியாகும். மீதமுள்ள `**56.69** கோடியை ICICI வங்கி, HDFC மற்றும் IL&FS ஆகிய மூன்று நிறுவனங்கள் பங்களிப்பு செய்துள்ளன.

### 7.2 வெளி ஆதாரத் திட்டங்கள்

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியமானது, ஜெர்மானிய நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புர கட்டமைப்பு நிதியுதவி – தமிழ்நாடு (SMIF-TN) திட்டம் நிலை II – பகுதி 1 & பகுதி– 2 மற்றும் உலக வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் (TNSUDP) ஆகிய இரண்டு வெளி ஆதாரக்கடன்களை நிர்வகித்து வருகிறது. மேற்சொன்ன வெளி நிதி ஆதாரங்களின் மொத்த அளவு `**5286.55** கோடியாகும் (அட்டவணை 1). இதில், `**3022.22** கோடி பல்வேறு திட்டங்களுக்காக / பணிகளுக்காக உறுதி செய்யப்பட்டுள்ளது.

## அட்டவணை 1– வெளி ஆதாரக் கடன் அளவு

**(` கோடியில்)**

| வ. எண் | உட்கூறுகள் | TNSUDP | SMIF-TN | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | | நிலை II பகுதி 1 | நிலை II பகுதி 2 | |
| 1 | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான கடன் | 1225.92 | 289.08 | 407.15 | 1922.15 |
| 2 | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூலதன மானியம் | 1225.92 | 289.08 | 407.15 | 1922.15 |
| 3 | மாதிரி நகரங்களுக்கான மானியம் | 389.48 | 0 | 0 | 389.48 |
| 4 | தொழில்நுட்ப உதவி மானியம் | 344.80 | 0 | 22.39 | 367.19 |
| 5 | பங்கு பத்திரம் & மற்றவை | 644.88 | 0 | 40.70 | 685.58 |
| **மொத்தம்** | | **3831.00** | **578.16** | **877.39** | **5286.55** |

**a) KfW (ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனம்) நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ள நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி – தமிழ்நாடு (SMIF-TN) திட்டம்**

இரண்டு நிலைகளைக் கொண்ட இத்திட்டத்தின் முதல் நிலை டிசம்பர் 2015–ல், நிறைவடைந்தது. இரண்டாவது நிலை இரண்டு பகுதிகளை (பகுதி 1 & பகுதி– 2) கொண்டது.

ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனமான KfW நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி தமிழ்நாடு இரண்டாம் நிலையின் பகுதி 1–ஆம் திட்டம் 2012–லும், இரண்டாம் நிலையின் பகுதி– 2–ஆம் திட்டம் 2014–லும், சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்தி இயற்கை வளங்களைப் பாதுகாத்து நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின், இரண்டாம் நிலையின் பகுதி 1-ன் செயல்பாட்டு கால அளவு டிசம்பர் 2012–ல் இருந்து ஜூன் 2018 வரை மற்றும் இரண்டாம் நிலையின் பகுதி– 2 -ன் செயல்பாட்டு கால அளவு ஜூன் 2014–ல் இருந்து டிசம்பர் 2019 வரை ஆகும்.

இரண்டாம் நிலையின் பகுதி 1–ஆம் திட்டத்தின் மொத்த மதிப்பீடு `578.16 கோடி (80 மில்லியன் யூரோ). இது நகர்ப்புர அடிப்படை வசதி திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதியுதவியாக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் மற்றும் மூலதன மானியமாக வழங்கப்படும்.

இரண்டாம் நிலை பகுதி– 2–ஆம் திட்டத்தின், மொத்த மதிப்பீடு `877.39 கோடி (107.75 மில்லியன் யூரோ). இதில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதியுதவியாக `814.30 கோடி (100 மில்லியன் யூரோ) கடன் மற்றும் மூலதன மானியமாக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டிற்கு மானியமாக `22.39 கோடி (2.75 மில்லியன் யூரோ) வழங்கப்படும். மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டுவதற்காக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்திற்கு `40.70 கோடி (5 மில்லியன் யூரோ) கடனாக வழங்கப்படும்.

இத்திட்டங்களின் கீழ், 24 துணைதிட்டப் பணிகளுக்காக `1038.38 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### b) உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ள தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் (TNSUDP)

நகர்ப்புர அடிப்படை உட்கட்டமைப்பு வசதி திட்டங்களை நிறைவேற்ற தேவைப்படும் நிதியை கருத்திற்கொண்டு `2554 கோடி உலக வங்கியின் நிதியுதவியுடன் (400 மில்லியன்

அமெரிக்க டாலர்) `3831 கோடி (600 மில்லியன் அமெரிக்க டாலர்) மதிப்பீட்டில், தமிழ்நாடு நீடித்தநகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP), மார்ச் 2015–ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான கால அளவு ஜுன் 2015 முதல் மார்ச் 2022 வரை ஆகும்.

இத்திட்டத்தின் கீழ், 13 துணைதிட்டப் பணிகளுக்காக `1966.62 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## 7.3. குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF)

2002–ல் தொடங்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF), அரசுக்குச் சொந்தமான ஒரு அறக்கட்டளையாகும். சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் மற்றும் மூலதனச் சந்தையில் நிதி திரட்டி இலாப நோக்கமற்று, இந்த அறக்கட்டளை செயல்பட்டு வருகிறது. இந்த நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி உதவியளித்தல்
- கூட்டு நிதி அமைப்பின் கீழ் மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டுதல்

- நேரடி, பொது மற்றும் தனியார் துறை கூட்டு முதலீட்டின் மூலம் குடிநீர் மற்றும் கழிவுநீர் துறைகளில் தனியார் பங்களிப்பை ஊக்குவித்தல்

- நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையிலிருந்து நேரடியாக நிதி திரட்ட உதவுதல்

- குடிநீர், சுகாதாரம் மற்றும் பிற உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மத்திய / மாநில அரசின் நேரடி முகவராக செயல்படுதல்.

குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம், பத்திர வெளியீட்டின் மூலமாக `222.30 கோடி மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டியுள்ளது.

**அட்டவணை–2 – கடன் பத்திரங்கள் வெளியீட்டின் மூலமாக திரட்டப்பட்ட தொகை**

| வ. எண் | விவரங்கள் | ` கோடியில் |
|---|---|---|
| 1 | **9.20 சதவீதம் – 15 ஆண்டுகள் –மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு**<br>2002 ஆம் ஆண்டு 13 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 30.41 |

| | | |
|---|---|---|
| 2 | **7.25 சதவீதம் – 10 ஆண்டுகள் – கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வரியில்லாத மாற்ற இயலாத திரும்பப்பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு**<br>2008 ஆம் ஆண்டு 7 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வரியில்லா கடன் பத்திரங்கள் (முதல் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 6.70 |
| 3 | **7.50 சதவீதம் – 10 ஆண்டுகள் – கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வரியில்லாத மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு**<br>2010 ஆம் ஆண்டு 7 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வரியில்லா கடன் பத்திரங்கள் (இரண்டாம் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 83.19 |
| 4 | **10.60 சதவீதம் – 10 ஆண்டுகள் – மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு**<br>2012 ஆம் ஆண்டு 10 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் (முதல் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 51.00 |
| 5 | **8.71 சதவீதம் – 10 ஆண்டுகள் – மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு**<br>2013 ஆம் ஆண்டு 10 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் (இரண்டாம் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 51.00 |
| | **மொத்தம்** | **222.30** |

மேலும் நிதி ஆண்டு **2016–17**–ல், ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனமான KfW நிதியுதவி அளிக்கும், நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி தமிழ்நாடு நிலை II பாகம் **–2**

(SMIF-TN II-2) திட்டத்தின் கீழ் `80 கோடி நிதி திரட்ட உத்தேசித்துள்ளது.

## 7.4.சென்னை பெரு நகர வளர்ச்சி திட்டம் (Chennai Mega City Development Mission)

சென்னை பெரு நகர வளர்ச்சி திட்டம் (CMCDM) அரசால் தொடங்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தை (TNUIFSL) மைய முகவராக அரசு நியமித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு திட்டங்களை செயல்படுத்த பெரு நகர சென்னை மாநகராட்சிக்கும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கும் நிதியுதவி வழங்கப்படும். இதற்கான நிதி, ஒவ்வொரு ஆண்டும், அரசின் வரவு–செலவு திட்ட ஒதுக்கீட்டின் வாயிலாக வழங்கப்படும்.

இது வரை `3209.16 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு ஒப்பளிக்கப்பட்டு, மானிய தொயைாக `2500.00 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில், `1700 கோடி, அரசிடமிருந்து

பெறப்பட்டு, அவற்றில், `**1699.96** கோடி பெரு நகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் ஆலோசனை மற்றும் கட்டணங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது **(அட்டவணை–3).**

**அட்டவணை–3**

**சென்னை பெரு நகர வளர்ச்சி திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட நிதி**

**(` கோடியில்)**

| **வ. எண்** | **முகமை பெயர்** | **திட்ட மதிப்பீடு** | **ஒப்பளிக்கப்பட்ட மானியம்** | **வழங்கப்பட்ட மானியம்** |
|---|---|---|---|---|
| 1 | பெரு நகர சென்னை மாநகராட்சி | **1487.55** | **1274.24** | **1071.37** |
| 2 | சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் | **1721.61** | **1217.86** | **625.89** |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | ஆலோசனை மற்றும் கட்டணங்கள் | 7.90 | 7.90 | 2.70 |
| | **மொத்தம்** | **3217.06** | **2500.00** | **1699.96** |

## 7.5. தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) 1956–ஆம் ஆண்டு இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்கீழ், ஒரு பொது வரையறை நிறுவனமாக `2 கோடி அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகையைக் கொண்டு நிறுவப்பட்டது. இதில் செலுத்தப்பட்ட பங்குத் தொகையான `1 கோடியில், தமிழக அரசின் பங்கு `49 லட்சம் ஆகும். இதன் மற்ற பங்குதாரர்கள், ICICI வங்கி, HDFC மற்றும் IL & FS ஆகிய நிறுவனங்கள் ஆகும்.

இந்நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம், மானிய நிதியங்கள் ஆகிய அரசு அறக்கட்டளைகளை நிர்வகித்து வருகிறது. மேலும், திட்ட மேம்பாடு, திட்ட மதிப்பீடு, திட்ட வடிவமைப்பு, மூலதன திரட்டு மற்றும் நிதி மேலாண்மை ஆகிய பல பணிகளையும் இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

நகர்ப்புர உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான, ஆரம்பம் முதல் திட்டச் செயலாக்கம் வரையிலான அனைத்திற்குமான முழு தீர்வையும் தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் அளித்து வருகிறது. இந்நிறுவனம் தொடங்கப்பட்டது முதல் இன்று வரை ஆதாயம் ஈட்டி வருவதோடு ஆதாயப் பங்குத் தொகையையும் தொடர்ந்து வழங்கி வருகிறது.

## 8. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

சென்னை பெரு நகரத்திற்குட்பட்ட நீர்நிலைகள் மற்றும் நீர்வழிப்பாதைகள் வரலாற்று காலம் முதல் கலாச்சார மற்றும் இயற்கையின் சிறப்பம்சமாக கருதப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக நகர்ப்புற வளர்ச்சியின் விளைவால் நீர் ஆதாரங்களின் சுற்றுச்சூழல் வெகுவாக பாதிப்படைந்து வருவதுடன், நீர்நிலைகளுக்கான பாரம்பரிய தொடர்பு, மனிதர்களின் செயலால் பாதிப்படைந்துள்ளது. தமிழ்நாடு அரசு, நீர் நிலைகளுக்குள்ளான இத்தொடர்பினை சீரமைத்திட உறுதி கொண்டு, அனைத்து சார் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றும் பணியை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் மேற்கொண்டு வருகிறது. அரசு, 2014–15 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், நீர்நிலைகள் மற்றும் நீர்வழிப்பாதைகளை பாதுக்காக்க எடுக்கப்பட்ட தீர்மானங்களை முனைப்புடன் செயலாற்ற கூவம், அடையாறு, கொசஸ்தலையாறு, பங்கிங்காம் கால்வாய், பிற சிறு கால்வாய்கள் மற்றும் சென்னை பெரு நகரத்திற்குட்பட்ட நீர்நிலைகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதாக அறிவித்துள்ளது.

அரசு, சென்னை பெருநகரப்பகுதிக்கு உட்பட்ட ஆறுகள் மற்றும் நீர்நிலைகளின் நிலையை கண்டறிந்து, சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள, தேவையான திட்டங்களை தயாரித்தல், ஒருங்கிணைத்தல், நிதி ஆதாரங்களை கண்டறிதல் மற்றும் சீரமைப்பு நடவடிக்கைகளை கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை அறிவுறுத்தியுள்ளது. ஆறுகள் மற்றும் நீர்நிலைகளை சீரமைப்பது என்பது ஒருங்கிணைந்த செயலாகும் என்பதால் அனைத்து சார் துறைகளும் சீரமைப்பு பணிகளில் ஈடுபட அரசு பணித்துள்ளது. மேற்கண்ட இலக்கினை அடைய, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை பல ஆயத்த பணிகளை மேற்கொண்டு வருகிறது.

### அடையாறு கழிமுகப் பகுதியின் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் – முதற்கட்டப்பணி

தமிழ்நாடு அரசு ஈரப்புலங்களை பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் முன்னோடி முயற்சியாக, 358 ஏக்கர் பரப்பினைக் கொண்ட அடையாறு நதியின் முகத்துவாரம் மற்றும் உப்பங்கழியின் சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டத்தை உருவாக்கியுள்ளது. அரசு, இதன் முதற்கட்டமாக, 58 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள அடையாறு உப்பங்கழியினை சீரமைத்துள்ளது.

இச்சுற்றுச்சூழல் பூங்கா, சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக செயல்பட்டு வருகின்றது. சுற்றுச்சூழல் கல்வியினை சமுதாயத்திற்கு, குறிப்பாக பள்ளி மாணவர்களுக்கு அளிப்பதற்காக, சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. 2016ஆம் ஆண்டு ஜூலை, 15–ந் தேதி வரை 769 பள்ளிகளைச் சேர்ந்த 53,961 மாணவர்கள் மற்றும் 3415 ஆசிரியர்கள், இப்பூங்காவில் நடத்தப்பட்டு வரும் சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சியில் பங்கு பெற்று பயனடைந்ததுடன், சுற்றுச்சூழல் சீரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தினை உணர்ந்துள்ளனர். மேலும், தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு கட்டுமான நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) சமூகப் பொறுப்பு நிதியைப் (CSR) பெற்று, அடையாறு பூங்காவில் சுற்றுச்சூழல் கல்வி பணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. எதிர்வரும் காலங்களில், பொதுத்துறை நிறுவனங்களை அணுகி சமூகப் பொறுப்பு நிதியைப் பெற்று, அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவில் நடத்தப்படும் சுற்றுச்சூழல் கல்வி பணிகளுக்கு பயன்படுத்திக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு மற்றும் உயிரின பாதுகாப்பு குறித்து, அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை பொதுமக்கள் உணர்ந்திடும் வகையில் 11.07.2014 அன்று முதல்

ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் ஆர்வமுள்ள பொதுமக்கள் இணையதளம் மூலம் முன்பதிவு செய்து அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவை பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஜூலை, 2014–ஆம் ஆண்டு முதல் 2016–ஆம் ஆண்டு, ஜூலை 15–ந் தேதி வரை, 1800 நபர்கள் அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவை பார்வையிட்டு சென்றுள்ளனர்.

மேலும், இச்சீரமைப்பினால் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை மதிப்பீடு செய்வதற்காக சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்களைக் குறித்த கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நீரின் தன்மை மற்றும் தரம் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் கையேட்டில் குறிப்பிட்டுள்ளபடி, அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவின் நீரின் தன்மை 'வகுப்பு D' பிரிவில் உள்ளது. இத்தன்மையினால் தண்ணீரில் மீன்கள் மற்றும் பிற உயிரினங்கள் வாழ்வதற்கான சூழலை கொண்டுள்ளதால் அடையாறு பூங்காவின் சீரமைப்பு நிலையை மேம்படுத்தும் வகையில் நீரின் தன்மை அமைந்துள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**அடையாறு பூங்காவில் காணப்படும் பல்லுயிரிகள்**

| **பல்லுயிரிகள்** | **2007–2008** | **2009–2010** | **2011–2012** | **2013–2014** | **2014–2015** | **2015–2016** |
|---|---|---|---|---|---|---|
| மெல்லுடலிகள் | – | – | – | 6 | 6 | 6 |
| நண்டுகள் | – | – | 4 | 9 | 9 | 9 |
| தும்பிகள் | – | – | 12 | 15 | 17 | 19 |
| பட்டாம்பூச்சிகள் | – | – | 51 | 55 | 56 | 60 |
| மீன்கள் | 14 | 27 | 27 | 10 | 10 | 6 |
| இருவாழ்விகள் | 7 | 10 | 10 | 10 | 10 | 10 |
| ஊர்வன | 19 | 19 | 19 | 19 | 19 | 19 |
| பறவைகள் | 88 | 90 | 98 | 100 | 97 | 99 |
| பாலூட்டிகள் | 13 | 13 | 13 | 15 | 15 | 16 |
| **மொத்தம்** | **141** | **159** | **234** | **239** | **239** | **244** |

**அடையாறு முகத்துவாரச் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் (300 ஏக்கர்) இரண்டாம் கட்டப்பணி**

சீரமைப்புத் திட்டத்தின் தொடர்ச்சியாக, அரசு அடையாறு முகத்துவாரச் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணிகளை `24.93 கோடி செலவில் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண். 106 நாள் 01.03.2013–ன் படி, அனுமதி வழங்கியுள்ளது. இச்சீரமைப்பு திட்டத்தின் கீழ், குப்பைகள் மற்றும் கட்டடக்கழிவுகளை அகற்றுதல், உப்பங்கழியில் மிதக்கின்ற மட்காத பொருட்கள் மற்றும் சகதிகளை அகற்றுதல், உயிர்

பொறியியல் தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு அடையாறு உப்பங்கழியின் கரைகளை திடப்படுத்தி அடையாறு உப்பங்கழி மற்றும் கழிமுகப் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தினை ஏற்படுத்துதல் போன்ற முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தினை செயல்படுத்திட, மத்திய அரசின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. சீரமைப்பின் தொடக்கப் பணியாக, அடையாறு உப்பங்கழியின் நீர் பரப்பினை அதிகரித்து, ஓதங்களின் தொடர்பை இணைக்கும் வகையில் நெகிழி மற்றும் கட்டடக்கழிவுகளை அகற்றி, உப்பங்கழியில் மிதக்கின்ற மட்காத பொருட்கள் மற்றும் சகதிகள் அப்புறப்படுத்தப்பட்டுவருகிறது. மேலும், முட்புதர்களை அகற்றி, அடையாறு உப்பங்கழியின் கரைகளை திடப்படுத்திட சோழ மண்டல கடற்கரைத் தாவரங்கள் 50,000 மற்றும் 35,000 சதுப்புநில தாவரங்கள் நடும் பணி துவங்கப்பட்டுள்ளது.

இச்சீரமைப்பு பணிகள் வரும் ஆகஸ்டு மாத இறுதிக்குள் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம்

சென்னை ஆவடி அருகேயுள்ள பருத்திப்பட்டு அணையிலிருந்து முகத்துவாரம் வரையிலான (32 கி.மீ) கூவம் நதி பகுதிகளை சீரமைக்க ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாக, கழிவுநீர் கூவம் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவு மேலாண்மை, நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்தி பராமரித்தல், கூவம் நதிக் கரையில் வாழும் மக்களுக்கான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான திட்டமிடல், பல்லுயிர் பெருக்கத்தை மீட்டு சுற்றுச்சூழலை மேம்படுத்தி நகர்ப்புரங்களில் நதியின் கரையோரங்களில் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ளுதல் ஆகும். ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டப் பணிகள் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படவுள்ளது. குறுகிய கால திட்டம் 2014–15 லிருந்து 2016–17 வரை மூன்று ஆண்டுகள் நடைபெறும். இத்திட்டம் அதிக எண்ணிக்கையிலான துணைத்திட்டங்களை கொண்டுள்ளது. குறுகிய கால திட்டப்பணிகளை மேற்கொள்ளவிருக்கும் சார் துறைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, சுமார் 1646.52 கோடி மதிப்பிலான 60

துணைத்திட்டங்களை முன்மொழிந்துள்ளன. குறுகிய கால திட்டப்பணிகளுக்காக `604.77 கோடிக்கான நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இதற்கான துணைத்திட்டங்கள் பொதுப்பணித் துறை, சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையரகம், ஊரக வளர்ச்சி இயக்குநரகம், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆகிய துறைகளின் மூலம் தொடங்கப்பட்டுள்ளது. `604.77 கோடி மதிப்பீட்டிற்கான பணிகளில் `135.38 கோடிக்கு பணிகள் சார்துறைகளால் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் `71.32 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு சார்துறைகளால் பணியாணை வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப் படவுள்ளன. `156.83 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**அடையாறு நதியின் தொடக்கம் முதல் முகத்துவாரம் வரையிலான மூன்றாம் கட்டப்பணியின் பெருந்திட்டம்**

நகரமயமாதல் மற்றும் நகர்ப்புற பகுதிகளின் சுற்றுச்சூழல் நவீனமயமாக்கலின் விளைவாக அடையாறு நதி மாசுப்பட்டு

சீர்கெட்டுள்ளது. ஆகவே, அடையாறு நதியின் தொடக்கம் (ஆதனூர் ஏரி) முதல் முகத்துவாரம் வரை சீரமைக்க வரைவு இறுதி திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது, இதன் முக்கிய கூறுகளாக, கழிவுநீர் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவு மேலாண்மை, நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்தி பராமரித்தல், நகர்ப்புரத்தில் நதியின் கரையோரங்களில் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ளுதல். மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வு பணிகளை மேற்கொள்ளுதல் ஆகும். அடையாறு நதியின் தொடக்கம் முதல் முகத்துவாரம் வரையிலான திட்ட அறிக்கை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் ஒப்புதல் பெற்று, அரசின் நிர்வாக அனுமதி கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**சென்னை பெருநகர பகுதிக்குட்பட்ட நீர்வழிகள் மற்றும் நீர்நிலைகளின் சீரமைப்பிற்கான பெருந்திட்டம்**

சென்னை பெருநகர பகுதிக்குட்பட்ட மாசடைந்த ஏரிகள், குளங்கள், நதிகள் மற்றும் நீர்வழிகளை சீரமைக்கும் நோக்குடன் அரசு, சென்னை பெருநகர பகுதிக்குட்பட்ட 1189 கி.மீ நீளம் கொண்ட நீர்வழிகள் மற்றும் நீர்நிலைகளுக்கான திட்ட அறிக்கை தயாரிக்க சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை அறிவுறுத்தியுள்ளது.

இதன்படி, 280 நீர்நிலைகள் சென்னை பெருநகர பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கான இறுதி அறிக்கை வரும் ஆகஸ்டு மாதத்திற்குள் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**நீர்நிலைகளின் சீரமைப்பு மற்றும் பாதுகாப்பிற்கான விரிவான திட்ட அறிக்கை**

அரசு, சென்னை பெருநகரப் பகுதிக்குட்பட்ட கீழ்காணும் நீர்நிலைகளை சீரமைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது. இதற்கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

<table>
<tr><th>அரசுதுறை/ நிறுவனம்</th><th>நீர்நிலைகளின் பெயர்</th><th>நிலை</th></tr>
<tr><td>பொதுப்பணித்துறை</td><td>மாதவரம், அம்பத்தூர், கொரட்டூர் ஏரி</td><td>சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கதக்க ஆற்றல் நிதி பெறப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>சென்னை மாநகராட்சி</td><td>நாராயணபுரம் ஏரி</td><td rowspan="2">விரிவான திட்ட அறிக்கை சென்னை மாநகராட்சி மற்றும் பல்லாவரம் நகராட்சியிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உலக வங்கி நிதியின் (TNSUDP) கீழ்</td></tr>
<tr><td>பல்லாவரம் நகராட்சி</td><td>ஜமீன் பல்லாவரம் பெரிய ஏரி, கீழ்கட்டளை ஏரி</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | செயல்படுத்தப்பட உள்ளது. |
| சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் | பருத்திப்பட்டு ஏரி, ஆவடி | விரிவான திட்ட அறிக்கை முடிக்கப்பெற்றுள்ளது. |
| சென்னை மாநகராட்சி | காடம்பாக்கம் ஊராட்சி ஏரி, நெசவாளர் நகர் ஏரி | ஆலோசகரால் இடைக்கால அறிக்கை வழங்கப் பட்டுள்ளது. இறுதி அறிக்கை ஆகஸ்டு, 2016 க்குள் எதிர்பார்க்கப்படுகிறது. |
| சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் | கொளத்தூர் ஏரி, வேளச்சேரி ஏரி | |
| சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | நன்மங்கலம் ஏரி,<br>கோவிலம்பாக்கம் ஏரி | |

# 9. தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனமானது (டுபிட்கோ) **21.03.1990** அன்று கம்பெனிகள் சட்டம் **1956**ன் கீழ் நிறுவப்பட்டது. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவி அளித்தல் மற்றும் வழிகாட்டுதல் ஆகியன இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

சீர்மிகு நகரங்கள் திட்டம் (Smart Cities Mission) மற்றும் அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டங்களுக்கு (AMRUT) டுபிட்கோ நிறுவனம் இயக்குனரகமாக செயல்படுகிறது.

மேலும் இந்நிறுவனம் மத்திய, மாநில அரசுகளின் கீழ்கண்ட திட்டங்களை செயல்படுத்தும் முகவரமைப்பாகவும் உள்ளது.

1. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் – நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான

திட்டம் (Jawaharlal Nehru National Urban Renewal Mission – Urban Infrastructure and Governance)

2. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (Urban Infrastructure Development Scheme for Small and Medium Towns)

3. துணை நகரங்களில் நகர்ப்புர அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் (Urban Infrastructure Development Scheme for Satellite Towns)

4. பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (Metropolitan Infrastructure Development Fund)

5. ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (Integrated Urban Development Mission)

மேலும், கேளிக்கை வரி ஈடு செய்யும் நிதி, கல்வி பிணி (நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை), உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு

இடைவெளி நிரப்பும் நிதி ஆகியவற்றிற்கும் தமிழக அரசு டுபிட்கோவை நிதி மேலாளராக நியமித்துள்ளது.

## 9.1. சீர்மிகுநகரத் திட்டம்

பொருளாதார வளர்ச்சிக்காகவும் மற்றும் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காகவும் சீர்மிகு நகரங்கள் எனும் திட்டம் ஜுன் 2015ஆம் ஆண்டு மத்திய அரசின் முன்முயற்சித் திட்டமாக துவக்கப்பட்டது.

இந்தியா முழுவதும் ஐந்து ஆண்டுகளில் 109 சீர்மிகு நகரங்களை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டு அதில் 2015–16 நிதியாண்டில் மட்டும் 20 சீர்மிகு நகரங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் இரண்டாவது நிதி ஆண்டில் (2016–17) 40 சீர்மிகு நகரங்களுக்கு ஒப்புதல் வழங்க உள்ளது. அதற்கடுத்த நிதியாண்டில் (2017–18) மேலும் 49 சீர்மிகு நகரங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில அளவிலான போட்டியின் மூலம் தேர்வு செய்யப்பட்ட அனைத்து 12 மாநகராட்சிகளும் தமிழ்நாடு அரசின் பரிந்துரையின்படி சீர்மிகு நகரங்களாக அறிவிக்கப்பட்டன. மேற்கூறிய 12 மாநகராட்சிகளும் தங்களுடைய சீர்மிகு நகரத்திற்கான கருத்துருவை மத்திய அரசிடம் சமர்பித்தன.

2015–16ஆம் நிதியாண்டில், முதல் சுற்றில் மத்திய அரசு நாடு முழுவதும் உள்ள 20 நகரங்களை தேர்ந்தெடுத்து சீர்மிகு நகரங்களாக அறிவித்துள்ளது. இதில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் கோயம்பத்துார் மாநகராட்சி ஆகியவை முதல் சுற்றில் தேர்ந்தெடுக்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ், பகுதி சார்ந்த மேம்பாட்டு வளர்ச்சி மற்றும் நகர முழுமைக்குமான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சித் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்படும்.

மத்திய அரசின் ஆலோசனைக்கிணங்க, மீதமுள்ள 10 மாநகராட்சிகள் தங்களுடைய சீர்மிகு நகரத்திட்டங்களை மேம்படுத்தி இரண்டாம் கட்ட தேர்வுக்காக மத்திய அரசிடம் சமர்பித்துள்ளன.

## 9.2. அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)

அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்தை (அம்ரூத்) மத்திய அரசு 2015ஆம் ஆண்டு துவக்கியது. இத்திட்டம் கீழ்க்காண்பவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

1. குடிநீர் வசதி

2. கழிவு நீர் வசதி மற்றும் கழிவு நீர் கசடு அகற்றும் மேலாண்மை

3. மழை நீர் வடிகால் வசதி

4. நடந்து செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், பொதுமக்களுக்கான வாகனம் சாராத போக்குவரத்துக்கள் அமைத்தல், வாகனங்களை நிறுத்தும் வசதி அமைத்தல் மற்றும்

5. சிறுவர்களுக்கான பூங்காக்கள், பொழுதுபோக்கு பகுதிகள் உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

தமிழ்நாட்டில் பின்வரும் நகரங்கள் இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

| வ.எண் | உள்ளாட்சியின் பெயர் | வ.எண் | உள்ளாட்சியின் பெயர் |
|---|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி | 15 | தாம்பரம் |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி | 16 | கடலூர் |
| 3 | மதுரை மாநகராட்சி | 17 | காஞ்சிபுரம் |
| 4 | திருச்சி மாநகராட்சி | 18 | ஈரோடு மாநகராட்சி |
| 5 | சேலம் மாநகராட்சி | 19 | திருவண்ணாமலை |
| 6 | திருநெல்வேலி மாநகராட்சி | 20 | கும்பகோணம் |
| 7 | திருப்பூர் மாநகராட்சி | 21 | இராஜபாளையம் |
| 8 | ஆவடி | 22 | புதுக்கோட்டை |

| | | | |
|---|---|---|---|
| 9 | தூத்துக்குடி மாநகராட்சி | 23 | ஓசூர் |
| 10 | நாகர்கோயில் | 24 | ஆம்பூர் |
| 11 | தஞ்சாவூர் மாநகராட்சி | 25 | காரைக்குடி |
| 12 | பல்லவபுரம் | 26 | நாகப்பட்டிணம் |
| 13 | திண்டுக்கல் மாநகராட்சி | 27 | வேளாங்கண்ணி |
| 14 | வேலூர் மாநகராட்சி | 28 | இராமேஸ்வரம் |

**நிதிக்கூறு :**

இத்திட்டத்திற்கு மத்திய, மாநில அரசுகள் கீழ்கண்டவாறு நிதி பங்களிப்பு செய்கின்றன.

| வ எண் | மக்கள் தொகை | மத்திய அரசின் பங்கு – மானியம் | மாநில அரசின் பங்கு – மானியம் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு |
|---|---|---|---|---|
| 1 | 10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள் | 33.33% | 20% | 46.67% |
| 2 | 10 இலட்சத்திற்கு கீழ் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள் | 50% | 20% | 30% |
| 3 | பசுமை பகுதி அமைத்தல் (அனைத்து அம்ரூத் நகரங்கள்) | 50% | 20% | 30% |

அம்ரூத் திட்டத்திலுள்ள அனைத்து நகரங்களும் தங்களுடைய நகர்ப்புர சேவைகளின் தரத்தினை முழு அளவில் மேம்படுத்துவதற்கான திட்டத்தை (Service Level Improvement Plan) `**50013** கோடி மதிப்பீட்டில் வழிகாட்டு நெறிமுறைகளின்படி தயாரித்துள்ளன.

**அ) மாநில ஆண்டு செயல் திட்டம் (SAAP) 2015–16**

**2015–16**ஆம் ஆண்டுக்கான மாநில ஆண்டு செயல் திட்டமானது, மத்திய அரசின் பங்கு தொகையான `**1374.31** கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**ஆ) மாநில ஆண்டு செயல் திட்டம் (SAAP) 2016–17**

**2016–17** நிதியாண்டில் அம்ரூத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு `**1582.80** கோடி ஒதுக்கியுள்ளது. தமிழக அரசு, `**3834.49** கோடி மதிப்பீட்டில் மாநில ஆண்டு செயல் திட்டத்தை தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலை பெற்றுள்ளது.

## 9.3. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் (JnNURM) நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான திட்டம் (UIG)

இத்திட்டத்தின் கீழ், 2005 முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான 9 ஆண்டு காலத்தில் தமிழகத்தில் 3 திட்ட செயலாக்க மாநகரங்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

மத்திய அரசு இந்த துணை திட்டத்தின்மூலம் `5250.15 கோடியில் 48 திட்டங்களை செயல்படுத்த ஒப்புதல் வழங்கியது.

(` கோடியில்)

| மாநகரங்களின் பெயர்கள் | திட்டங்களின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | நகர்ப்புர உள்ளாட்சி / தன்னாட்சி அமைப்புகளின் பங்கு |
|---|---|---|---|---|---|
| சென்னை | 35 | 3585.43 | 1294.40 | 533.42 | 1757.61 |
| மதுரை | 8 | 838.52 | 419.26 | 167.70 | 251.56 |
| கோயம்புத்தூர் | 5 | 826.20 | 413.10 | 165.24 | 247.86 |
| **மொத்தம்** | **48** | **5250.15** | **2126.76** | **866.36** | **2257.03** |

இத்துணைத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் பெறப்பட்ட 48 திட்டங்களில், 31 திட்டங்கள் நிறைவுற்றன. மீதமுள்ள 17 திட்டங்கள் பல்வேறு நிலையில் செயலாக்கத்தில் உள்ளன.

**இடைப்பட்ட காலத் திட்டங்கள் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்திற்கும் புதிய திட்டத்திற்கும் இடைப்பட்ட கால திட்டம்)**

நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான துணைத்திட்டத்தின் கீழ் `867.83 கோடியிலான 17 திட்டங்களுக்கு மத்திய அரசு இடைப்பட்ட காலத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்ட 17 திட்டங்களில், 14 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன மற்றும் 3 திட்டங்கள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

## 9.4. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT)

இத்திட்டத்தின் நோக்கமானது நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான திட்டத்தின் கீழ் வரும் 67 நகரங்கள் தவிர மற்ற அனைத்து நகரங்களின் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதாகும். இத்துணைத்திட்டத்தின் மூலம் `882.73 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்ட 122 திட்டங்களில், 116

திட்டங்கள் நிறைவுற்றன. மீதமுள்ள 6 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன.

**இடைப்பட்ட காலத் திட்டங்கள் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்திற்கும் புதிய திட்டத்திற்கும் இடைப்பட்ட கால திட்டம்)**

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு, இடைப்பட்ட காலத்தில் 13 திட்டங்களுக்கு `507.41 கோடியில் ஒப்புதல் வழங்கியுள்ளது. ஒப்புதல் பெறப்பட்ட 13 திட்டங்களில், 12 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான நிலத்தை ஜோலார்பேட்டை நகராட்சி தேர்வு செய்யவேண்டி உள்ளது.

## 9.5. துணை நகரங்களில் நகர்ப்புர அடிப்படை வசதி மேம்பாடு (UIDSST)

“துணை நகரங்களில் நகர்ப்புர அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டமானது பெரிய மாநகரங்களின் அருகேயுள்ள துணை நகரங்களில் நகர்ப்புர அடிப்படை வசதி உருவாக்குவதற்கான ஒரு திட்டமாக மத்திய அரசு துவக்கியது. இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி

தேர்வு செய்யப்பட்டது. கீழ்காணும் மூன்று திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**(` கோடியில்)**

| வ. எண். | திட்டத்தின்பெயர் | திட்ட மதிப்பீடு |
|---|---|---|
| 1. | குடிநீர் வழங்கல் | 40.71 |
| 2. | பாதாளச் சாக்கடை | 56.22 |
| 3. | திடக்கழிவு மேலாண்மை | 4.43 |
| | **மொத்தம்** | **101.36** |

மேற்காணும் மூன்று திட்டங்களில், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் நிறைவு பெற்றுள்ளது. மீதமுள்ள இரண்டு திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன.

## 9.6. பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதி (MIDF)

டுபிட்கோ, பெருநகரத் திட்டத்தின் மூலம் சுழற்சி நிதியாக `1852.07 கோடி உருவாக்கியுள்ளது. இது பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான மூலதன நிதியாகும். இத்திட்டத்தின் நோக்கமானது சென்னை பெருநகரப் பகுதிகளுக்கு (அதனைச் சுற்றியுள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதிகள் உட்பட) உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நிதி உதவி செய்வதாகும்.

இத்திட்டத்தின் கீழ் `4342.65 கோடி மதிப்பீட்டிலான 34 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதியின் பங்கு தொகை `1141.82 கோடியாகும். ஒப்புதல் வழங்கப்பட்ட 34 திட்டங்களில், 19 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன. எஞ்சியுள்ள 15 திட்டங்கள் பணி முன்னேற்ற நிலையில் உள்ளன.

## 9.7. டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நிதியளிக்கும் பொருட்டு டுபிட்கோ, உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் என்னும் திட்டத்தை உருவாக்கியது. டுபிட்கோ நிறுவனத்தின் பங்கு மூலதனம், சேமநிதி, உபரிநிதி மற்றும் வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன் ஆகியவை இத்திட்டத்திற்கான நிதி ஆதாரமாகும்.

இத்திட்டத்தின்கீழ் `260.24 கோடி மதிப்பீட்டிலான கீழ்காணும் 5 திட்டங்கள் 2015–16 ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டன.

(` கோடியில்)

| வ. எண் | பெயர் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டத்தின் கீழ் கடன் தொகை | நகர்ப்புர உள்ளாட்சியின் பங்கு |
|---|---|---|---|---|---|
| 1 | பொள்ளாச்சி | காந்தி வாரச் சந்தையில் மொத்த விற்பனை நிலையம் கட்டுதல் | 3.00 | 2.50 | 0.50 |
| 2 | கோயம்பத்துார் | சேதமடைந்த சாலைகள் சீரமைத்தல் | 44.07 | 39.66 | 4.41 |
| 3 | திருப்பூர் | சேதமடைந்த சாலைகள் சீரமைத்தல் | 52.17 | 46.95 | 5.22 |
| 4 | ஈரோடு | சேதமடைந்த சாலைகள் சீரமைத்தல் | 86.53 | 77.88 | 8.65 |
| 5 | சேலம் | சேதமடைந்த சாலைகள் சீரமைத்தல் | 74.47 | 67.02 | 7.45 |
| | | **மொத்தம்** | **260.24** | **234.01** | **26.23** |

## 9.8. ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (IUDM)

மாநில அரசு “ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்” என்னும் முன்னோடித் திட்டத்தை 2011–ஆம் ஆண்டு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக துவக்கியது.

**ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்கள்**

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பின் தேவைக்காக (முழு நிதி/ பகுதி நிதி), `10773.22 கோடி மதிப்பீட்டிலான 13445 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டன. இதன் விவரங்கள் பின்வருமாறு :–

(` கோடியில்)

| திட்டப்பணிகள் | மொத்த திட்டங்கள் | திட்ட மதிப்பீடு | பிற திட்டங்களின் நிதி / உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு | IUDM பங்கு |
|---|---|---|---|---|
| குடிநீர் வழங்கல் | 1061 | 3900.83 | 2558.47 | 1342.36 |
| பாதாளசாக்கடை | 66 | 4589.96 | 3587.92 | 1002.04 |
| சாலைகள் | 3713 | 923.13 | 82.51 | 840.62 |
| மழைநீர் வடிகால் | 2078 | 366.42 | 63.24 | 303.18 |
| திடக்கழிவு மேலாண்மை | 1091 | 231.3 | 4.93 | 226.37 |
| தெரு விளக்குகள் | 2963 | 551.8 | 315.87 | 235.93 |
| திறந்தவெளி மலம் கழித்தலை ஒழிக்கும் திட்டம் | 2066 | 160.1 | 105.65 | 54.45 |
| மற்றவைகள் | 407 | 49.68 | 6.44 | 43.24 |
| **மொத்தம்** | **13445** | **10773.22** | **6725.03** | **4048.19** |

ஒப்புதல் வழங்கப்பட்ட **13445** திட்டங்களில் **12350** திட்டங்கள் நிறைவுற்றுள்ளன. எஞ்சிய திட்டங்கள் செயலாக்கத்தின் பல்வேறு நிலையில் உள்ளன.

## 9.9. அரசு திட்டப் பணிகளுக்கான நிதி மேலாண்மை

தமிழக அரசு, கேளிக்கை வரி ஈடு செய்யும் நிதி, கல்வி நிதி (நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை), உட்கட்டமைப்பு இடைவெளியை நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளியை நிரப்பும் நிதி போன்ற திட்டங்களை மாநிலத்தில் உள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பொருட்டு ஏற்படுத்தியது.

இத்திட்டங்களுக்கு டுபிட்கோ நிறுவனத்தை தமிழக அரசு நிதி மேலாளராக நியமித்துள்ளது. **2015–16** ஆண்டில், உட்கட்டமைப்பு இடைவெளியை நிரப்பும் நிதி யின் கீழ் (IGFF) **`234.45** கோடி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளியை நிரப்பும் நிதியின் கீழ் (O&MGFF) **`104.42** கோடியும் விடுவிக்கப்பட்டது.

## 10. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்

நாட்டிலேயே முதன் முறையாக திருப்பூரில், பொது மக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பின் மூலம் திருப்பூர் நகராட்சி, அதன் சுற்றுப்புற பகுதிகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு, நீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு, முன்னாள் திருப்பூர் நகராட்சி (தற்போது மாநகராட்சி) மற்றும் சிறப்பு நோக்கு நிறுவனமாகத் துவக்கப்பட்ட புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றுடன் சலுகை ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொண்டுள்ளது. முக்கியமாக திருப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள உள்ளாடை மற்றும் அதனைச் சார்ந்த தொழிற்சாலைகளின் நீர் தேவையை நிறைவு செய்யும் திட்டமான 185 MLD நீர் திட்டத்தை அமலாக்குவது இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும். **இத்திட்டத்திற்கான அடிக்கல் 20.06.2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நாட்டப்பட்டு, திட்டப் பணிகள் முடிவடைந்து, பிப்ரவரி 2006ல் இத்திட்டம், பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.**

இத்திட்டத்திற்கான செலவு தொகை `1023 கோடியாகும். 15 நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட அசல் சமபங்கு தொகை

`322.70 கோடியாகும் மற்றும் **19** நிதிநிறுவனங்கள் மூத்த கடனாக அளித்த தொகை `**613.80** கோடியாகும் மற்றும் இரண்டாம் தர கடனாக அளித்த தொகை `**86.50** கோடியாகும் .

திருப்பூர் மாநகராட்சியின் குடிநீர் தேவை, இத்திட்டத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது (சுமார் **38.2** MLD), மற்றும் **8** ஊராட்சிகள் மற்றும் **5** வழியோர ஒன்றியங்களுக்குட்பட்ட சுமார் **600** கிராமப்புற குடியிருப்புகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றன (சுமார் 17 MLD). இத்திட்டத்தின் மூலம் திருப்பூர் மாநகராட்சியின் பெரும்பாலான பகுதிகளில் பாதாள கழிவுநீர் அகற்றும் வசதியும் நிறைவேற்றப்பட்டு, செயல்பட்டு வருகிறது. **15246** பாதாள கழிவுநீர் இணைப்புகள் மூலம் பெறப்படும் சுமார் 7 MLD கழிவுநீர் தற்போது சுத்திகரிக்கப்படுகிறது. மேலும், திருப்பூர் மாநகராட்சியில் உள்ள நகர்ப்புற ஏழை மக்களுக்கு குறைந்த செலவில் கழிப்பறை வசதிகள் (31 சுகாதார வளாகங்கள்) செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

சென்னை உயர்நீதிமன்ற ஆணை நாள் **31.01.2011**ன்படி பல்வேறு சாய தொழிற்சாலைகள் மூடப்பட்டதாலும் தண்ணீரை மறு உபயோகம் செய்வதற்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு

வசதிகள் கொண்டுவரப்பட்டதாலும், திருப்பூர் மாவட்டத்தில் தொழிற்சாலைகளுக்கு தேவையான தண்ணீரின் அளவு பிப்ரவரி 2011 முதல் வெகுவாக குறைந்துவிட்டது. இருப்பினும், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் திருப்பூர் மாநகராட்சி, ஊராட்சிகள் மற்றும் வழியோர கிராமங்கள் ஆகியவற்றிலுள்ள மக்களுக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகிறது.

திருப்பூரிலுள்ள தொழிற்சாலைகள் தண்ணீரை குறைந்த அளவில் நுகர்வு செய்வதால், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்திற்கு ஏற்பட்டுள்ள நிதிப்பற்றாக்குறை நிலமை கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் மூலம் சமாளிக்கப்பட்டது. அதன்படி கடனுதவி செய்த நிதிநிறுவனங்கள் கடனை மறு பரிசீலனை செய்து, கடனுக்கான வட்டி விகிதத்தை குறைத்தும், 15% கடன் தொகையினை சமபங்குகளாக மாற்றியும், மேலும் அரசாங்கம் கூடுதலாக நாள் ஒன்றிற்கு 100 மில்லியன் லிட்டர் வரை குடிநீரை வீட்டு உபயோகத்திற்காக இந்நிறுவனம் மூலம் வாங்கிக் கொள்ளவும் வழிமுறைகள் செய்யப்பட்டன. தற்சமயம் இந்நிறுவனத்தின் மூலம் நாள் ஒன்றிற்கு 54 மில்லியன் லிட்டர் குடிநீரை திருப்பூர் மாநகராட்சிக்கு கூடுதலாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் அரசாங்கம் `150 கோடி சமபங்குகளை உள்முதலீடு செய்வதற்காக ஒப்புதல் அளித்தது.

தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்திற்கு திருப்பூர் உட்கட்டமைப்பு பகுதிக்கு வெளியே அமைந்துள்ள குறிப்பிட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக அமைப்பினை விரிவாக்கம் செய்ய அனுமதி அளித்துள்ளது. அதன்படி, இந்நிறுவனம் திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம் பகுதியிலும், ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை பகுதியிலும், வாடிக்கையாளர்களை அடையாளம் கண்டுள்ளது. மேலும், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூன்று கூட்டுக் குடிநீர் திட்டங்களை ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த ஈரோடு, பெருந்துறை, சென்னிமலை மற்றும் ஊத்துக்குளி யூனியன் பகுதிகளுக்குட்பட்ட 68 கிராம பஞ்சாயத்துக்களைச் சார்ந்த 461 குடியிருப்புகளுக்கு கோணவாய்க்கால், கங்காபுரம், வாவிக்கடை, சரளை, பெருந்துறை, விஜயமங்கலம், பல்லக்கவுண்டம்பாளையம், சர்க்கார்பெரியபாளையம், அக்ரஹாரப்–பெரியபாளையம் ஆகிய இடங்களில் இருந்து குடிநீர் வழங்க திட்டப் பணிகளை நிறைவேற்றியுள்ளது. இதன் மூலம் 9 MLD குடிநீர் கூடுதலாக விநியோகம் செய்யப்படுகிறது.

தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு தற்சமயம் விநியோகத்தில் உள்ள 35 MLD தண்ணீரின் அளவு படிபடியாக அதிகரித்து வருகிறது. தமிழக அரசின் சமபங்கு முதலீடு, திருப்பூர் மாநகராட்சி நாள் ஒன்றிற்கு 50 மில்லியன் லிட்டர்

தண்ணீரை கூடுதலாக வாங்குவது மற்றும் நிறுவனத்தின் சேவை பகுதியை விரிவுபடுத்தி திருப்பூர் உட்கட்டமைப்பு பகுதிக்கு வெளியே அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான ஒப்புதல் அளித்து திட்ட செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் ஆகியவைகள் இந்நிறுவன வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு சாதகமாக அமைந்துள்ளன. இதனால், இந்நிறுவனமானது இப்பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு தனது சேவையை தொடர்ந்து செய்ய இயலும்.

திருப்பூர் மாநகராட்சியில் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்றுவதற்கான வசதிகளை மேலும் மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையையும் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் தயார் செய்து உள்ளது.

# 11. தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம்

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம், இந்திய நிறுவனச் சட்டம், 1956–ன் கீழ் 27.01.2000 அன்று ILFS மற்றும் தமிழ்நாடு அரசால் ஒரு சிறப்பு நோக்க அமைப்பாக உருவாக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் நோக்கம் அரசாங்க அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் முதலீடு செய்து அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களை உருவாக்கி, குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் திட்டங்களை செயல்படுத்துவதும் ஆகும்.

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தால் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டது. இந்நிறுவினத்தின் மொத்த பங்கு முதலீட்டில் 46.15% தமிழக அரசுடையது. இந்நிறுவனம் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தில் முதலீடு செய்வது மட்டுமல்லாமல் மற்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பல்வேறு அமைப்புகளிலும் முதலீடு செய்ய ஆயத்தமாக உள்ளது.

மேலும் இந்நிறுவனத்தின் நோக்கம் அடிப்படை வசதிகளுக்கான முதலீடு மற்றும் வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்துவது மட்டுமல்லாமல் (பொதுவான மற்றும் தனிப்பட்ட முறையில் திட்டங்களை செயல்படுத்துவது உட்பட)

பல்வேறு குடிநீர் விநியோக திட்டங்களை செயல்படுத்துவதாகும். மேலும், கீழ்க்கண்ட பல்வேறு குடிநீர் திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஆலோசனை சேவைகளையும் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம், பொன்னேரி, திருப்போரூர், ஆயக்குடி, கன்னியாகுமரி, வல்லம் மற்றும் தெ.கண்ணனூர் பேரூராட்சிகளுக்கும் மற்றும் தூத்துக்குடி, கோயமுத்தூர், சங்கரன்கோவில் நகராட்சிகளுக்கான திட்ட அறிக்கை சரிபார்த்தல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், போடிநாயக்கனூர், வேலூர், கோயம்புத்தூர், ஈரோடு, ஒசூர் நகராட்சிகளுக்கான குடிநீர் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் பணிக்காகவும் மேலும் IWL நிறுவனத்தில் இருந்து ஜார்கன்ட் மாநிலத்திக்கு உட்பட்ட நகரங்களுக்கு 24x7 குடிநீர் வழங்கல் திட்ட அறிக்கை தயாரித்தல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின்மூலம் பெரும்பாக்கம், நெற்குன்றம், குடபாக்கம் பகுதிகளுக்கு திட்ட அறிக்கை சரிபார்க்கும் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் திருப்பூர் மாவட்டத்திலுள்ள தொழிற்சாலைகளுக்கான ஏழு கூட்டு கழிவுநீர் சுத்தீகரிப்பு நிலையங்களில் (அருள்புரம், ராயபுரம், முருகம்பாளையம், சினனக்கரை, காசிப்பாளையம், குனகல்பாளையம், ச.பெரியபாளையம்) சாயக்கழிவுகளுக்கான கழிவுநீர் சுத்தீகரிப்பு செய்து பூஜ்ஜிய அளவு கழிவு நீர் வெளியேற்ற ஏதுவாக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளைச் செய்து வருகின்றது. தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் சுத்தீகரிப்பு பராமரிப்பு பணிகளில் மிகுந்த அனுபவம் பெற்றுள்ளது.

இந்நிறுவனம் பெற்றுள்ள குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் சுத்தீகரிப்பு பராமரிப்பு பணிகள் செய்வவற்கான அனுபவத்தை சிறந்த முறையில் செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்து, தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம், கீழ்க்கண்ட சேவைகளை செய்யும் நோக்கத்துடன் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- பொது கழிவுநீர் சுத்தீகரிப்பு நிலையங்களின் வளர்ச்சி மற்றும் இயக்குதல்/ பராமரிப்பு செய்வதற்கான தனிச் சேவை மையம்

- கழிவுநீர் உப்புத்தன்மை நீக்கம் மற்றும் கழிவுநீரை மறுஉபயோகம் செய்து தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் வழங்குதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஈரோடு, நாமக்கல், சேலம் மற்றும் கரூர் சார்ந்த ஜவுளித் துணி வெளுத்தல், சாயம் ஏற்றுதல் மற்றும் அவை தொடர்பான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான மறுவாழ்வு திட்டமொன்றை தமிழக சட்டமன்றத்தில் **11.08.2014** அன்று அறிவித்துள்ளார். அதன்படி இந்த 4 மாவட்டங்களில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர ஜவுளித்துணி வெளுத்தல், சாயம் ஏற்றுதல் மற்றும் அவை தொடர்பான தொழில் நிறுவனங்களுக்கு பூஜ்ய கழிவு நீர் வெளியேற்றம் என்ற அடிப்படையில் பொதுவான கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் உடைய ஒருங்கிணைந்த ஜவுளி செயல்முறை பூங்காக்களை நிறுவும் செயல்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு திட்டத்திற்கும் கண்டறியும் ஆய்வு மேற்கொள்வது, விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்வது மற்றும் நிதி தொடர்பான முடிவுகள் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசனை (PMC) / O&M வழங்குதல் ஆகியவற்றிற்கான பொறுப்புகளை தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் ஒரு அறிவுசார்ந்த கூட்டாளி மற்றும் ஜவுளி அமைச்சகத்தின் இந்திய அரசின் 12வது திட்டத்தின் கீழ் ஆறு /கடலில் பூஜ்ஜிய கழிவு நீர் வெளியேற்றும் பொது சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவ IPDS திட்டத்திற்கான பட்டியலிடப்பட்ட ஆலோசனை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், மத்திய அரசின் நமாமி கங்கை திட்டத்தின் மூலம் 5 ஜவுளி துணி நிறுவனத்திற்கும் மற்றும் பொது தோல் பதனிடும் தொழில் கூட்டமைப்பிற்கும் மேலும், ஹரியானா நகர்ப்புற மேம்பாட்டு ஆணையத்தின்மூலம், பானிபட்டில் உள்ள ஜவுளி தொழிற்சாலைகளின் பூஜ்ஜிய கழிவு நீர் வெளியேற்றும் அமைப்புகளை செயல்படுத்தும் நோக்கத்திற்காக தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தை நியமித்துள்ளது. மேலும், உலக வங்கி குழுவின் மூலம் பங்களாதேஷ் கொனபாரி ஜவுளித் துணி தொழிற்சாலைகளின் பூஜ்ஜிய கழிவு நீர் வெளியேற்றும் பணிக்களுக்கான தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் சாத்தியக் கூறுகளுக்கான அறிக்கை தயாரிக்கும் பணிக்காக தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தை நியமித்துள்ளது.

இந்நிறுவனத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளின் மூலமாக ஆண்டு வருவாய் **2014 – 2015** நிதி ஆண்டில் **`12.88** கோடியில் இருந்து **2015–2016** நிதியாண்டில் **`18.89** கோடியாக உயர்ந்துள்ளது**.** மேலும், கலந்தறிதற்குரிய சேவை வாயிலாக கிடைக்கக் கூடிய வருவாய் நிதியாண்டு **2014–2015 `4.11** கோடியில் இருந்து **2015–2016** நிதியாண்டு **`5.16** கோடியாக உயர்ந்துள்ளது**.**

**எஸ். பி. வேலுமணி,**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி
மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்
துறை அமைச்சர்

## கோரிக்கை எண். 34

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## 2016 – 2017–ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

## 2016 – 2017 வரவு செலவு திட்ட மதிப்பீடு

**(` ஆயிரத்தில்)**

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | **6,953,95,79** | **4,590,12,58** | **275,93,62** | **11,820,01,99** |
| மொத்த தொகை சாட்டியது | **3** | **––** | **––** | **3** |

# நிகரச் செலவு

(` ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்பு | | 2014–2015 கணக்குகள் | 2015–2016 திருத்த மதிப்பீடு | 2016–2076 இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2016 – 2017 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2215 | குடிநீர் வழங்கலும் துப்புரவும் | 241,70,89 | 312,93,03 | 319,21,06 | 319,21,06 |
| 2217 | நகர்ப் பகுதி வளர்ச்சி | 991,21,39 | 484,16,61 | 508,46,95 | 603,64,48 |
| 2251 | தலைமைச் செயலகம் – சமூகப் பணிகள் | 7,44,77 | 7,50,69 | 8,41,96 | 8,41,96 |
| 2215 | ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் | 8,09,52 | 8,15,74 | 9,09,74 | 9,26,60 |
| 3475 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் | 9,27,70 | 321,77,51 | 259,13,94 | 259,13,94 |
| 3604 | உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 4,254,59,2 | 4,842,56,62 | 6,112,41,73 | 5,753,73,74 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4215 | குடிநீர் வழங்கல், துப்புரவு குறித்த மூலதனச் செலவு | 1,340,77,38 | 1,104,19,03 | 1,664,12,54 | 1,364,12,54 |
| 4217 | நகர்ப் பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 1,124,10,00 | 2,260,77,02 | 2,956,85,03 | 3,076,00,04 |
| 4515 | ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 117,59,00 | 77,53,00 | 80,00,00 | 50,00,00 |
| 6215 | குடிநீர் வழங்கல் துப்புரவுக்கான கடன்கள் | 63,36,72 | 17,28,54 | 24,63,62 | 24,63,62 |
| 6217 | நகர்ப்பகுதி வளர்ச்சிக்கான கடன்கள் | 272,93,84 | 196,47,00 | 250,00,00 | 250,00,00 |
| 7610 | அரசு பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | -- | 60,00 | 50,00 | 50,00 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | 26,84 | 80,00 | 80,00 | 80,00 |

## கோரிக்கை எண்.34

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – 2016 –2017 திருத்திய வரவு – செலவுத் திட்ட மதிப்பீடு

(` ஆயிரத்தில்) (தொகு. மொத்தம்)

| | துறைத் தலைமை | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 34 01 | தலைமைச் செயலகம் | சாட்டியது | 1 | –– | –– | 1 |
| | | | அனுமதித்தது | 10,56,76 | –. | 50,00 | 11,06,76 |
| 2 | 34 02 | நகராட்சி நிருவாக ஆணையரகம் | சாட்டியது | 1 | –– | –– | 1 |
| | | | அனுமதித்தது | 5,010,52,03 | 3,076,00,05 | 261,00,00 | 8,347,52,08 |
| 3 | 34 03 | பேரூராட்சி இயக்ககம் | சாட்டியது | 1 | –– | –– | 1 |
| | | | அனுமதித்தது | 1,694,91,63 | 50,00,00 | –– | 1,744,91,63 |
| 4 | 34 04 | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் | அனுமதித்தது | 54,01 | 1,232,44,81 | 14,43,62 | 1,247,42,44 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வாரியம் | | | | | |
| | துறைத் தலைமை | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
| 5 | 34 05 | சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் | அனுமதித்தது | 231,95,63 | 231,67,72 | -- | 463,63,35 |
| 6 | 34 06 | தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிறுவனம் | அனுமதித்தது | 5,45,73 | -- | -- | 5,45,73 |
| **மொத்தம்** | | | **சாட்டியது** | **3** | **--** | **--** | **3** |
| | | | **அனுமதித்தது** | **6,953,95,79** | **4,590,12,58** | **275,93,62** | **11,820,01,99** |